# நிஜங்களின் வலி



மு.பஷீர்

செயலாளர்
இலங்கை இலக்கியப் பேரவை

I. kumarathevan

# நிஜங்களின் வலி

(சிறுகதைத் தொகுப்பு)

மு.பஷீர்

வெளியீடு:
மீரா பதிப்பகம்
(55ஆவது வெளியீடு)
191/23 ஹைலெவல் வீதி
கொழும்பு 06
2513336

- நிஜங்களின் வலி
- சிறு கதைகள்
- ஆசிரியர் : மு.பஷீர்
- ஆசிரியர் முகவரி : 121/23 நிவ் றோட்
  கல்லொளுவை
  மினுவாங்கொடை
  தொலைபேசி: 2298759
- பதிப்பு : மீரா பதிப்பகம்
  191/23 ஹைலெவல் வீதி,
  கொழும்பு 06
  தொலைபேசி: 2513336
- முதற் பதிப்பு : 23.05.2005
- அட்டை வடிவமைப்பு : ஆர்.பிரசன்னா
- அச்சிட்டோர் : தரஞ்ஜி பிரின்ட்ஸ்
  நாவின்ன
  மஹரகம
- **விலை** : ரூபா **190/-**

# சமர்ப்பணம்



மனித நேயத் தலைவர்
மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்
அவர்களுக்கு

# முன்னுரை

## எனது பார்வையில் (சிறுகதை) மு. பஷீரின் பங்களிப்பு

**கே.எஸ்.சிவகுமாரன்**

சிறுகதை ஒரு கலை. ப.கோதண்டராமன் எழுதிய அருமையானதொரு விளக்க நூல் இது. நமது அண்மைக்கால எழுத்தாளர்கள், இதனை படித்தார்களோ தெரியவில்லை. தலை சிறந்த சிறுகதைகளைத் தமிழில் தந்த, புதுமைப்பித்தன் கதைகள் பற்றி, மற்றுமொரு சிறந்த எழுத்தாளர் சுந்தர ராமசாமி ஒரு ஆய்வுக் கட்டுரையை ஞானரதம் இதழில், (1970) எழுதியிருந்தார்.

அதில் சிறுகதை, எப்படியிருக்க வேண்டும் என்பதை விளக்கியிருக்கிறார். அதில் இடம்பெறும் முக்கியமான பண்புகள், திறனாய்வு என்றால் என்ன? மணிமேகலை பிரசுரம் 2004, கே.எஸ்.சிவகுமாரன், நூலின் 65-68ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

மேற்கண்டவற்றை ஆதாரமாகக் கொண்டு சிறுகதை பற்றிய எனது பார்வை அமைகிறது. மு.பஷீரின், "நிஜங்களின் வலி" என்ற தொகுப்பில் அதிக கண்டனம் (Criticism) அன்றி, ஆக்கபூர்வமான திறனாய்வாக(Constructive Criticism) உங்களுக்கு அறிமுகப்படுத்த விழைகிறேன்.

நாவல், காவியம், பெருங்கதை போன்றவற்றினின்றும் வேறுபட்டது சிறுகதை. உரைநடையில் சுருக்கமாக அமைந்த விவரணம் அது எனலாம். பல பாத்திரங்கள் குறுக்கிடுவது அபூர்வம். பெரும்பாலும் ஒற்றையுணர்ச்சியே அங்கு பரிவர்த்தனை செய்யப்படும். ஒரேயொரு காட்சியில், அல்லது ஒரே கட்டத்தில் (Phase) இடம்பெறுவதே விரும்பத்தக்கது. காட்சிப் பின்னணியிலும், விவரணையிலும் மிக மிகச் சிக்கனம் தேவை.

பாத்திரங்களின் செயல்களிலேயே பாத்திரத்தன்மை உருவாகிறது. சிறுகதையில், கதை சொல்லப்படுவதற்கு பதிலாக, மனப்பாங்கு, அல்லது மனநிலையே உணர்த்தப் படுகிறது.

மேனாட்டில் பலர் சிறுகதை செம்மையுறப் பங்களித்துள்ளனர். அன்டன் செகோவ், கீ (G) தி, மோப்பஸோன், ஓ ஹென்றி ஆகியோருடன், ஏர்னஸ்ட் ஹெமிங்வே, தொஸ்தோயே வஸ்கி, ஹோர்ஷே லூயி போ, ஜோர்ஜ் லுயிஸ்போர்கஸ், கத்தரின் ஆன் போர்ட்டர், ஈயூடோரா உவைல்டி, அலிஸ் மன்றோ ஆகியோர் முக்கியமானவர்கள்.

இந்திய மொழிகளில், வங்காள, மலையாள, ஹிந்தி, பஞ்சாபி, கன்னட, தெலுங்கு, மராத்தி போன்ற மொழிகளில் அற்புதமான சிறுகதைகள் அறுவடையாயிருக்கின்றன. தமிழில் புதுமைப்பித்தன் முதல், இன்றைய படைப்பாளர்களில் சிலரும், பாராட்டும்படியான படைப்புகளைத் தந்திருக்கிறார்கள்.

எனக்குப் பிடித்த எழுத்தாளர்களுள், புதுமைப்பித்தன், கு.அழகிரிசாமி - சுந்தர ராமசாமி - அசோகமித்திரன் - ஜெயகாந்தன் - நீல பத்மநாபன், கு.ப.ராஜகோபாலன் - ஆதவன் - பிரபஞ்சன் - போன்றோர்களின் படைப்புகள், மானுட நேய அனுபவங்களைத் தருகின்றன.

ஈழத்து எழுத்தாளர் சிலரின் சிறுகதைகள் செம்மையாக அமைந்துள்ளன. ஒரு இருபது எழுத்தாளர் வரை, சிறுகதை என்ற இலக்கிய வகையினுள் அடங்கக் கூடிய படைப்புக்களைத் தந்துள்ளனர். அவர்களுள் என் உணர்வினைத் தொட்டவர்கள்

சட்டநாதன் - சாந்தன் - உமா வரதராஜன் - ரஞ்சகுமார் - கேகாலை கயிலநாதன், ஆனந்தராகவன், எம்.எல்.எம். மன்சூர் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

இனி மு.பஷீர் என்ற படைப்பாளியைப் பற்றிய சிறு விபரங்கள்.

இவரது முதல் தொகுப்பான மீறல்கள் பற்றிய மதிப்புரை எழுதிய (மூன்றாவது மனிதன்) இதழில், சுபாஷினி சிவஞானம், இவரது தலைமுறை இடைவெளி நூல் பற்றிய மதிப்புரை தினகரன் (ஐ.ஏ.காதிர்கான்), இதே நூல் பற்றிய (வீரகேசரி)

அன்னலட்சுமி இராஜதுரை, இதே நூல் பற்றிய (தினக்குரல்) அஷ்ரப் சிஹாப்தீன் ஆகியோர் எழுதிய மதிப்புரைகள், மு. பஷீர் என்ற இலக்கிய சிந்தனாவாதியின், மனிதாபிமான த்தைக் காட்டி நிற்கின்றன.

கலாபூஷணம் என்ற உயர் மட்ட விருதினைப் பெற்றுள்ள மு.பஷீர் பற்றிய முக்கிய விபரங்களை எம்.ஏ.எம்.நிலாம் எழுதிய மல்லிகை, நொவெம்பர் 2003, அட்டைப்பட விளக்கக் குறிப்பிலிருந்து அறிந்து கொள்ளலாம். "நிஜங்களின் வலி" என்ற மு.பஷீரின் தொகுப்பிலே வித்தியாசமான 12 கதைகள் அடங்கியுள்ளன. இவற்றை ஒவ்வொன்றாக எடுத்துப் பகுப்பாய்வு செய்யாமல் பொதுப் பண்புகள் சிலவற்றைப் பார்ப்போம்.

இந்தக் கதைகளை முதற் தடவையாக நான் படித்த போது மகிழ்ச்சியுற்றேன். காரணம், மொழிவளம், விபரிக்கும் ஆற்றல், பிறர் அதிகம் தேர்ந்தெடுக்காத பாத்திரங்கள், சமூக விமர்சனம், யதார்த்தச் சித்தரிப்பு, மனித நேயம் ஆகிய பண்புகள் அடங்கியிருந்தமையே.

இவருடைய கதைகள் பலவற்றை ஆசிரியர் மேலும் சிக்கனமாகக் கையாண்டிருக்கலாம் என்று சொல்லத் தோன்றுகின்றது. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பண்பு கவிதைக்கு மாத்திரமல்ல, சிறுகதைக்கும் பொருந்தும். பஷீர் யாருக்காக, ஏன் எழுதுகின்றார்? என்பதினையும் நாம் மனதிலிருத்த வேண்டும். பஷீர் எழுதுவது, நன்கு படித்த, மத்தியதர வாசகர்களுக்காக அல்ல. அவருக்கு சாதாரண மக்களுக்காக, சில செய்திகளை உணர்ச்சிப் பாங்கில் சொல்ல வேண்டியிருக்கிறது.

சில விபரங்களை நீட்டி முழக்கியும், சிலவற்றை வேறு சிலவற்றுடனும் தொடர்புபடுத்தி எழுத வேண்டிய தேவை அவருக்கிருக்கிறது. இவற்றை நீக்கிவிட்டு, நாம் கதைகளில் ஒன்றி மனம் லயித்தால், பெறும் அனுபவம், நிறைவானதாய் இருக்கும்.

இந்தப் பன்னிரண்டு கதைகளுள் எனக்கு அதிகம் பிடித்த கதை, "பாம்பு மனிதன்". இதனைப் படித்ததும், டி.எச். லோரன்ஸ் எனும் சென்ற நூற்றாண்டு கவிஞனின் பாம்பு (Snake) என்ற கவிதையே ஞாபகத்திற்கு வந்தது. "பாம்பு மனிதன்" கதையை

நான் விபரிக்க விரும்பவில்லை. நீங்களே படித்துப் பாருங்கள். நான் ரசித்த மற்றுமொரு கதை, "மீட்பு". 2005இல் வெளியான இந்தக் கதையின், கட்டுக்கோப்பும், யதார்த்தச் சித்திரிப்பும், சிக்கனமாகவும், நேர்த்தியாகவும் அமைந்துள்ளன.

தொகுப்பின் தலைப்புக்கதையான, "நிஜங்களின் வலி" மலையாளத் தமிழில் சரளமான முறையில் எழுதப்பட்டுள்ளது. சற்று நீண்டுவிட்டாலும் கூட, வெவ்வேறு உணர்ச்சி அலைகளை கதை வீசச் செய்கிறது. நடைச்சித்திர பாணியில் அமைந்த "மைமுன் ஆச்சி" தற்கொலையாளனாக செல்ல வேண்டியவன், தனது முடிவை மாற்றிக் கொள்வது பற்றிய கதை. "கையெட்டும் தூரம்", "இது இவர்கள் உலகம்", "ஒரு யன்னலோர இருக்கை", "அக்னி மழை", "மிருக உத்தி" ஆகிய கதைகளின் மூலம், ஈழத்து சிறுகதை மரபிற்கு புதிதான, வித்தியாசமான மனிதர்களை பஷீர் அறிமுகப்படுத்துகிறார். மு.பஷீரின் எழுத்தாற்றல் (Short Fiction) குறுநாவல்களுக்கு இடங்கொடுப்பவை.

இந்த வடிவப்போக்கில் அவர் எழுதுவது, அவருக்கு இயல்பாய் அமையும். இத்தகைய கதைகளை அவர் தொடர்ந்து எழுதி, நமது அனுபவத்தை விரிவுபடுத்த உதவ வேண்டும். மொத்தத்தில் பஷீரின் திறனாற்றல், இந்தத் தொகுப்பு மூலமும், பதிவு செய்யப்பட்டுள்ளது.

**கே.எஸ்.சிவகுமாரன்**

21, முருகன் இடம்
ஹவ்லொக் வீதி வழியாக
கொழும்பு 06
தொ.பே. - 2587617

# அணிந்துரை

இலக்கியங்கள் மீதும், படைப்பாளிகள் மீதும், எனக்கு ஈர்ப்பும், விருப்பமும் உண்டு. சட்டக் கல்லூரியில் பயிலும் காலத்தில் தமிழ் மன்றச் செயலாளராக இயங்கிய அனுபவமுண்டு. மறைந்த என் தந்தை ஒரு சிறுகதை எழுத்தாளராக அறியப்பட்டிருந்தார். எனது சகோதரர்கள் இருவரும் எழுத்தாளர்கள். நான் இலக்கியக் குடும்பத்தில் பிறந்தவன்.

அவ்வப்போது, ஊடகங்களுக்கு கவிதைகள் எழுதியிருக்கிறேன். மேடைக் கவிதைப் பொழிவுகளில் உற்சாகமாகப் பங்குபற்றியிருக்கிறேன். வாசிப்புப் பழக்கமும், எழுத வேண்டுமென்ற உந்துதலும் நிறையவே இருக்கிறது. அரசியலவாதி இயந்திரத்தனமாய் சதா சுழன்று கொண்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தம். ஆற, அமர ஓரிடத்தில் இருந்து, தொடர்ந்து எழுதுகின்ற சூழல், அந்நியப்பட்டுப் போகிறது.

ஆனபோதிலும் இலக்கியத்தின் மீதான ஆத்மார்ந்த பந்தம், தொடர்ந்தவண்ணமிருக்கிறது. உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மகாநாட்டை, 2002, ஒக்டோபரில் மூன்று தினங்கள் கொழும்பில் மிக விமரிசையாக நடத்தினோம். இலங்கையில் முதன் முறையாக, அரச அனுசரணையோடு, எனது அமைச்சுப் பொறுப்பின் கீழ், அந்த மகாநாடு நடந்தது.

மூத்த இளம் படைப்பாளிகள் 88 பேருக்கு பாராட்டு, பணமுடிப்பு என வழங்கிக் கௌரவித்தோம். பல சான்றோர் புரவலர்களுக்கு, பட்டமளித்து கௌரவித்தோம். இஸ்லாமியத் தமிழ் இலக்கிய நூல்கள் பலவற்றை பிரசுரம் செய்து வெளியிட்டோம். இந் நிகழ்வு இலக்கிய வரலாற்றில் சிறந்த பதிவாகும்.

மு.பஷீர் என்கிற எழுத்தாளருடனான பரிச்சயமும், நெருக்கமும் நீண்ட காலங்களாய் தொடர்பவை. பழகுவதற்கு மிக இனியவரான அவரை, ஒரு ஆத்மசுத்தியுள்ள படைப்பாளியாய் நான் இனங்காண்கிறேன். நண்பர் பஷீரின் எழுத்துக்கள் என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளன. சமூக அவலங்களை நேர்த்தியாய்

வித்தியாசமான வீச்சோடு வெளிப்படுத்துகின்றார்.

பஷீரின் படைப்புகள் வாழ்நிலை யதார்த்தங்களைத் தெளிவாகப் பேசுகின்றது என்றபடியால்தான், அவை நம்மைக் கவருகின்றன. இவரது முதற் தொகுதியான "மீறல்கள்" வெளியீட்டு விழா 1997ஆம் ஆண்டு மினுவாங்கொடையில் நடைபெற்ற போது, அதில் பிரதம அதிதியாய் கலந்து கொண்டேன். இவரது "தலைமுறை இடைவெளி" நூல் வெளியீட்டு விழா, 2003இல் தாருஸ்ஸாமில் நிகழ்ந்த போது, இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தேன்.

அந்த வேலைப்பளு, நெருக்குதல்களிலும் கூட இவரது விழாவில் பிரதம விருந்தினராய் கலந்து கொண்டு சிறப்பித்தது, நான் அவர் மீது கொண்ட அன்பின் அடையாளமே.

"நிஜங்களின் வலி" எனும் இத்தொகுப்பு பஷீரின் படைப்பாளுமையை பறைசாற்றி நிற்கிறது. இந்நூல் வாசகரைப் பெரிதும் உற்சாகப்படுத்தி, உணர்வலைகளை கிளர்ந்தெழச் செய்யும் என்பது திண்ணம். சுடச்சுட ஒளிரும் பொன்போல், இவரது இலக்கிய முயற்சிகள் தொடர்ந்து பிரகாசிக்க என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்!

**ரவூப் ஹக்கீம், எம்.பி.**
தேசியத் தலைவர்,
ஸ்ரீ.ல.முஸ்லிம் காங்கிரஸ்.

# என்னுரை

அன்பிற்கினிய இலக்கிய நெஞ்சங்களே! காலம் தான், எத்தனை அசுர கெதியில் சுழன்றடித்து விரைந்து செல்கிறது. அத்தனை சுழற்சிக்கும், மனிதனால் ஈடுகொடுத்து நின்று பிடிக்க முடிகிறதா? என்பதுதான் இன்றைய பிரச்சினை. இழப்பு, துயரம், அதிர்ச்சி, அனர்த்தம் என்றெல்லாம் சுமைகளின் அழுத்தம் பெருகி, நம் வாழ்வும், இருப்பும், கேள்விக்குறியாகி, பதற்றத்தோடு நகர்கிறது.

தலையிலும், முகத்திலும், படரும் நரை, நமக்கு வயதாகி விட்டது என்று சமிக்ஞையை உணர்த்துகின்றது. வெள்ளை நரை ஒவ்வொருவருக்கும் அகவயப்பட்ட எச்சரிக்கைச் சவால் தான்! நமது இளமையை, எங்கே, எப்போது, தொலைத்தோம்? சட்டென ஞாபகத் தீட்சண்யத்தினுள் சிக்க மறுப்பது சங்கடம் தான்.

சுழன்றடிக்கும் இயந்திர உலகில், இன்று இளமைக்குத் தான், உச்சகட்ட மவுசு, தலைவாரிக்கொள்ளும் போதும், முகத்தை பிளேட் உழும் போதும், நரை பற்றிய கவலை பெரிதாய் அலைக்கழிக்கிறது. பிரசித்தி பெற்ற படைப்பாளர்களில் பலர், மூப்பை அணிந்தவர்களாகவே தோற்றம் தருகிறார்கள். என்றாலும் அவர்கள் மனதளவில் என்றும் இளைஞர்களே! எழுத்தாளன் தன் சிருஷ்டிப் படைப்புகளுக்கு இளரத்தம் பாய்ச்சுபவன். மனித வாழ்வில் அனுபவங்கள் தான், உறுதி மிக்க கவசங்கள்.

அவை தான் படைப்பாக்க வறுமையை, விரட்டி அடிப்பவை. தகழியும், வைக்கம் பஷீரும், புதுமைப்பித்தனும், இன்னும் சிலரும் அதற்கு உதாரண புருஷர்கள். வாழ்வனுபவம் இன்றி, ஒரு படைப்பாளியினால், கலைத்திறன் மிகக் சிருஷ்டியை யதார்த்த பூர்வமாக படைத்து விட முடியாது.

என் பிரிய நெஞ்சங்களே!

என் முன்னைய இரு தொகுதிகளின், என்னுரையிலே, எனது படைப்பாக்கங்கள் குறித்து, சுய விமர்சனங்கள் எதனையும்

நான் செய்தவனல்ல. அவற்றின் சாதக, பாதகங்களை, தேர்ந்த வாசகர்களிடத்திலும், ஆய்வு செய்பவர்களிடத்திலும் விட்டு விட்டேன். அவை குறித்த சிறந்த விமர்சனப் பதிவுகள், என்னைப் பெரிதும் உற்சாகப்படுத்தின. இப்போது அவை பற்றிய எனது உள்ளுணர்வுகளை, உங்களோடு பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

எனது இரு தொகுதிகளான, "மீறல்கள்", "தலைமுறை இடைவெளி" ஆகிய நூல்களுக்கு நீங்கள் காட்டிய கரிசனையில் நெகிழ்ந்து போனேன். இப்போது எனது மூன்றாவது நூலான, "நிஜங்களின் வலி" உங்கள் கைகளில் தவழ்கிறது. உங்களின் பேராதரவு என் பக்கம் எப்போதும் நிலைத்திருக்கும் என்பதில் பூரண நம்பிக்கை கொண்டவனாக நான் இருக்கிறேன். எனது சிருஷ்டிகள் என் சுய வாழ்வனுபவத்திலிருந்து பெயர்ந்தவை. நாட்குறிப்பு எழுதும் பழக்கம் என்றைக்கும் இருந்ததில்லை. நான்கு தசாப்தங்களைத் தாண்டிய நிகழ்வுகள் கூட, என் மனப்பதிவில் இன்னும் அழியாச் சித்திரங்களாக, நிலைத்திருக் கின்றன.

ஒட்டகம் நீரைக் குடித்துச் சேமித்து வைப்பதைப் போல அவற்றை ஒரு தீவிர உள்வாங்கல்களில் சீரணித்திருக்கிறேன். அனுபவ யதார்த்தங்கள், ஆமை ஓட்டிலிருந்து நீளும், தலையினைப் போல், அடிக்கடி எட்டிப் பார்க்கும். தீவிர மன உறுத்தல்களில் உழன்று, படைப்பாக்க முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறேன்.

இத் தொகுப்பிலுள்ள, பாம்பு மனிதன், முஸ்தபா வாத்தியார், கேரளத்து, எர்ணாகுளத்தில், நான் நேரடியாகக் கண்டு பிடித்த மனிதர். பாம்பு வித்தையை வேடிக்கை பார்க்கப் போனதில், அவரெனக்கு, ஆத்மார்த்த நண்பரானார். நூற்றுக்கு எண்பது வீதம், பாம்பு மனிதனை, இலக்கியத்தில், பதிவு செய்ய நான் பெரிதும் சிரமப்பட்டேன். எனது தீவிரத் தேடலின் போது, அவரிடமிருந்து கற்றுக் கொள்ள நிறைய விஷயமிருந்தது. அவர் இல்லத்தில் நட்புணர்வோடு சாப்பிட்டிருக்கிறேன்.

கேரளத்து தமிழக, குக்கிராமத்து மனிதர்கள் பலர் எனக்கு நிறையவே பரீட்சயமானவர்கள். மலையாளிகள் மேசை சாப்பாட்டையே பெரிதும் விரும்புவார்கள். பலவகைக் கறிகளோடு, சுவைத்து உண்பார்கள். சோற்றில் நிறைய ஆணம் ஊற்றி, கையினால் பிசைந்து உருண்டை பிடித்து, அவசர அவசரமாக வாய்க்குள் வீசுவார்கள்.

நான் ஊர் திரும்புவதற்காக அவரிடம் விடைபெறப் போனேன். "உங்கள் பிள்ளைகளுக்கு நான் ஏதாவது பரிசுப்பொருட்கள் தந்தனுப்ப வேண்டுமே" எனக் கவலை தெரிவித்தார். நான் மறுத்துவிட்டு இவ்வாறு கூறினேன். "நீங்கள் என் பிள்ளைகளுக்கு விளையாடப் பாம்புக்குட்டிகளை, பார்சல் செய்து, பரிசாகத் தந்தீர்களென்றால், என்பாடு பெரும் சங்கடமாகிப் போகும்" என்றேன். எனது சிலேடையை ரசித்த முஸ்தபா வாத்தியார், வீரப்பா பாவனையில் தொந்தி குலுங்கக் கடகடவென்று அட்டகாசமாய் சிரித்தார்.

இத்தொகுப்பிலுள்ள "அக்னி மழை" எனது சொந்தக் கிராமத்தை கிடுகிடுக்க வைத்து அதிர்ச்சியூட்டிய உண்மைச் சம்பவம். தமிழ் நாட்டில் தூத்துக்குடிக்குச் சமீபத்தில், சில மாதங்கள், ஆத்தூர் எனும் கிராமத்தில் தங்கியிருந்தேன். இயற்கையெழில் கொண்ட அவ்வூர் என்னை வெகுவாக ஈர்த்தது. முற்றிலும் தமிழ் நாட்டு அனுபவங்களை வைத்து, "மானுஷ்யம், கதையினைப் படைத்தேன். அது 1995ஆம் ஆண்டில், வீரகேசரியிலும், பின்னர் எனது "மீறல்கள்" தொகுப்பிலும், 50வது சுதந்திர பொன்விழா சிறுகதைத் தொகுப்பிலும், இடம்பெற்றது. அப்படைப்பு பல மட்டங்களிலும் விதந்து பேசப்பட்டது.

திருவனந்தபுரத்து மலையாளச் சூழலில் படைக்கப்பட்ட "சிதைவுகள்" கதை, "மீறல்கள்களில்" வெளிவந்தது. மூன்றாவது மனிதன் இதழில், அக்கதை உரத்த பாராட்டுக்குரியதாயிற்று. "தலைமுறை இடைவெளியில்" வெளிவந்த "நிர்ணயம்" முற்றிலும் மருத்துவமனைச் சூழலில், நோயாளிகளின் விசாரமான மன உணர்வுகளால் பின்னப்பட்டது. அக்கதையில் மனம் லயித்த ஒரு பிரபலமான கவிஞர், (தொழில்ரீதியில் டாக்டர்) தொலை பேசியில் உரையாடினார்.

"நீண்ட காலங்களாக அரச மருத்துவமனையில் பணியாற்றிய அனுபவம் எனக்கு நிறைய உண்டு. உங்கள் "நிர்ணயம்" கதை அச்சூழலை நேர்த்தியாகப் படம் பிடிக்கிறது. "இந்த அனுபவங்களை இவ்வளவு யதார்த்தபூர்வமாக எப்படி உள்வாங்கினீர்கள்? எனது பாராட்டுக்கள்!" என்று வியப்பு தெரிவித்தார். "ஜெர்மன் தாத்தா", மிகவும் பிரபலம் வாய்ந்த கவிஞர்கள் இருவர், கலைத்துவமிக்க சிறந்த கதையென, மனம் திறந்து பாராட்டினார்கள்.

வட புலத்தைச் சேர்ந்த புனைகதைத் துறையில் மிகப்பிரசித்தி பெற்ற படைப்பாளி, கோகிலா மகேந்திரன் (நான் நேரடியாக இன்னும் சந்தித்ததில்லை) இவ்வாறு மடல் வரைந்தார்.

"உங்கள் "தலைமுறை இடைவெளி" நூலை முழுக்கப் படித்தேன். மொழி ஆளுமை சிறப்பாக உள்ளது. பிரதேச மண்வாசனையை அளவோடு கலந்து யாரும் ரசித்துப் படிக்கும் வண்ணம், கதைகள் அமைந்துள்ளன. நான் என்ற தன்மையில், நீங்கள் நின்று, கதை சொல்லும் போது, கதைகளில் ஒன்றிப் போவது இலகுவாய் உள்ளது. "தலைமுறை இடைவெளி", "எதிர்பார்ப்பு", "திசைகள்", "பாறைக்குள் ஊற்று", "ஈரம்" ஆகியவை நல்ல கதைகள். மல்லிகையில் உங்கள் கதைகளை அவ்வவ் போது படித்திருக்கிறேன். ஆயினும், தொகுதியினைப் படிக்கும் போது, உங்களை முழுமையாக அறிய முடிகிறது. பாராட்டுக்கள்." (கடிதம் - 15.1.2005)

இவை சக படைப்பாளிகள் எனது படைப்புகள் மீது வைத்த பக்க சார்பற்ற பதிவுகள். இவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்வதின் தாற்பரியம் சுயபுராணம் பேசி, தம்பட்டம் அடிப்பதற்கல்ல! விருதுகள், பட்டங்கள், பரிசுகள் என்பன வெறும் ஊக்குவிப்பு அடையாளங்கள் மட்டுமே இவற்றால் படைப்பாளி மனம் திருப்தி அடைந்துவிட முடியாது. இவற்றையும் தாண்டி அவனது சிருஷ்டிகள், பக்கச்சார்பற்று, திறந்த மனதுடன் பாசாங்கற்று விமர்சிக்கப்படும் போதுதான், உண்மைப் படைப்பாளி உற்சாகமடைய முடியும்.

"நிஜங்களின் வலி" என்ற இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள பன்னிரண்டு கதைகளும், மல்லிகை, தினக்குரல் ஆகிய இதழ்களில் வெளிவந்தவை.

படைப்புக்கள் வெளிவரக் களம் அமைத்துத் தந்த நேசத்திற்குரிய, மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களுக்கும், தினக்குரல் துணையாசிரியை சகோதரி எம்.தேவகௌரி அவர்களுக்கும் அன்பின் நன்றிகள்.

நூலுக்கு காத்திரமான ஒரு முன்னுரையைத் தந்த, பிரபல இலக்கிய விமர்சகர் கே.எஸ்.சிவகுமாரன் அவர்களுக்கு என்றென்றும் என் நன்றிகள் உரித்தாகுக. அழகான அணிந்துரை

நல்கி, நூலுக்குப் பெருமை சேர்த்து, உதவிய நேசத்துக்குரிய, முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர், அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம், எம்.பி. அவர்களுக்கும் நெஞ்சு நிறைந்த நன்றிகள்!

இந்நூல் வெளிவருவதில் மிகுந்த அக்கறை காட்டி உழைத்த கொழும்பு மீரா பதிப்பகத்தினருக்கு என்றும் எனது நன்றிகள் உரித்தானது.

பின் அட்டையில் என்னைப் பதிவு செய்த, பிரபல ஊடகவியலாளர், என் நீண்ட நாளைய உற்ற நண்பர் அல்ஹாஜ் எம்.ஏ.எம். நிலாம் அவர்களுக்கு என் இதய நன்றிகள். இந்நூல் வெளிவர எனக்கு ஒத்தாசை புரிந்த மருமகன் அல்ஹாஜ் எம்.டி.எம்.புஹாரி அவர்களுக்கு இதயபூர்வமான நன்றிகள். எனக்குப் பக்கபலமாக நின்று, ஆலோசனைகள் வழங்கிய என் இலக்கிய சகாக்கள் கவிஞர் மேமன்கவி, பாரதி கலா மன்றத் தலைவர் த.மணி, எழுத்தாளர் லெ.முருகபூபதி ஆகியோருக்கு எனது அன்பினை இத்தால் தெரியப்படுத்து வதோடு, நண்பர்கள், வாசகர்கள், அபிமானிகள், அனைவரையும் மனம் நெகிழ்ந்து நினைவு கூறியவனாக விடைபெறும்

தங்களன்புள்ள
**மு.பஷீர்**

121/23 நிவ் ரோட்
கல்லொளுவை
மினுவாங்கொடை
தொலைபேசி: 2298759

## உள்ளே..........


| | |
|---|---|
| கை எட்டும் தூரம் | 1 |
| பாம்பு மனிதன் | 8 |
| மைமுன் ஆச்சி | 18 |
| குழாயடியும் குறுகுறுக்கும் நினைவுகளும் | 26 |
| தலைப்பிறை | 35 |
| விட்டில் | 41 |
| இது இவர்கள் உலகம் | 48 |
| ஒரு ஜன்னலோர இருக்கை | 55 |
| அக்னி மழை | 62 |
| மிருக உத்தி | 70 |
| மீட்பு | 77 |
| நிஜங்களின் வலி | 83 |

# கை எட்டும் தூரம்

ஒரு பிடிப்பற்ற மனநிலையுடன் நடந்து கொண்டிருந்தான் இவன். ஹிருதயத்தினுள் சில தீர்மானங்கள் உள்ளறைந்து வலுவேறியிருந்தன. இந்தச் சமூகமும், சுயவாழ்வும் கேள்விகளாய் அச்சுறுத்தின என்பது மட்டுமல்ல! ஒவ்வொரு தனிமனித வாழ்வு சார்ந்த காயங்கள், பிறமனிதனது பார்வையில் பெரிதாய் உறைக்கவேயில்லை என்பது யதார்த்தம்.

இயந்திரமயமாகிப்போன மனித மனங்களில் ஈரம் சிறிதுமில்லை.

இன்று-ஒரு தீர்மானம் அடிமனதில் உறுதியாய் பற்றிக் கொண்டுவிட்டது. அனுமானமின்றி, ஆத்ம திருப்தியாய், இந்த உலக ஒட்டுறவுகளிலிருந்து நிரந்தரமாய் நீங்கிவிடும் பிரயத்தனம் இது ஒரு கோழைத்தனமான முடிவென்றா சொன்னீர்கள்? இல்லையில்லை, தன்னையே இரக்கமின்றி தண்டித்துக் கொள்ள விழைபவன் எவ்வாறு கோழையாக இருக்க முடியும்? நிர்ப்பந்தங்கள் தான் வாழ்விடத் தூண்டுகிறது என்றால், தற்கொலைக்கும் நிர்ப்பந்தங்களே காரணமாய் அமைகின்றன.

தன் மீது தானே கொள்ளும் அதீத அதிருப்தி தற்கொலையாகவும், பிறர் மீது கொண்ட வெறுப்பு எங்கும் வன்முறையாக நிகழ்கின்றன. சுகப்பிரசவம் என்று கேள்விப்படு கிறோம். சுகமரணம் என்று என்று எங்கும் எவரையும் அடையாளப் படுத்திவிட முடியுமா? இந்த உலகம் ஏதாவது ஒரு காரண கற்பிதத்தை மரணத்தின் மீது இடுகுறியாய் போட்டுவிடுவதை, மிகச் சாதாரணமாகவே நாம் ஏற்றுவிடுகிறோம். தனக்கோ, பிறருக்கோ தீங்கு செய்யவிழையும் வன்ம உணர்வின் முதற்சரடே துணிச்சலில் தான் பிறக்கிறது.

துணிவின்றி உலகில் எளிதில் செய்யக்கூடிய காரியம் எது தான் இருக்கிறது?

இருந்தென்ன செய்யப்போகிறோம்?

செத்துத்தொலைக்கலாம்.

செத்தென்ன ஆகப்போகிறது?

இருந்து தொலைக்கலாம்.

என்ற கல்யாண்ஜியின் கவிதை வரிகளில் தோய்ந்து குளித்தவன் இவன். அது எப்போதோ - இன்றைய உள்-வெளி, மனஉணர்வு அழுத்தங்களால், கவிதையின் முதல் இரு வரிகளோடு மட்டுமே உடன்பாடு. பல மைல்களைக் கடந்து வந்த போதும் - இடமும் இலக்கும், இன்னும் தொலைவில்தான். புதிய உலகிற்கு போய்ச் சேருவது, என்ற தீர்மானம், உள்மனதில் உரம்பெற்றிருந்த போதிலும், பாச உறவுகளைப் பிரிவது, நினைவின் நெருக்கங்களை நிரந்தரமாக இழப்பது, பிரபஞ்ச ஒட்டுறவுகளை விட்டும் ஓய்ந்து போவது, என்பன அவனுள் நெருடல் தான்.

பூதாகரமிக்க இருப்பைவிட - மரணம் சாசுவதமானது, அழுத்த ஆரவாரங்களற்ற, சுமைகளற்ற மௌன வெளி, மனிதனை ஆட்கொள்வதெனில் - எத்தனை சுகமானது! வாழ்தல், இறத்தல் என்ற இரு முனைகளுக்கும் நடுவில் தத்தளித்துத் துயருறுவது தான் மனித இருப்பின் நிதர்சனங்களோ?

இருபத்தியேழு வயதில் இறகுகளைத் தொலைத்த பறவையின் உபாதையில் மனம் கசிந்து பேதலித்துப் போனான் இவன். காலையில் எழுந்து ஒரு 'கிளாஸ்' நீராகாரம், உள்ளே தள்ளிவிட்டுக் கிளம்பியவன் தான். தேனீர் தயாரிக்க சீனி, தேயிலை, முற்றாகத் தீர்ந்துவிட்ட கவலையில், அம்மா மூலையில் ஒடுங்கிப் போயிருந்தாள். அவற்றையேனும் வாங்கிக் கொடுக்க இயலாத வறுமை நிலையினை எண்ணி மனதிற்குள் கருவினான். பசிக்களைப்பினால் தலைசுற்றிக் கிறுகிறுக்க, கால்கள் சோர்ந்து நடுங்கின. படித்து முடித்து நல்ல சான்றிதழ்களோடு, வேலை தேடிச் சலித்து மூன்று ஆண்டுகள் நடந்து போயின. வேலை எளிதில் கிடைக்காது. கானல் காட்டி மறைந்தது. இந்த பட்ட மரம் இனி தளிர்க்கும் என்பதில் குடும்பத்து நம்பிக்கையும் வரண்டு போனது.

நிகழ்காலமே இருண்டிருக்கையில் எதிர்காலம் பிரகாசிக்கும் என்பதில் இவனுக்கு சிறிதும் நம்பிக்கை பிறக்கவில்லை. அகன்ற பரந்த நெற்றிப் பரப்பு, கூர்த்த விழிகள்,

பெரிய செவிகள், கண்களிலிருந்து கீழ் நோக்கி விரிந்தகன்ற கூர்நாசி, இவை அறிவு ஜீவிகளுக்கான அங்க லட்சணங்கள். இவையனைத்தும் அச்சொட்டாக இவனுக்கு வாய்த்திருந்தும், வாழ்க்கை வசதிகள் ஏன் வசப்படவில்லை?

வசதியும், வாய்ப்பும் சில மந்த புத்திகாரருக்குத் தான் எளிதில் வாய்க்குமோ? ஒரு பக்கம் பிரக்ஞையற்றுப்போய், மூப்பிலும், நோயிலும் விழுந்துகிடக்கும் தந்தை, புஷ்டியான ஆகாரமின்றி சரியான மருத்துவமின்றி, ஆயுளை எண்ணிக் கொண்டிருந்தார் அவர்.

மகன் நம்பிக்கை நீர் வார்ப்பான் என ஆஸ்துமாவிலும், பசியாலும் பொறுமை காக்கும் தாய், முப்பது வயதாகியும், கழுத்து வேலி வந்து விழாமல் சாளரத்தை ஊடமாக்கி, உஷ்ணம் பெருமூச்சுவிடும் சகோதரி, குடும்ப வண்டியின் சக்கரங்கள் கழன்று சுக்கு நூறாகிப் போன இயலாமையில் தவித்து, ஜடமாகிப் போன இவன்.

முட்புதர்கள் வரண்டு நிடக்கும் காட்டில், சூழலோடு ஐக்கியப்பட்டு, வெறுமையோடிக் கிடக்கிறது வெளி. வாழ்வில் எட்ட முடியாத சிகரங்களே, கைநழுவிப் போன பின் - ஏதோவொரு சிகரத்தை எட்டி, உயிரை விட வந்தவன் இவன். மேற்கு மலையின் மீது போதைப் பொருள் அடித்தவனைப் போன்று சோர்ந்துகிடக்கிறான், அந்திச் சூரியன். மேகத்திட்டுக்கள் வானில் மெல்ல மெல்ல அசைந்து நகர்கின்றன. தழைந்து வரும் காற்று முகத்தில் உறைந்து குளிரை விதைக்கின்றது.

உடல் சோர்ந்து சில்லிடுகின்றது. தூரத்தே துண்டு துண்டாய், நீண்டு கிடக்கும் பச்சை வயலகள், அவற்றின் பாதுகாப்பிற்கு வேலியாய் நின்றசையும் கூனற் தென்னைகள். சில்வண்டுகளின் கிறுகிறுத்த சத்தமும், பட்சிகளின் பரிபாஷை ஒலியையும் தவிர வேறு சலனமில்லை. ஜனநடமாட்டமேயின்றி ஏங்கித் தவிக்கும் ஒண்டித் தடங்கள். இவன் மார்பிலிருந்து நீண்ட சுவாசமொன்று நெஞ்சமுழுத்தி வெளியானது. நாவரட்சியினால் தொண்டை வரண்டு போனது.

மலையடிவாரத்தில் தேங்கி நின்ற நீரோடையை பிரியமுடன் பார்த்தான். தேங்கியிருந்த நீரைக் கலக்கி கைகளினால் அள்ளிப் பருகினான். சிறிது முகத்திலும் தெளித்துக்

கொண்டான். என்றுமில்லாத சுகத்தை மேனி அனுபவித்தது. சிறிது உற்சாகம் வந்துவிட்டதாக நினைத்தான். நெஞ்சில் மாறாத ரணங்கள் எரியத் தொடங்கின. எண்ண உணர்வுகளின் கடும் இம்சை, சல்லடை போட்டுத் துளைத்தன. சிறிது காலங்களாக அவனுக்கு தெய்வ நம்பிக்கையும் அற்றுப் போயிருந்தது.

விழிப்புக் கொண்ட அறிவுமனம், சில வேளைகளில், தெய்வ நம்பிக்கையையும், சாதாரணமாக்கிப் பார்ப்பதுண்டு. இவன் பெற்ற தாயை நினைவு கூர்ந்து இறுதியாக விழியோரங்களை ஈரமாக்கிக் கொண்டான். மலை உச்சிக்குச் சென்று, அதள பாதளத்தில் குதித்து, ஜீவனைக் கசக்கி எறிவது என்பது இவனது உறுதிப்பாடு! கீழே நின்று மலை உச்சியை அர்த்தமின்றி வெறித்துப்பார்த்தான். உச்சிக்குப் போனால் வானம் 'மை எட்டும் தூரந்தான்'! ஆகாய வெளி அலட்டலின்றி மௌனம் தரித்தது. மேக அசைவின்றி, வான் பரப்பு சோகத்தில் திளைத்தது.

கீழ்வானில், பறவைகள் ஒரே திசை நோக்கி சிறகடித்துப் பறந்தன. அவை கரும் புள்ளிகளாய் கண்ணை உறுத்தின. மலை மடிப்புகளில் பனிப்புகை படர்ந்து கவிந்திருந்தது. தூரத்தில் நின்று பார்த்தால் மலை யானையின் கறுத்த முதுகினைப் போல் கம்பீரமாகத் தெரிந்தது. மலைப்பாறை எதற்கும் மசியாமல் விறைத்து நின்றது. இரவும், பகலும் பிரிவுச் சோகத்தில் கையைத்துக் கொண்டன. உறவும், பிரிவும் நிலையானதில்லை என்ற தரிசனத்தில் இவன் கொஞ்சம் நெகிழ்ந்து போனான்.

மலையடிவாரத்தை பற்றிப் படித்துக் கொண்டு மேல் நோக்கி ஏறத் தொடங்கினான். மலையின் உச்சி விளிம்பு நீண்டு உயரத்தில் தெரிந்தது. பாறைக்கற்களை இறுகப் பற்றிக் கொண்டு, இன்னும் சிறிது நேரத்தில் எல்லைக்குச் செல்வது சாத்தியமாகலாம். மலையின் இறுகிய மேனியில் ஒரு குழந்தையைப் போன்று உடல் குறுகித் தவழ்ந்து கொண்டிருந்தான்.

தடுக்கி விழுந்துவிடலாம் என்ற முன்னெச்சரிக்கையில், படர்ந்திருந்த காட்டுக் கொடிகளை தாவிப்பிடித்துக் கொண்டான். கிளர்ந்தெழும் உணர்ச்சிக் கொந்தளிப்புகளை அடக்கியாள்வது எச்சந்தர்ப்பத்திலும் எளிதான காரியமல்ல! ஆன போதும், இவன் நிதானமாகவே செயலில் இறங்கினான்.

"ஐயோ!..... ஐயோ! என்னைக் காப்பாத்த ஒருவருமில்லையா.....?"

தீனஸ்வரத்தில் ஒரு அபயக்குரல் காற்றில் கலந்து வந்து இவன் செவிப்புலனை அதிரவைத்தது. ஒரு பெண்ணின் மரண அவலம் கவிந்த கூப்பாடு ஆபத்தொலியாக ஒலித்தது. அந்தக் காட்டுப் பிரதேசமெங்கும் கேட்கும் விதமாக குரல் தேய்ந்தும், உச்சஸ்தாயிலும் அதிர்வலைகளை எழுப்பியது.

இவன் செய்வதறியாது நிலைகுலைந்தான். வந்த காரியத்தை இடைநிறுத்திவிட்டு, குரல் வரும் திக்கை கூர்ந்து செவிமடுத்தான். மூலைக்குள் மின்னல் அதிர்ந்தது. இந்தக் காட்டுக்குள் வேண்டத்தகாத ஒரு கொடிய செயல் நடந்தேறப் போகிறதா? இதையெப்படித் தடுத்து நிறுத்துவது? மரண பயம் கலந்த அக்குரல் மிக அருகாமையிலே ஒலிப்பதாக இவன் உணர்ந்தான்.

இராட்சதக் கிளை பரப்பி இருள் கவிந்து பருத்திருக்கும் காட்டு மரங்களில் அடர்த்தியை விலக்கிக் கொண்டு அந்தக் காட்சி கண்ணில் படுவது சாத்தியமாய் இருக்கவில்லை. ஆளுயரத்திற்கு வளர்ந்திருந்த முள் பற்றைகள் அச்சமூட்டு வதாயிருந்தன. அசுர வேகத்தில் கணங்கள் ஓடி மறையும் முன் - இவன் விழிப்படைந்திருந்தான். துரித வேகத்தில் மரமொன்றைத் தாவிப் பிடித்து உயரத்திற்கு ஏறி, சுற்றுச் சூழலை வெறிகொண்டு நோட்டமிட்டான்.

அந்தக் கொடூரக் காட்சியின் முதற் படலம் ஒரு போராட்டக் களமாக மிகத் துல்லியமாகத் தெரிந்தது. தமிழ் திரைப்படங்களில தினமும் கண்டு சலிப்படைந்து, எள்ளி நகையாடிய காட்சியொன்று தான் இங்கும் அரங்கேற முனைப்பு பெற்று நிற்கின்றது. இரசனைக்காக திரையில் பார்த்த காட்சி இன்று கண்ணுக்கு நேரே நேரிடையாக எதிர்கொள்ள வேண்டி வருமென இவன் ஒரு போதும் நினைத்திருக்கவில்லை.

அடர்ந்த காட்டு மரங்களுக்கு நடுவில் ஒரு வெள்ளைநிற 'வேன்' நிறுத்தப்பட்டிருந்தது. அவ்வாகனத்திற்கு அருகில் 'ஹிப்பி' போன்று முடி வளர்த்த ஒருவன் கலக்கம் கொண்டவனாய் காவல் காத்து நின்றிருந்தான். அதையொட்டிய காட்டுப் பற்றைக்குள் ஒரு இளம் பெண்ணை மற்றவன் பாலியல்

வல்லுறவிற்காய் மூர்க்கத்தனமாக மல்லுக் கட்டிக் கொண்டிருந் தான். வேங்கையின் கொலை வெறிக் கரங்களில் சிக்கிய மான்குட்டியாய் உயிரணுக்கள் துடித்துப் பதற போராடிக் கொண்டிருந்தாள் பெண்.

காட்டுப் பற்றைகளைக் குதறி ஊடுருவிக் களம் இறங்கினான் இவன். கனத்த காட்டுத் தடியொன்று தக்க தருணத்தில் கைக்குச் சிக்கியது. இவனை வாட்டி வதைத்த பசியும், மனப்போராட்டமும் விலகிப் போய் உடலில் யானைப் பலமேறி எதற்கும் துணிவுற்றான். கண் இமைக்கும் நேரத்தில் அவன் மீது பாய்ந்து சிரசைக் குறி வைத்து காட்டுத் தடியினால் அவனை மூர்க்கமாகத் தாக்கினான். எதிர்பாராத தாக்குதலினால் அவ்வெறியன் நிலை குலைந்தான். தலையிலிருந்து குருதிப் பெருக்கெடுக்க, மயக்கமுற்றுத் தரையில் சரிந்தான். இவனுக்கு உதவியாய் வந்த மற்றவனையும் அதிரடித் தாக்குதல் நடத்தி அவனையும் நொருக்கித் தள்ளினான்.

இவனது மனம் வேறு திசையில் இயங்க ஆரம்பித்தது. விரக்தியின் விளிம்புக்கு போயிருந்த இவனது ஆழ்மனதில் தன்னம்பிக்கை துளிர்த்தது. ஆடை கிழிந்து பாதி கேசம் துடிக்க பயத்தினால் நடுநடுங்கிக் கொண்டிருந்த அந்த இளம் பெண்ணை ஈரம் சொரியும் விழிகளால் பார்த்தான். காட்டுப் பாதைகளை ஊடுருவி அவளை அவசரமாக அழைத்துச் சென்றான். அவள் கண்கள் கலங்கியவாறு பேசினாள்.

"நான் ஆடைத் தொழிற்சாலையிலிருந்து வேலை முடிந்து பாதையால் வந்து கொண்டிருந்தேன். இந்த வெறிபிடித்த நாய்கள் என்னைப் பலவந்தமாக வேனுக்குள் இழுத்துப் போட்டு கடத்திக் கொண்டு வந்துவிட்டனர். என்னை மானபங்கப்படுத்திவிட்டு, காட்டுக்குள் கொலை செய்து போட்டு விட்டு வருவது தான் நோக்கம். ஒரு தெய்வம் போல் வந்து என் மானத்தையும், உயிரையும் மீட்டுக் கொடுத்த உங்களை என் நெஞ்சுக்குள் வைத்து பூஜிப்பேன். ஆண்டவன் உங்களைக் கைவிடமாட்டான்."

அவள் நெஞ்சுருகி நன்றி சொன்னாள். பிரதான பாதையை அடைந்ததும், அவளுக்கு ஆறுதல் கூறி விடைபெறுகிறான் இவன்.

"நீ உயிரை மாய்க்கப் பிறந்தவனில்லை. இந்த உலகிற்கு

நீ அவசியப்படுகிறாய். துணிந்து நில். வாழ்வின் மீது நம்பிக்கை கொள்! நீ வாழவேண்டியவன்." அசரீரி போல் அந்தரத்மா அலறியது.

இவன் வாழ்வு பற்றிய புதிய புரிதல்களுடன் வீட்டை நோக்கி நகர்கிறான்.■

- மே 2003

# பாம்பு மனிதன்

உயரக்கிளை பரப்பியிருந்த மரத்தை வெறித்துப் பார்த்தார் முஸ்தபா வாத்தியார். சாய்வு நாற்காலியில் நீட்டி நிமிர்ந்து சரிந்து கிடப்பது அவருக்கு சௌகரியமாக இருந்தது. மனதிற்குள் ஏதோ ஒரு அழுத்தம் இனம் புரியாத நெருடல் விரக்தியாய், வெறுமையாய் மூளைக்குள் கவிந்தன. ஜனமும், மரணமும் மனித வாழ்வின் எல்லைக் கோடுகளா? இடைப்பட்ட ஜீவித இருப்பில் மனிதன் ஒரு சிகரத்தை எட்டிப் பிடித்துச் சாதனை நிகழ்த்த வேண்டாமா? என்பது குறித்து அவருக்கு ஒரு வெறித்தனமான உடன்பாடு இருந்தது.

நரம்புகள் தளர்ந்து இளமை வற்றிய அறுபது வயதிலா பெரிய சாதனை? உள்மனதிலிருந்து நியாயமான வினாவொன்று இடறிக்கொண்டு வந்தது. உலகின் பெரும் சாதனையாளர் உச்சத்தை எட்டிப் பிடிக்கையில் அரை நூற்றாண்டைத் தாண்டியிருந்தார்கள் என்பது வரலாற்றுத் தகவல். மனிதன் மூப்பில் தள்ளப்படும் போது மனம் ஏன் விடாக்கொண்டனாய் இளமையை நினைத்து ஏங்குகின்றது. முஸ்தபா வாத்தியார் ஓய்வு பெற்ற ஆசிரியர். குடும்பச் சுமைகளில் இருந்து அந்நியப்பட்டவர்.

நிறையப் புத்தகங்கள் படிக்கும் படிப்பாளி. இன்னும் படைப்பாளி ஆகிவிடவில்லை. ஓய்வூதியப் பணம் என்று மட்டுமல்லாது, மனிதன் வசதியோடு தான் வாழ்கிறார். வயல், கடை, விவசாயமென அன்றாட வாழ்வு ஆரோக்கியமாகவே சுழல்கிறது. இந்தக் கிராமத்தின் இனிய சூழல் மீது அவருக்குத் தனி ஈடுபாடு.

ஒரு ஆறு மாதங்களிருக்கும். இந்தப் பத்தேக்கர் காணியையும், அதனோடிருந்த பழங்கால வீடொன்றையும், மலிவு விலைக்கு வாங்கிப் போட்டார். இவருக்கு நான்கு வாரிசுகள். ஓர் ஆணும், மூன்று பெண் பிள்ளைகளும். மணமாகி ஆளுக்கொரு திக்கில், வசதிகளோடு தான் வாழ்க்கை. அவர்கள் ஓய்வு கிட்டும் பொழுதுகளில் இங்கு வந்து தந்தையைத் தரிசித்துவிட்டு, நேசம் சொரிந்து பின் போய்விடுவார்கள்.

முஸ்தபா வாத்தியாருக்கு இந்தக் காரை பெயர்த்த வீடும், காட்டுத் தோப்பும் நிம்மதியை அளித்தன. என்றாலும் ஒரு குறை இருக்கத்தான் செய்தது. மனைவி தன்கூடவே இருக்காமல் மகள் வீடே கதியெனப் பிரிந்து வாழ்வது தான். எப்போதாவது அவள் அபூர்வமாக இங்கு வந்து தங்கி, பின்னர் போய்விடுவாள். அவளுக்கு மகள், பேரக்குழந்தையென நகர வாழ்வு நன்றாய் பிடித்துப் போய்விட்டது.

அறுபதுக்கு மேல் தாம்பத்திய உறவுகள் நீர்த்து வீரியமிழந்து போவது நடைமுறை வாழ்வின் யதார்த்தம். எனவே, அது பற்றிய அலட்டல்கள் இருவருக்குமே இல்லை என்பதால், பிரிந்திருப்பது ஒன்றும் பிரச்சனையாய் இல்லை. தனது இளமைக்கால வாழ்வை பல பொழுதுகளில் பின் நோக்கிப் பார்த்து, தனக்குள் பெருமிதம் கொள்வார். மூத்த மகன் பைரூஸ் இராணுவத்தில் உயர் அதிகாரி. ஒரு மகள் மகளிர் கல்லூரி அதிபர். மற்ற இரு மகள்களின் கணவன்மார்கள் கொழும்பில் கொழுத்த வர்த்தகர்கள்.

பரீத் என்னும் பணியாள் இவரிடம் நீண்ட காலங்களாகப் பணிபுரிந்து வருகிறான். கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து உதவிகள் புரியும் அவன் ஒரு தீவிர எஜமான விசுவாசி. காற்றில் குலுங்கிச் சிலிர்த்து தலையசைக்கும் தோட்டத்து மரங்களைக் கூர்ந்து பார்த்தார் முஸ்தபா வாத்தியார். கிளைகளில் படர்ந்த அணில்களும், பட்சிகளும் ஒன்றையொன்று துரத்திப் பிடித்து கண்ணாம்பூச்சி விளையாடின.

இக்காட்சி அவரது இளமைக்கால குறுகுறுத்த அனுபவங்களை பெயர்த்து வந்த ஞாபக இழைகளில் இனிமை சேர்த்தன. யௌவனம் மனித வாழ்வின் சக்திவாய்ந்த ஒரு மையம். அது மீண்டும் வந்து கிடைக்கவா போகிறது? தீவிர சிந்தனைச் சிதறலில் புலன்கள் தடுமாறின. எதைச் சாதிக்கலாம்? என்ற உள்ளணர்வில் மனம் கிடந்து துடித்தது.

இலக்கியம், தொழில் முயற்சி, கல்வித்துறை, இவற்றில் ஏதாவது ஒன்றில் ஈடுபட்டு, உயர் சாதனை புரியலாமா? இல்லை! பிறரை வியப்பிலாழ்த்தும், புதிய தடமொன்றைக் கண்டு பிடித்தாக வேண்டும். இறுதியாக எதைத் தேர்ந்தெடுப்பது என்பதில் சிக்கல் இருந்தது. தீர்க்கமாக ஒன்றை நிர்ணயித்து களமிறங்க வேண்டும் என்ற வேட்கை உந்தி எழுந்தது. காற்றின் சுக விகசிப்பில் அவர் சிறிது கண்ணயர்ந்தார்.

"மாஸ்டர், ஓடி வாங்க, பாம்பு! பாம்பு!!" பரீதின் கூக்குரல் கேட்டு திடுக்குற்றார். விரைந்தோடி வந்தவருக்கு கண்ணெதிரில் ஆச்சரியம் காத்திருந்தது.

பற்றைக்கருகில் சரசரத்துச் சீறியெழுந்து படமெடுத்தாடியது சர்ப்பம். தேகாந்திரமெங்கும் உதறலெடுக்க பீதியால் உறைந்து நின்றார் அவர். அதன் தீவிர அசைவுகளை அச்சத்துடன் விலகி நின்று அவதானித்தார். கோடை வெய்யிலின் உக்கிர வெப்பம் சூழலைச் சுட்டெரித்தது. மரநிழல்கள் சலனமின்றி மரணித்துக் கிடந்தன. பாம்பை அடித்துக் கொல்லும் மனம் எளிதில் வரவில்லை.

இறைவன் படைத்த உயிர்ப்பிராணி. இம்சித்தல் ஆகாது என்னும் தத்துவ விசாரணை மேலோங்கியது. சர்ப்பம் அந்தப் பகல் பொழுதைப் பயங்கரமாக்கிக் கொண்டிருந்தது. அதன் தீவிர சுழற்சியினை ஒரு பயங்கலந்த பரவச உணர்வோடு உற்று நோக்கினார். சிரசில் ஓவியம் வரைந்ததைப் போன்று சரிந்து வளைந்து தெரிந்த படம்.

இரப்பர் துண்டாய் நீண்டு வெளியே கிடந்து அலைபாயும் சாம்பல் நிற நாவு. சடைத்துத் திரண்ட மேனியில் துண்டு துண்டாய் மின்னிப் பளபளக்கும் வழுவழுப்பான செதில்கள். சீதளக் குளிர்ச்சி கூர்த்தவிழிப்பார்வை காற்றொலியோடு போட்டி போட்டுக் கொண்டு பிரவகிக்கும் மூச்சின் சீறலோசை!

கண்களில் குடிகொண்டிருக்கும் தீட்சண்யத்தில் இமைக்காது தலையசைத்துச் சூழலும் கம்பீத் தோற்றம். எது வந்தாலும் ஒரு எச்சரிக்கை! பீதியூட்டும் பாவனை. எக்காளமும் திண்மையும் திரண்டுகிறங்கிய வியாபகமும். முஸ்தபா வாத்தியார் அசந்து போனார்.

சர்ப்பம் எத்தனை கலைத்துவமான அழகியல் வடிவம்? அற்புதம் நிகழ்த்திக் காட்டும். ஒரு அழகிய தேவதையின் திடீர் பிரவேசத்தில் சித்தம் தடுமாறிப் போன உபாசகனாய் அவர் நெகிழ்ந்து போனார். ஒரு பெரிய தடியோடு பாம்பை அடித்துக் கொல்லும். ஆவேசத்தோடு விரைந்து வந்தான் பரீத். அவர் கையுயர்த்திக் காட்டி, அடிக்க வேண்டாமென தடுத்து நிறுத்தினார். ஒரு தீவிர அகிம்சாவாதியைப் போல-

அவரின் இந்த நடவடிக்கை பரீதுக்கு பெரும் வியப்பை

அளித்தது. சூழ்நிலையின் தாக்கத்தைப் புரிந்து கொண்ட சர்ப்பம். அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தயாரானது. போர்க்களத்தில் எதிர்விளைவுகள் காட்டமாயில்லை என ஊர்ஜிதம் செய்து நிர்ணயித்த பின் ஒருவித சமரசப் பாவனையில் அது தலை தாழ்த்தி தரையைத் தழுவியது.

கணங்கள் விரைந்திடும் முன் சலசலத்துப் புற்களிடையே மெல்ல ஊர்ந்து மறைந்தது. இரவு அவருக்கு சிறிதும் உறக்கம் வரவில்லை. பாம்பு பற்றிய கற்பிதங்கள் பயங்கர நினைவுகளாய் நெஞ்சில் நர்த்தனமாடின. சர்ப்பங்களோடு மனிதன் ஆபத்தின்றி உறவு கொள்ள இயலாதா? தனக்குள் நீண்டதொரு மனச்சமர் புரிந்து பார்த்தார். மதங்கள் ஆயிரம் நன்னெறிகளைப் பகரலாம் அடிப்படையில் மனிதனும் ஒரு பயங்கர விலங்கு தான். அதனதன் இயல்பில் எதுதான் குரூரமாயில்லை?

எறும்பு கூட மனிதனைக் கடிக்கும் என்பது யதார்த்தமாய் இருக்கும் போது எருமை முட்டித் தள்ளிவிடாது என்பது என்ன நிச்சயம்? எப்படியும் பாம்பை வசப்படுத்தியாக வேண்டும். அதன் மூலம் ஒரு புதிய சாதனையை உலகிற்கு நிகழ்த்திக் காட்ட வேண்டும்.

இது ஒரு பயங்கரச் சவால் இல்லையா? மரணம் பற்றிய பீதியிருந்தால் எப்படிச் சிகரங்களை எட்ட முடியும்? உயிர்ச்சரடினை கிழித்தெறியும் கோர விஷம் சர்ப்பத்தின் கொடுக்குப் பல்லில் குவிந்து கிடக்கிறது என்ற அபாயத்தை முஸ்தபா வாத்தியார் அறியாதவரல்லர். அதைச் சூட்சுமாக எதிர்கொள்ளும் லாவகத்தைப் பற்றி இரவு பகலாகச் சிந்திக்கலானார். ஆழ்மனதில் அர்த்தமற்ற எண்ணங்கள் ஆர்ப்பரித்தன. படித்த புனைகதைகளில் வந்த சர்ப்பங்கள் மீண்டும் வந்து ஞாபக இழைகளாய் நெளிந்தன.

ஜெயமோகனின் நாகம் கதை படிப்பவரைப் பிரமிப்பில் ஆழ்த்தும் ஒரு அதிரடிப் படைப்பு. கற்பனாவாதத்தினாலும் ஒரு சிறந்த புனைகதையை உருவாக்கலாம் என்பதற்கு ஜெயமோகனின் நாகம், உடல் தழுவி புணர்ச்சி கொள்வதை வியாப்பிலாழ்த்தும்வண்ணம் கதையாக்கியுள்ளார். இது ஒரு உண்மைச் சம்பவமோவென மருளும்வண்ணம் அற்புதப்புனைவுத் திறன் கொண்ட கதையிது. மயக்குமொழி வார்த்தை ஜாலப்

படைப்பாளர் என இலக்கிய உலகில் பேசப்படும் லா.சா.ராவிடம் நேர்காணலில் ஒரு கேள்வி வந்தது.

"உங்கள் பெரும்பான்மையான கதைகளில் பாம்பு ஒரு படிமமாக வந்து போகிறதே! அது ஏன்?" என்று. "சர்ப்பம் அச்சத்தை தருவிக்கும் உச்சக்கட்ட பிம்பம். மனிதனின் பீதியின் குறியீடு! மரணத்தை பல்லிடுக்குகளில் சுமந்து திரியும் கொடுமையான பிராணி. இன்றைய மனிதனின் வாழ்வியல் நீரோட்டம் ஏதோவொரு அச்சத்தின் அழுத்தத்தில் சுழல்கிறது. அதன் வெளிப்பட்டு உருவம் தான் சர்ப்பம்" என்று விடை வந்தது.

கேரளத்து மலையாள நாழிதழான மனோரமாவுக்கு வைக்கம் முஹம்மது பஷீர் அளித்த வாக்குமூலம் இது -

"என் வது காலில் கருநாகம்
ஊர்ந்து சென்றது கதையல்ல!
வீட்டு விருந்தாளிகளாய்
தோட்டத்துப் பாம்புகளின்
வருகை தொடர்ந்திருக்கிறது
ஆனால் அவை ஒரு போதும்
என்னைத் தீண்டியதில்லை!"

இவையனைத்தையும் அவசியம் கருதி, மீள்வாசிப்பு செய்தார். பாம்பு மீண்டும் வந்து தரிசனம் தராதா? அதன் குணவியல்புகளை நுட்பமாக கூர்ந்தறியும் சந்தர்ப்பம் கிட்டாதா? என்ற எதிர்பார்ப்பில் அவர் ஆழ்மனம் தவித்தது. அவை பற்றிய தேடல் உள்ளுணர்வில் உறையலாயிற்று. கோழி முட்டை களையும், பசும்பாலையும் காட்டுப் பற்றைக்கருகில் பரத்தி வைத்துவிட்டுச் சர்ப்பங்களின் வருகைக்காக கரிசனையோடு காத்திருந்தார்.

விஷக்கடி மூலிகைகள் பற்றிய நூல்களை ஆர்வத்தோடு, படித்திருந்தார். விஷக்கடி வைத்தியர்களுடன் தொடர்பு கொண்டதில் மூலிகை பற்றிய தகவல்கள் கிடைத்தன. இனி சர்ப்பங்களை நெருங்கலாம், ஆய்வுகளைத் தொடரலாம், என்ற நம்பிக்கை வலுத்தது. வைக்கம் பஷீர் கூறிய பாணியில், விருந்தாளிகளாய் பாம்புகள் தொடர்ந்து வந்தன. முட்டைகளை ஆர்வத்துடன் கொத்திக் குடித்து, பாலையும் அருந்திவிட்டு, அவை தன்பாட்டில் சென்றன.

அவர் உற்சாகமடைந்து, கூலியாட்களை, அழைத்து காட்டுக்குள் செல்வதற்கான, ஒற்றையடிப் பாதைகளை உருவாக்கினார். காலில் பூட்சும், தோளில் டெதஸ்கோப்புமாக, அடர்ந்த காட்டுக்குள் அச்சமின்றி சுற்றித் திரிந்ததில், சர்ப்பங்களை எதிர்கொள்ளும் அசாத்திய துணிவு வந்தது. தூர நோக்கியின் துணையில், அன்றாடம் நிறைய சர்ப்ப தரிசனங்கள் கிடைத்தன.

உரித்துப் போட்டிருந்த பாம்புச் சட்டைகளும், அதன் செதில்களும் பெரிய அளவில் வழியெங்கும் கிடந்தன. உணவு, தண்ணீருடன் வனத்திற்குள் சென்று, ஆராய்ச்சி செய்துவிட்டுத், தினமும் பொழுது சாய்வதற்கு முன் வீடு திரும்புவார். அவை பற்றைக்குள மறைந்திருந்து வன்மம் தீர்க்கலாம் என்ற முன்னெச்சரிக்கையில், கைத்துப்பாக்கி ஒன்றினைத் தன்வசம் வைத்திருந்ததில், அச்சம் சிறிதும் பிறக்கவில்லை. அந்த அடர்ந்த காட்டுக்குள் தன்னந்தனியாய் சுற்றித்திரியும் முஸ்தபா வாத்தியாரை நினைக்கையில், கிராம மக்களுக்கு வியப்பு மேலிட்டது. இது உயிராபத்தை விலைக்கு வாங்கும் வேலை, எனப் பலரும் அவரை எச்சரித்தனர்.

இவை எதனையும் பொருட்படுத்தாது, தனது இலக்கை நோக்கி காட்டுக்குள் துணிவுடன் வலம் வந்தார். புதர் மண்டிக் கிடக்கும் காட்டுப்பாதை, நெஞ்சில் உறுத்தவே இல்லை. சாதிக்க வேண்டுமென்ற வெறியில் உயிரணுக்கள் துடித்தன. மரணத்தின் பிடியில் நின்று, மாணிக்கம் தோண்டும் அபார முயற்சி! இப்பயணத்தில் சாவே நேர்ந்தாலும், சாதனை ஒன்றே குறிக்கோள் எனக் கருதினார்.

சூரியன் தன் வீரியத்தை இழந்து அடிவானில் சோர்ந்து உறங்கும் வேளை, சற்றுத் தொலைவில் நிகழ்ந்த அந்தப் பயங்கரக் காட்சியினைத் தொலைநோக்கி மூலம் கண்டு அதிர்வடைந்தார். உருவத்தில் பெருத்த நல்ல பாம்பொன்றும், உருவம் சிறுத்த கீரியொன்றும், உடல் சிலிர்த்து, கட்டிப்பிடித்துக் கவ்வி இரண்டும் பெரும் சமரில் ஈடுபட்டன. பாம்பின் தீண்டலினால் கீரியின் கழுத்திலும், உடலிலும் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

சர்ப்பம் கீரியினை சினந்து கொத்த, கீரி அதீத தினவுடன் அதன் கழுத்தைக் கவ்வி, குதறி நிலத்தில் தூக்கித் தூக்கிப் போட்டது. தன் வாழ்நாளிலேயே காணாத ஒரு அரிய

காட்சியிலான முஸ்தபா வாத்தியார் கண்டு பெரும் ஆச்சரியத்தில் மூழ்கிப் போனார்.

போரின் உக்கிரம் இடைவெளியின்றி நீண்டு கொண்டிருந்தது! சில கணங்கள் ஓடிக் கரைந்தது. தற்போது சமரின் உச்ச கட்டம். வெற்றி யாருக்கு? கீரியின் கூர்பற்களுக்குள் வசமாக சிக்கிய பாம்பின் தலைப்பாகம் துண்டாடப்பட்டு, உடல் வேறு தலை வேறாகச் சிதறிக் கிடந்தன.

கீரி பற்றைக்குள் புரண்டெழுந்து துடித்து விஷத்தின் வெம்மையில் பதைபதைத்தது. சற்று நேரத்தில் சோர்வுடன் நிலத்தில் ஊர்ந்தது. அது எங்கு செல்கிறது? என அறியும் ஆவலில், அதனைப் பின் தொடர்ந்தார். காட்டின் நடுப்பகுதியில் குப்பைமேனி போன்ற ஒரு வகைச் செடி செழித்து வளர்ந்திருந்தது. அதன் இலைகளையும் - வேரினையும் கீரி தாவிப் பிடுங்கி மென்று தின்றது.

செடியினை உடலோடு இறுக அணைத்து, நிலத்தில் புரண்டு, குதூகலித்தது - கொடும் விஷத்தினைப் போக்கும் கீரி வணங்கி மூலிகை பற்றி அவர், வைத்திய ஏடுகளில் படித்தறிந்ததுண்டு. அம்மூலிகையினை இன்று நேரடியாகக் காணும் சந்தர்ப்பம் கிட்டியதில், பெரும் உவகையுற்றார். காட்டின் நடுப்பகுதிகளில் செழித்து வளரும் செடியென்றும், அதன் இலைகள், வேர்கள், இவ்வாறு இருக்குமெனவும், கீரிவணங்கிச் செடியினைப் பற்றி நூல்களில் படித்தறிந்ததைப் பற்றியும் தீர்க்கமாக அனுமானித்தார்.

இது சந்தேகமற கீரிவணங்கிச் செடிதான் என்பதினை தெளிவாக உணர்ந்து கொண்டார். விஷத்தின் நமைச்சலும், உபாதையும், தீர்ந்த உற்சாகத்தில் கீரி, துள்ளிக் குதித்து, விரைந்து சென்று மறைந்தது. இமயமலையை எட்டிப்பிடித்த குதூகலம் முஸ்தபா வாத்தியாரின் வதனத்தில் இழையோடியது. அந்தச் செடியின் இலைகளையும், வேரினையும் பிடிங்கியெடுத்து, பையில் போட்டு நிரப்பிக் கொண்டு வெற்றிப் பெருமிதத்தோடு வீட்டையடைந்தார். மூலிகையை இடித்து, சாறுபிழிந்து அருந்தும் பழக்கம் தொடர்ந்தது. இனி காரியசித்தி எவ்வாறு அமையப் போகிறது? என்பதினை அறியும் ஆவல் உந்தி எழுந்தது. சாவா? சாதனையா? என்பதை தீர்க்கமாகப் பரீட்சித்துப் பார்க்கும் தருணம் விரைந்து வந்தது. ஒரு நாள், தோட்டத்து பற்றைக்குள்

சாவதானமாகப் பால் அருந்திக் கொண்டிருந்தது, பாம்பு. இனி அதனைப் பிடிக்கும் பிரயத்தனத்தில், உறுதி கலந்த துடிப்பு. ஒரு முறை அதனருகில் நெருங்கி, பின் பிரக்ஞையின்றி திகைத்து நின்றதும், சங்கடம் உள்மன அதிர்வுகளைத் தொட்டு உலுப்பியது.

அச்சம் மனிதனின் பரம சத்துரு! பீதியினால் உறைந்தவனுக்கு பிரபஞ்சமெல்லாம் இருட்டு, துணிந்தவனுக்குத் தான் வெற்றி!, கோழைக்குத் தோல்வி. கண்களை இறுக மூடியவாறு, ஒரு பூனைக்குட்டியை லாவகமாகப் பிடிப்பதைப் போன்று, தனது வலது கரத்தை அதன் கழுத்தில் போட்டார்.

திடீர் மின்னல் தாக்குதல்! அதிர்ச்சி! சர்ப்பம் கைக்கு அகப்படாமலம் நழுவி, மணிக்கட்டை ஒரு நொடியில் பதம் பார்த்துவிட்டு, சீற்றத்துடன் ஓடி மறைந்தது. தீண்டிய இடத்தில் சுள்ளென்று வலித்தது. ரத்தம் பிசுபிசுத்து உடல் அதிர்ந்து தலை சுற்றியது. வலியும், கடுப்பும், சேர்ந்து விஷம் குருதியணுக்களில் பரவுவதை உணர்ந்தார். மூலிகையைச் சாறாக எடுத்துப் பருகிவிட்டு, உறங்காமல் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

சிறிது நேரம் செல்ல, விஷத்தின் வேகம் உடலில் உறைக்கவில்லை. பாம்பு தீண்டிய உணர்வேயின்றி உற்சாகமாக அவரால் இருக்க முடிந்தது என்பதில் பெரிய அகமகிழ்ச்சி. நீண்ட தேடலின் வெற்றி கைக்குள் வந்துவிட்ட பேரானந்தம். இனி எந்தப் பாம்மையும் அவரால் வசப்படுத்த இயலும் என்பதே ஒரு இமாலயச் சாதனைதான்!

அவரது ஆன்மா எல்லையற்ற பெருமிதத்தில் மிதக்கலாயிற்று. இப்போது தோட்டத்தில் - ஒரு பெரிய பாம்புப் பண்ணையே உருவாகிவிட்டது. சிறு சிறு கட்டம் போட்ட கம்பிக் கூட்டினுள், விதவிதமான வர்ணங்களில் நிறையப் பாம்புகள் அங்கு குடியிருக்கத் துவங்கின. கூண்டினுள் முழு நேரமும், முஸ்தபா வாத்தியார் அடைபட்டுக் கிடந்தார். மேனியெங்கும் சர்ப்பங்கள் ஊர்ந்து ஸ்பரிசிக்க சந்தோஷமாக, அமர்ந்து, அவரால் புத்தகம் படிக்க முடிந்தது. சர்ப்பங்கள் சதாவும் அவரைத் தழுவிக் கொண்டே இருக்கும், இருப்பு, இயல்பாகி விட்டது.

இந்த அற்புதத்தைக் கண்டு களிக்க மக்கள் ஆர்வத்தோடு திரண்டு வந்தனர். முஸ்தபா வாத்தியார், என்ற இவரது நாமம் மங்கி, பாம்பு மனிதன், என்றே எல்லோரும் அழைத்தனர். பார்வையாளர் குழுமி வந்து, காசு கொடுத்து கியூவில் நின்று, பரவசமாகி, தினமும் வந்து கண்டு களித்தனர்.

எந்த விஷப்பாம்மையும் கையால் பிடிக்கும் அற்புத மனிதன் என்று பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் செய்தி வந்தது. அவரைப் பேட்டிகாண, வெளிநாட்டு ஊடகவியலாளர் வந்து நிறைந்தனர். பாம்பு மனிதனின் கீர்த்தி, திக்குத் திசையெங்கும் பரவ ஆரம்பித்தது.

உள்ளூர் சர்ப்பங்களோடு, சர்வதேசப் பயங்கரப் பாம்புகளையும், விலை கொடுத்து வாங்கிப் பண்ணையில் உலவவிட்டார். அவற்றுள் சில அவரைக் கொத்தவும் செய்தன. அதனால் எந்த பாதிப்பிற்கும் அவர் உள்ளாகவில்லை. பணமும், பாராட்டும், வந்து குவிந்தன. கின்னஸ், உலக சாதனையாளர் வரிசையில் பாம்பு மனிதன் இடம்பெறப் போவதாகப் பரவலாகப் பேசப்பட்டது. விஷத்தை முறிக்கும் கீரிவணங்கிச் செடிதான், அவரது உயிரைக் காக்கும் அரண் என்பதை இன்னும் வெளியுலகு அறியாமலே இருந்தது. பிள்ளைகளும், மனைவியும், வந்து இவ்வரிய சாதனை கண்டு, பெருமிதம் அடைந்தனர். பாம்பு மனிதனின் அற்புதச் செயல்கள் எங்கும் விதந்து பேசப்பட்டன. ஒரு நாள் அந்த அதிர்ச்சிதரும் செய்தி, காட்டுத்தீயாய் ஊருக்குள் பரவியது. பாம்பு மனிதனை ஒரு கொடூரச் சர்ப்பம் தீண்டி, மரணித்துவிட்டதாக அச்செய்தி இருந்தது. பாகன், வளர்த்த யானையினால் மிதிபட்டுச் சாவதைப் போல, பாம்பு மனிதனும் இறுதியில் சர்ப்பம் தீண்டி மாண்டு போனான் என்ற விமர்சனங்கள் எங்கும் எழுந்தன.

அவரது சடலத்தை கூண்டிலிருந்து வெளியே எடுப்பதற்கு அதீத பிரயத்தனங்கள் செய்ய வேண்டியதாயிற்று. உயிரற்ற சடலத்தில் பாம்புகள் ஊர்ந்து திரிந்தன. வேலையாள் பரீத் தைரியமாக கூண்டினுள் நுழைந்து, பாம்புகளைப் பக்குவமாக விலக்கி, ஜனாஸாவை வெளியே கொண்டு வந்தான். அவரது நெற்றிப் பொட்டில் பாம்பு தீண்டிய காயம் இருந்தது. மரணச் செய்தி கேள்வியுற்று, பெருந்திரளான கூட்டம், குழுமிவிட்டது. ஜனத்திரள் கட்டுக்கடங்காமல், திணறியது.

மனைவியும் பிள்ளைகளும் சோகம் தாளாமல் கதறியழுதனர். மகன் பைரூஸ் இராணுவத்தினரோடு வந்துநின்று துயரம் சொரிந்தான். பாம்புகளை, கடும் சீற்றத்தோடும், வெறுப்போடும் பார்த்தான். பிறகு உணர்ச்சி வசப்பட்டு, இராணுவத்தின் துணையோடு, பாம்புப் பண்ணைக்கு பெற்றோல் ஊற்றி தீ வைத்துக் கொளுத்தினான். தீ கொழுந்து விட்டு எரிய, சர்ப்பங்கள் பதைபதைத்து, கருகிச் சுருண்டு மடிந்தன. சில தப்பிச் செல்ல எத்தனித்த போது, துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர்.

சில கணங்களில் பாம்புப்பண்ணை சுடுகாடாய்க் காட்சி அளித்தது. மரணவிசாரணை அதிகாரியும், வைத்தியர்களும், மரணம் தொடர்பான விசாரணையையும், வைத்தியப் பரிசோதனையும் நடத்தினர். ஜனாஸா நல்லடக்கத்தின் பின் அங்கொரு பிரளயம் வெடித்தோய்ந்த அமைதி நிலவியது. வைத்திய பெறுபேறும், மரணச் சான்றிதழும் வந்திருந்தன.

முஸ்தபா வாத்தியார், பாம்பு தீண்டி மரணமடைந்தார் என்பதற்கு உடலில் எவ்வித ஆதாரங்களும் இல்லை! திடீர் மாரடைப்பினால் மரணம் சம்பவித்துள்ளது என்று குறிப்பிடப் பட்டிருந்தது.

சாம்பல் மேடாகி வெறிச்சோடிப் போன, பாம்புப் பண்ணை, வெற்று நிலத்தை, பைரூஸ் ஏக்கத்தோடு வெறித்துப் பார்த்தான். நெஞ்சுக்குள் குற்ற உணர்வு அனலாய் கனன்றது. ■

**- ஆகஸ்ட் 2004**

# மைமூன் ஆச்சி

மைமுன் ஆச்சியை அறியாதவர்கள் யாரும் எங்கள் கிராமத்தில், இருக்க முடியாது. எனது உம்மம்மா அத்தனை பிரசித்தம். இந்தப் பிரபலத்தின் ஆதார சுருதியே அவளது மனித நேயம்தான் என்பதை என்னால் அறுதியிட்டுக் கூறமுடியும். யாருக்கு சுகக்கேடு, யார் வீட்டில் ஜனாஸா, எங்கெல்லாம் கலியாண வீடு, அத்தனை இடங்களுக்கும் திடீர் பிரசன்னம் தந்து ஒரு விசைக் கருவியாக, சுழன்று இயங்குவாள். நோய் கண்டவருக்கு மூலிகை வைத்தியம் பார்ப்பதில் மிகக் கெட்டிக்காரி. நோயினால் உழன்று சங்கடப்பட்ட பலர், இவரது சிகிச்சையினால் தேறியிருக்கிறார்கள்.

எங்களூர் எம்.பி.பி.எஸ். டாக்டரை விட, இவளது கைராசியின் மகத்துவம் குறித்து ஊர் விதந்து பேசுவதுண்டு. அத்துறையில் அதீத நுட்பம் நிறைந்தவள். உம்மம்மாவின் வாப்பா, அந்நாட்களில் கீர்த்தி பெற்ற நாட்டு வைத்தியராகத் திகழ்ந்தாராம். அந்தப் பரம்பரை ஞானம் இவளையும் ஒட்டிக்கொண்டிருக்கலாம். இவளைப் பொறுத்த மட்டில் எல்லா சேவைகளும் இலவசம்தான்.

இந்தக் கைங்கரியங்களுக்காக யாரிடமும் வெகுமதி பெறுவதைத் தவிர்ப்பாள். தன் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்பதில், மிக உறுதியானவள். இதனால், இவள் பால் எல்லோருக்கும் நேசங் கலந்த ஒரு ஈடுபாடு. இத்தனைக்கும் வாழ்வில் பெரிய வசதிகள் எதனையும் பெற்றவள் இல்லை.

பிறர் மீது கருணை கொண்டவர்கள், தம் சுய முன்னேற்றங் களை கோட்டைவிட்டவர்கள் தான். மைமூன் ஆச்சியும் இந்த ரகத்தைச் சேர்ந்தவள். எவருக்காவது துன்பமென்றால், இவளது கால்கள் ஒரு இடத்தில் தரித்து நிற்காது. உம்மம்மாவுக்கு இப்போது ஒரு எழுபது வயதிருக்கலாம்.

மெல்லிய தேகம், மேனியெங்கும் தசைச் சுருக்கங்கள் தென்பட்ட போதிலும் பார்வை, கேள்வி ஞானங்களில் பிசகு இல்லை. கடினமான வேலைகளைக் கூட திறமையாகச் செய்யும

உடல் ஆரோக்கியமுண்டு. உம்மம்மாவின் கணவர் சுல்தான் அப்பா, கண்ணை மூடி பத்தாண்டுகள், உருண்டு போய்விட்டன. அவர் ஒரு அரச ஊழியராகப் பல காலம் சேவை புரிந்து, மரணித்த பின் - மாதந்தோறும் பென்சன் பணம், உம்மம்மாவின் கைக்கு வந்து சேரும்.

வியாபாரிகளை இணைத்துக் கொண்டு பெரிய மாதச் சீட்டு போட்டுவருவதால், இவளது கையில் எப்போதும் பணம் புரளும். பண விடயத்தில் கடைப்பிடிக்கும் அதீத நேர்மை காரணமாக, சீட்டு விவகாரம் நீண்ட காலங்களாக நிலைத்து வருகிறது.

ரம்ழான் மாத நோன்புக் காலம் துவங்கிவிட்டால், இவளது காட்டில் பிரமாதமாக மழை பெய்யும். உறவினர், ஊரார், அறிந்தவரென்று எல்லா வள்ளல் மனங்களும் உம்மம்மாவுக்கு வாரிக் கொடுப்பதில் அதீத திருப்தி கொள்ளும். எவ்வளவுதான் மறுத்த போதும், அவர்கள் முந்திக் கொண்டு, ஸக்காத் வழங்குவார்கள். ரம்ழான் மாதம் முடிய, இவளது திறைசேரி ஐந்து இலக்கங்களால் நிறைந்து வழியும். ஊதாரிச் செலவுகள் என்று எதனையும் செய்துவிடமாட்டாள்.

அவலப்படுவோருக்கு மனமிரங்கி உதவிகள் புரிவாள். அதன் மூலம் ஆன்ம திருப்தியடைவாள். தன் கணவர் சுல்தான் அப்பாவின் மீது, அதிகமான வாஞ்சை கொண்டவள். அவரது நல்லியல்புகளை அடிக்கடி நினைவு கூர்ந்து ஆற்றாமைப் படுவாள்.

“அந்த நல்ல மனிசனுக்கு அல்லாஹ் நாயன், சொர்க்கத்தைக் கொடுக்கோணும்” என்று சேலைத் தலைப்பை இழுத்து தலையிலிட்டவாறு, உருகிப் பிரார்த்திப்பாள். எழுபது வயதாகியும், அவளிடம் முனைப்பு பெற்றிருந்த, அசாத்திய துணிச்சல் கண்டு நான் அதிசயித்ததுண்டு. எங்கள் தெருவிலேயே காலைக் கருக்கல் ஒளிபாய்ச்சு முன்னே, முதலில் எழுந்து முற்றத்தைப் பெருக்கிவிட்டு, வீட்டு வேலைகளைச் செய்பவள் மைமுன் ஆச்சிதான். மற்றவர்களின் கண்விழிப்புக்கு சூரிய ஒளி உறைக்க வேண்டும். இவள் நோய் நொடியென்று, ஒரு நாளில் கூட சுருண்டு படுத்ததை நான் பார்த்ததில்லை. ஐவேளைத் தொழுகையை, ஒரு போதும் தவறவிட்டதில்லை.

பக்கத்து வீட்டு பரீதா தாத்தா ஒரு நாள் கேட்டாள், "ஆச்சி ஒங்களுக்கு எத்தனையேன் வயசு?"

"எனக்கிப்ப ஒரு அறுவது வயதெண்டாலும் இரிக்கும் புள்ள."

"அதெப்படி உம்மம்மா! இப்ப எங்கட உம்மாவுக்கே ஐம்பது பிந்தி. அப்ப நீங்க ஒங்கட மகள, பத்து வயசிலேயா பெத்தீங்க?"

எனது சிலேடையை ரசித்து பரீதா தாத்தா உடல் குலுங்கச் சிரித்தாள். உடனே உம்மம்மாவுக்கு சட்டென கோபம் பொத்துக் கொண்டு வரும். "அடே! போடா இங்கயீந்து. பெரிய மனிசர் பேசச் செல்ல, வருவான் அரப்படிக்க."

உம்மம்மாவை அடிக்கடி சீண்டிப் பார்ப்பது, எனது வழக்கமான பொழுதுபோக்கு. உம்மம்மாவுக்கு மூக்குநுனியில் கோபம் பொத்துக் கொண்டு வரும். காரசாரமாக எல்லோரையும் உரத்த தொனியில் திட்டித் தீர்ப்பாள். சில நிமிடங்களில் அக்னி தணிந்து இயல்பு நிலைக்கு வந்துவிடும். கோழி மிதிச்சு குஞ்சு சாகாது, என்று பழமொழி கூறி, சமரசம் செய்வாள். யாரும் தன் கருத்துக்கு எதிர்மறையாக பேசக்கூடாது என்பதில் விட்டுக் கொடுக்காத பிடிவாதம். தன் பக்கமே நியாயமிருப்பதான சூளுரைப்பு (மூப்பில் திளைத்துப் போன, எல்லா முதியோரினதும் யதார்த்த நிலையும் இதுதான்).

சிறு வயது தொட்டு என் மீது அபார வாஞ்சை காட்டி வருகிறாள். இவள் கூறும் பழங்காலக் கதைகளை, ரசித்து அசை போடுவதில் எனக்கு அலாதிப் பிரியம். மேலுதட்டில் ரோமம் கறுக்கத் துவங்கிய இந்த யௌவனப் பருவத்திலும், நான் அவளுடைய கணிப்பில், சிறுபிள்ளைதான். மடியிலிட்டு என் தலையை வாஞ்சையோடு தடவிக் கொடுப்பதில் தான் எத்தனை சுகம். உம்மம்மாவின் பாசவிகசிப்பில் நான் கரைந்து போவேன்.

இவள் பெற்ற வாரிசுகள் ஆறு. இரு ஆண்கள், நான்கு பெண்கள், பேரப்பிள்ளைகள் ஒரு டசின் தேறும். எல்லோரிடத்திலும பாசமும், கருணையும், இருந்த போதும் என் உம்மாவின் மீது தான், மேலதிகப் பற்று. மூத்த பிள்ளை, என்பதினாலோ தெரியவில்லை. தாய்க்கும் மகளுக்குமிடையில், அபூர்வமாக

மனமுறிவுகள் ஏற்படுவதுண்டு. பலத்த வாக்குத் தர்க்கங்கள் கிளர்ந்தெழும். எண்ணெயில் இட்ட கடுகாகப் படபடத்து, உம்மம்மா சில வேளைகளில் வெளிநடப்பு செய்வதுண்டு.

இந்த இராஜரீக உறவின் முறிவை, இவளால் இரண்டு நாட்களுக்குக் கூட - தாக்குப் பிடிக்க இயலாது போய்விடும். மூன்றாம் நாள் காலையில் மீண்டும் வீட்டை நோக்கிய பிரவேசம் நிகழும். எதுவும் நடக்காததைப் போன்ற தணிந்த சுபாவம் தலை காட்டும். பிறகு எல்லோர் மீதும் அன்பினை ஊற்றுச் சுரப்பாய் வர்ஷிப்பாள். உம்மம்மாவின் அடிமனம் மென்மை கொண்டது. அதைப் புரிந்து கொள்ள இயலாதவருக்கு, அவள் ஒரு கேள்விக் குறியே!

எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. நான் மனம் கலங்கிப் போன சம்பவமது.

ஓ.எல் பரீட்சை எழுதக் கிளம்புகிறேன். அன்று என் பரீட்சை செலவிற்கு கொடுத்தனுப்ப ஒருவரிடமும் காசு இருக்கவில்லை. நேரம் ஆக, ஆக ஆற்றாமையால் என் விழிகள் கசிகின்றன. உம்மா பக்கத்து வீடுகளில், காசு புரட்ட எடுத்த முயற்சிகள் சாத்தியமற்றுப் போயின. இறுதியில் உம்மம்மாதான் பணம் தந்து பரீட்சைக்கு அனுப்பி வைத்தாள்.

“ஏண்ட பேரனுக்கு நான் ஒதவி செய்யாமல் போவேனா? இவளுகள், என்ன செய்யப் போறெண்டு பாக்கத்தான் பேசாம ஈந்த” என்று என தலையை வருடி தேறுதல் சொன்னாள். அவளின் ஆசியினால் பரீட்சையில் சிறப்பாக சித்தியெய்தினேன். எங்கள் குடும்பம் பெரியது.

அடிக்கடி வறுமை கோரமாய் தாக்கும். அது போன்ற சந்தர்ப்பங்களில், எல்லோருடைய கஜானாக்களும் காலியா விருக்கும். சமயலறையும், வீடும் வெறிச்சோடிப் போயிருக்கும். இத்தருணங்களில் உம்மம்மாதான் கைகொடுத்து உதவுவாள். கடைக்குப் போய் அரிசி, சீனி, காய்கறியென்று வாங்கிக் கொடுப்பாள்.

உம்மம்மா மகாத்மியம் பற்றி நிறையவே கூறிவிட்டேன். அதி முக்கிய விடயம்/ பற்றி, இதுவரை கூறாமல் விட்டுவிட்டேனே! எங்கள் இல்லத்தில் ஒரு பழங்காலத் தேக்கமரப் பெட்டி ஒன்று உண்டு. அதன் தனி ஆளுமை மைமுன் ஆச்சியினுடையதுதான்.

எத்தருணத்திலும், யாரும் அதைத் திறக்கவோ, உரிமை கோரவோ அனுமதிக்கமாட்டாள். சாவிக்கொத்து பத்திரமாக அவள் இடுப்பில் இருக்கும்.

அந்தக் கருங்காலிப் பெட்டகம் அவளது தீவிர கண்காணிப்பிலேயே இருந்தது. எல்லோரும் உறங்கிய பின், பாதி ராத்திரியில் எழுந்து, திறப்பதும், மூடுவதுமாக ஓசை, சன்னமாக எங்கள் காதுகளில் விழும். இச்செயல்களினால் உம்மம்மாவின் கருங்காலிப் பெட்டி பற்றிய சந்தேகமொன்று, எல்லோருக்கும் இருந்தது. அது பற்றிய தீவிர விமர்சனங்கள் கிழவியின் காதுகளில் விழாவண்ணம் ஒலிக்கும்.

அன்று அவளது பெட்டிச் சாவி காணாமல் போய்விட்டது. பத்திரகாளியாக உருமாறி, வீட்டை இரண்டாக்கி ரகளை பண்ணி, வீட்டாரைத் திட்டித் தீர்த்தாள். திறப்பை யாரும் கண்டெடுத்து மறைத்து வைத்துள்ளனரோ என்ற சந்தேகமும் வலுத்திருந்தது.

"ஏண்ட சாவிக் கொத்த, களவெடுத்தவங்களுக்கு நான் நல்ல வேலை செய்வேன்" என்று கோபாவேசமாக சூளுரைத்தாள். எதையோ பெறுமதியான பொருளொன்றை இழந்துவிட்டதைப் போன்று, முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டிருந்தாள்.

இப்படித்தான் ஒரு நாள், சாவிக் கொத்தை தொலைத்து விட்டு, ரகளை பண்ணிக்கொண்டு இருக்கும் போது, கிணற்றடியில் நான் எதேச்சையாக கண்டெடுத்து வந்து கையில் கொடுத்தேன். மகிழ்ச்சி தாளவில்லை அவளுக்கு. இச்சம்பவங்களினால், பெட்டகம் குறித்த சந்தேகமும், மர்மமும் எங்களுக்குள் வலுத்துக் கொண்டே வந்தது. ஊகங்களும் பரவலாய் எழுந்தன. அதனுள், நிறைய காசு சேர்த்து வைத்திருக்கலாம், அடமானம் பிடித்த காணி உறுதிகள் கூட இருக்கலாம். நிறையத் தங்க நகைகள் சேர்த்து வைத்திருக்கலாம். இல்லையென்றால் புதையல் காப்பதைப் போன்று, கிழவி, இப்படியேன் அலட்டிக்கொள்ள வேண்டும்?

இவ்வாறாக கிழவியின் பெட்டகம் பற்றிய அலசல்கள் உள்ளுக்குள் தொடர்கின்றன. ஒரு நாளைக்கு பெட்டியைத் திறந்து பார்க்க வேண்டுமென்ற ஆவல் எல்லோருக்கும் இருந்தது. சரிதான், பூனைக்கு யார் மணி கட்டுவது என்பதே, பிரச்சினை.

வாப்பா சொன்னார். "சொத்துப் பத்து இருந்தாக்கா, அவருக்குப் பொறகு நாங்கதானே அனுபவிக்கப் போறோம். என்னத்துக்குகேன் பதரோணும்." ஒரு நாள் ஒழுச் செய்ய கிணற்றடிக்குப் போன உம்மம்மா கால் வழுக்கி, கிணற்றடியில் விழுந்துவிட்டாள். உடலெங்கும் பலமான காயங்கள். இடது காலில் எலும்பு முறிந்துவிட்டது. எங்களால் திடீர் அதிர்ச்சியை தாங்கிக் கொள்ள இயலவில்லை. நடக்க இயலாது வேதனை யோடு பல மாதங்கள் படுக்கையில் கிடந்தாள். தொடர்ந்து மருத்துவம் செய்தும், அவளால் பழைய நிலைமைக்குத் திரும்ப இயலவில்லை.

பம்பரமாகச் சுழன்று, மற்றவர்களுக்கு வைத்தியம் பார்த்த மைமுன் ஆச்சி, பாயில் முடங்கிப் போனது குறித்து ஊர் மிகவும் விசனித்தது. நெஞ்சுவலியும், சுவாசமுட்டும் அடிக்கடி அவளை துன்பத்திலாழ்த்தின. நோய் பார்க்க வருவோரின் தொகை விசாலித்துக் கொண்டிருந்தது. மைமுன் ஆச்சியைப் பற்றிய கவலை, எல்லோரையும் வருந்த வைத்தது. எனது உம்மா அவளை விழுந்துவிழுந்து உபசரித்தாள்.

ஒரு நாள் விடியல் சுபஹில், எங்கள் உம்மம்மாவின் சரித்திரம் அமைதியாக முடிந்து போனது. ஏராளமானோர் மையத்து வீட்டை ஆக்கிரமித்தனர். அவளின் சிறந்த குண இயல்புகளை பலரும் புகழ்ந்தனர். பெண்கள் துயரம் தாளாது கதறியழுதனர். மைமுன் ஆச்சியின் ஏழாம் கத்தம் முடிந்ததும் குடும்பத்தார் கூடி, ஏகமனதாக ஒரு தீர்வினை எடுத்தார்கள். பெட்டியைத் திறந்து பார்த்துவிடுவது என்ற தீர்வே அது.

தேர்தல் முடிவுகளைச் செவிமடுக்க வானொலிப் பெட்டிக்கருகே காத்திருக்கும் வாக்காளரின் ஆர்வம் எங்களில் குடிகொண்டது.

பெட்டி திறக்கப்பட்டு, கூடவே ஆச்சரியமும் காத்திருந்தது. பெட்டிக்குள் பெறுமதியான பொருட்கள் இருக்குமென அங்கலாய்த்தவர்கள் வாய்மூடி மௌனிகளாயினர். பெட்டிக்குள் பழைய புதிய ஆடைகளும், தஸ்பீஹ், பிரார்த்தனை மாலைகளும், சிதறிக் கிடந்தன. புதையல் கண்டெடுக்க விழைந்தவர்களின் முகங்களில் கருமை படர்ந்த சலிப்பு. சல்லடை போட்டுத் தேடியும், பெட்டிக்குள் இருந்து எதனையும் கண்டெடுக்க இயலவில்லை.

அந்தப் பெட்டகத்தினுள் கைக்கடக்கமான சிறிய தகரப் பெட்டியொன்று இருந்தது. இப்போது பரவலான உற்சாகம். இந்தச் சிறிய பெட்டிக்குள் பணம், நகை கூடுதலாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பும் திடீரென நிர்மூலமானது. வெள்ளைப் புகைப்படம் ஒன்று மட்டுமே இருந்தது. ஒரு அழகான இளைஞன் புகைப்படத்தில் புன்முறுவல் பூத்தவாறு காட்சி கொடுத்தான்.

எல்லோர் முகங்களிலும் ஆச்சரியக் குறி. இந்தப் புகைப்படத்தைப் போய், உம்மம்மா பெரிய சொத்தாய் நினைத்து ஏன் பாதுகாத்தாள்? அந்தப் புகைப்படம் நிச்சயமாக அவள் கணவர் சுல்தான் அப்பாவின் சாயலிலும் இல்லை. அவளது பிள்ளைகள் ஒருவரினதும் உருவத்திலும் இல்லை. அப்படி யானால் இவன் யார்?

கேள்விக் கணைகள் அனைவரையும் துளைக்க வாரம்பித்தன. இந்தச் சிக்கலைத் தீர்க்க எவராலும் இயல வில்லை. நான் தீர்க்கமாக யோசித்துவிட்டுச் சொன்னேன்.

“இந்த நொடியை அவிழ்க்க, நாங்க இறந்த காலத்திற்கு போனாலும் முடியாது. உம்மம்மாவின் இளமைக் காலங்களை அறிய, அப்போது நாங்கள் யாரும் உயிர் தரித்திருக்கவில்லை. இது பற்றித் தகவல் தரக்கூடிய ஒருவர் மட்டும் தான் தற்போது உயிருடன் இருக்கின்றார். உம்மம்மாவின் சகோதரர் ரசீத்அப்பா. அவரும் இப்போது நோயிலும், மூப்பிலும் மாமி வீட்டில் அல்லாடிக் கொண்டிருக்கிறார். அவரிடம் இந்தப் படத்தை காட்டி கேட்பதுதான் சரி”. ரசீத் அப்பா படத்தை துருவித் துருவி பார்த்துவிட்டு கூறத் தொடங்கினார்.

“அந்த இளைஞன் ஒரு பணக்கார வீட்டுப் பிள்ளையாம். மைமுன் ஆச்சியின் இளமைக் கால அழகில் லயித்து அவளைத் திருமணம் செய்ய விரும்பினானாம். ஏழை வீட்டில் திருமணம் செய்ய அவனது தந்தை தடையாக இருந்தாராம். இவர்கள் சிநேகம் ஊரில் கசியவாரம்பித்ததும், மைமுன் ஆச்சியின் வாப்பா அவசரமாக சுல்தான் அப்பாவுக்கு திருமணம் செய்து கொடுத்துவிட்டார். இதைச் சகித்துக் கொள்ளவியலாத அந்த இளைஞன் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டான். அவனது புகைப்படம் தான் இது.”

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவத்தினை,

ரசீதுஅப்பா நினைவு கூர்ந்து விளக்கினார். ஒரு நல்ல தாயாக தாரமாக, பாட்டியாக வாழ்ந்து விட்ட மைமுன்ஆச்சி, மனசாட்சிக்கு எத்தனை முக்கியத்துவம் கொடுத்திருக்கிறாள் என்பதை இது துல்லியமாக்குகிறது.

உம்மம்மா என்ற புத்தகத்தை என்னால் விமர்சசிக்க முடியவில்லை. எங்கள் நெஞ்சங்களில் நிறைந்து வாழ்ந்து மறைந்துவிட்ட உம்மம்மா, ஒரு புரியாத புதிர். ■

**- ஜூன் 2003**

---

மு. பஷீரின் மைமுன் ஆச்சி, வழமையான இவரது வித்தியாசமான நடை, இக்கதைக்கு மெருகு சேர்க்கிறது. மைமுன் ஆச்சி பாத்திரம் சிறப்பாக வார்க்கப்பட்டிருக்கிறது. கலை உணர்வோடு செல்லும் அழகான கதை வார்ப்பு.

**பிரகலாத ஆனந்த்**
**மல்லிகை ஆண்டு மலர், 2004**

# குழாயடியும் குறுகுறுக்கும் நினைவுகளும்

உறக்கம் கலைந்து வெகு நேரமாகியும், ஜன்னலினூடே தெரிந்த அதை, வெறித்துப் பார்த்து புன்முறுவல் பூத்தேன். மின்சாரம் செத்த இரவுகளிலும், காலை, மாலை, எப்போதுமே, அதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அலுப்பேயில்லை. "எதை?" என்று நீங்கள் அறிந்துவிடத் துடிப்பதை என்னால் அனுமானிக்க முடிகிறது. உங்கள் சங்கடத்தைக் கலைத்து ஒரே போடாய் போட்டு உடைத்து விடலாம்தான்.

சற்றே பொறுமை காக்க!

இருளின் திட்டுக்குள்ளும், வெளிச்ச விகசிப்பிலும், காட்சிகள் மின்னலடிக்கும். இதைக் கண் இமைக்காது பார்த்து ரசிப்பதில், என் அலாதி கவனம். அந்தரங்கம் எங்கும் புனிதமில்லைத்தான். மார்புக் கட்டுடன் அரைகுறை ஆடையுடன், நீர்பட்டு பளபளக்கும் இளமேனித் திட்டுக்கள், பெண்பாலர் குளிக்கும் காட்சி, உற்சாகமூட்டும் இரசனைக்குரிய விடயம் தான்.

அதே போன்று, அவர்களைப் பொறுத்த மட்டில், சங்கடமான நிலையும்தான். பட்டுமேனி பிற ஆண்கள் கண்பட்டுவிடக்கூடாது என்பதில், இவர்கள் எச்சரிக்கை உடையவர்கள். கொழும்பு போன்ற நகரச் சூழலில், சாலையோரக் குழாயடிகளில், அங்கங்கள் பளபளக்க நின்று குளிப்பது பழகிப் போன சங்கதி.

மேனி மறைத்தல் என்பதெல்லாம் நாகரீக யுகத்தில் நிராகரிக்கப்பட்டவை. ஒழுக்கம், விழுமியம் என்பதெல்லாம் நாகரீகக் கறையான் அரித்த பழம் புடவைகள் என்றாகிவிட்டது. எங்கும் கவர்ச்சி, எதிலும் விரசம், ஆண்களை வெறிகொள்ளச்

செய்யும், ஆபாச நடை உடை, நர்த்தனங்களால் மானபங்க செய்திகள் ஊடகங்களை நிறைக்கின்றன.

ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் இளம் பெண்கள் பேருந்துகளில் நெருங்கி முண்டியடித்துக் கொண்டு, ஆண்களோடு இரண்டறக் கலந்து, வௌவால்களாய் மூச்சுமுட்டும் கெடுபிடியில்தான், பயணிக்க வேண்டுமா? இதைப் பழக்க தோஷம் எனலாமா? எந்த ஒரு காரியமும் பழக்கத்தில் வர, பிரச்சினை, பெரிதாய் தோன்றுகிறது. சாராயத்தை முதலில் குடிக்கும் போதுதான், கசப்பு. பிறகு பழகப் பழக தேனாமிர்தமாகி விடும்.

பஸ் பிரயாணம் எப்பவும் எவருக்கும் சங்கடமானது தான். அதற்காக ஆண், பெண் பேதமின்றி பேருந்துகளில், ஒட்டிக் கொண்டு பிரயாணம் செய்ய வேண்டுமா? உரசற்கலை மன்னர்களின் வக்கிரங்களுக்கு, ஆடைத் தொழிற்சாலை பெண்கள் விலை போவதா? இதில் வேறு, இடம், பொருள், ஏவல் தெரியாமல் கண்ட இடத்திலெல்லாம் நெருக்கக் காதல் இவர்கள் பணி முடித்து இல்லம் திரும்புகையில்,

"என்ன இது! மார்பெல்லாம் இப்படி மோசமாய் கசங்கிப் போயிருக்கிறதே!" என்று எவராவது கேள்விக் கணையா தொடுக்கப் போகிறார்கள்? பிறரின் நடவடிக்கைகளை அறையிலிருந்தவாறு என்னால் துல்லியமாகப் பார்த்து ரசிக்க முடிகிறது. என்னை யாரும் இனங்காணாதவாறு கச்சிதமாக ஜன்னல் கதவுகள் பாதுகாக்கும். உணர்ச்சிகளை கிளர்ந்தெழ வைக்கும் காட்சிகள். இங்கு சென்சாரின்றி அற்புதமாக அரங்கேறும்.

அந்த அதை ஆளுகை புரிகிறவர்கள் பெரும்பாலும் இளவட்ட கதாநாயகிகள் தான். எத்தனை விதவிதமான வித்தியாசமான கால்கள்! பூப்போன்ற மிருதுவான மென்மையான கால்கள். கறுப்பு, வெள்ளை, சிகப்பு, நிறங்களில் மனதை ஈர்க்கும் வழவழப்பான கட்டுமஸ்தான பாதங்கள். பித்த வெடிப்பு கண்ட, இறுகிய தடித்த கால்கள். ஆளை, அச்சுறுத்தும் நீண்டு தடித்த விரல்களைக் கொண்ட அழகான கால்கள்.

பாத இலட்சணங்களை வைத்தே வைத்தீஸ்வரன் பாணியில் படிமக்கவிதை எழுதிவிடலாம். ஜனசந்தடி மிகுந்த கொழும்பு நகர, நெருக்கடி வாழ்வில், எல்லாமே சகஜமாகிப்

போன நிலை. எனது சொந்த ஊரான, நாவல்நகரின் இயற்கை சூழலை எண்ணும் போது, நெஞ்சு இனிக்கிறது. அந்த இயற்கை எழிலை எத்தனை முறை பார்த்தாலும் ஆன்மா விகர்சிக்கும். அந்த வனப்புகளை பார்த்துப் பரவசமடைய இரு விழிகள் போதாது என்ற நினைவே மேலோங்கும்.

உத்தியோக நிமித்தமாக கொழும்பு வந்து இந்த சிறிய அறையில் தங்கி, வெப்பத்தில் புழுங்கி, வாசம் புரிவது சங்கடத்திற்கு உரியதுதான். அந்த அது, மட்டும் இல்லாதிருந்தால், உற்சாகம் இழந்திருப்பேன். இங்கு எங்கு பார்த்தாலும் இயந்திரத் தனத்தின் வேகமான மனித சுழற்சி. நகர மேனாமினுக்கி போலி வாழ்க்கை. எதனையும் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. அதுசரி மறந்து தான் போனேன். அந்த அதை, அறிய ஆவல் கொண்டிருப்பீர்கள். நீட்டிக் கொண்டு போகாமல் முடிச்சவிழ்க்க விழைகிறேன்.

எனது அறைக்கு நேர்எதிரே எழுந்தருளியிருக்கும் நகர சபைப் பைப்படியைத்தான், பூடகமாக அது என நாமமிட்டேன். அங்கென்ன உலகின் பேரதிசயம் கொட்டிக் கிடக்கிறதா? கேள்வி நியாயமானதுதான். அப்படி எதுவும் இல்லை. தண்ணீருக்குப் பதிலாக பன்னீர்கொட்டும் அற்புதம் நிகழ்கிறதா? ஹூ....ம், ஹூ.....ம், அதுவுமில்லை. அப்படியென்றால் ஏனிந்த குழாயடி விரிவுரை? விஷயமே அங்குதான் இருக்கிறது. இரசகைக்குரிய நிகழ்வுகள் இனி மேல்தான் வரப்போகிறது.

மீண்டும் பொறுமை காக்க!

குழாயைத் திருகியதும் குபு, குபுவென நீர் வந்து பாயும். சில நேரங்களில் அதன் கழுத்து உடைக்கப்பட்டு, நீர்த்தடைப் பட்டு, வெறிச்சோடிப் போயிருக்கும். என் கற்பனை ஊற்று சுரக்க இந்தக் குழாயடிதான் காரணமாக அமைகிறது. ஓய்வாக இருக்கும் பொழுது, அது கவிதை எழுதும் உந்துதலை எனக்களிக்கிறது.

ஓ... கவிஞனா? அப்ப இது வித்தியாசமான கேஸ்தான்! என நீங்கள் தீர்மானித்துவிடவேண்டாம். மன உளைச்சல்களை வடிகட்டி கவிதையாக்கிவிடுகிறேன் நான். அது பிரமாதமாக இல்லாது இருந்த போதும், ஊடகங்களில் வெளிவந்து உயிர்ப்பு பெறுகிறது.

நான் கவிஞனா? என்பது குறித்து, என்னுள் தீர்க்கமான நிர்ணயம் எதுவுமில்லை. அப்படி என்னை பிறர் அழைக்கிறார்கள். அதற்கு நான் என்ன செய்துவிட இயலும்? எழுதுவதற்கு அமைதியான சூழலும், உந்தும் மனமும் வேண்டும் என்பார்கள். சிலருக்கு பேரிரைச்சலிலும், சிருஷ்டி சாத்தியம். தகழி என்ற உலகப் புகழ்பெற்ற மலையாள எழுத்தாளர், தன் மனைவி காத்தம்மாவின் கைகளினால் நீராகாரம் வாங்கி அருந்திவிட்டு நீண்ட நேரம் எழுதிக் கொண்டே இருப்பாராம். அவருக்கு மனைவியின் கைபட்ட நீர், தீர்த்தமாகவோ, அல்லது தேவர் அருந்தும் சோமபானமாகவோ இருந்திருக்கக்கூடும். அந்தத் தீர்த்தத்தின் மகிமையினால் தான், செம்மீன், கயிறு, தோட்டியின் மகன் போன்ற ஒப்பற்ற நாவல்களையெல்லாம் தகழி எழுதிக் குவித்தாரோ? எங்கள் பாரதி மட்டும் எவ்வகையில் குறைச்சல்?

பாட்டுக் கலந்திடவே
அங்கேயொரு
பத்தினிப் பெண் வேணும் - எங்கள்
கூட்டுக் களிப்பினிலே
கவிதைகள்
கொண்டு தர வேண்டும்! என்று

காதல் வயப்பட்டு கசிந்து உருகினான். பாரதிக்குத்தான், எத்தனை எளிமையான எதிர்பார்ப்பு.

அது ஒரு சோர்ந்து போன விடியற் காலைப் பொழுது. என் கவிதைகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கும், தெருக் குழாயடியை பிரியத்தோடு பார்த்தேன். மனித நடமாட்டமின்றி வெறிச்சோடிப் போயிருந்தது. குழாயிலிருந்து சொட்டு சொட்டாய் நீர் ஒழுகிக் கொண்டிருந்தது. எங்கிருந்தோ பறந்து வந்த காகமொன்று, பைப்படி சீமந்து கட்டில் வந்தமர்ந்தது. கழுத்தை வளைத்து சுற்றுச்சூழலை நோட்டமிட்டபடி, கா, காவென்று குரல் எழுப்பியது. படியில் தேங்கி நின்ற நீரை, கூரிய அலகுகளால் மொண்டு குடித்தது. அதற்கு உற்சாகம் பிறந்திருக்க வேண்டும். பக்கவாட்டில் திரும்பி, உடலசைத்து தத்தி நடந்து, தேங்கி நின்ற நீர்விளிம்பில் சிறகு தாழ்த்தி, படபடவெனக் குளியல் நடத்தியது.

காகம் தினமும் குளிப்பதனால் தானோ அதன் மேனியும், நிறமும் துல்லியமாய் பளிச்சிடுகிறது. அடுக்கி வைத்த பிட்டுத் துண்டுகளாய் அடுத்தடுத்து நெருக்குதலாய் சிறுசிறு வீடுகள்.

பின்புறமாக ஒதுக்கத்திலிருக்கும் எனது அறை, சந்தடியும் பேச்சொலியும் சன்னமாக எப்போதும் கேட்டவண்ணமிருக்கும். ஒவ்வொரு இடுமுடுக்குக்குள்ளும் குருவிக் கூடு போன்ற சின்னச் சின்ன இல்லங்கள்.

நகரின் குடியிருப்பு நெருக்குதல்களை பறைசாற்றிக் கொண்டேயிருக்கும். தண்ணீர்த்தட்டுப்பாடு, மலசலக்கூட நெருக்கடி, அடிக்கடி வெடிக்கும் சண்டை, இத்தனை களேபாரத்திற்குள்ளும்தான், குடித்தனம், குடும்பம், திருமணம், மரணம் எல்லாம். இங்கு மூலை முடுக்குகளுக்கெல்லாம், காரணப் பெயர்கள் உண்டு. ஜாவாத் தோட்டம், பாய்தோட்டம், மரிக்கார் தோட்டம் என நாமமிட்டு அழைப்பார்கள். தோட்டத்திற்கு தோட்டம் சண்டியர்கள் இருப்பார்கள். எந்தப் பிரச்சினைகள் நிகழ்ந்தாலும், இவர்களே ஹீரோக்களாக முன் வந்து காரிய மாற்றுவார்கள். தோட்டமென்று இங்கு இடுகுறியிடுவது சற்றும் பொருத்தமில்லை. இங்கெல்லாம் தோட்டமும் கிடையாது. ஒரு மண்ணும் கிடையாது. இடிபாடுகள் நிறைந்த முடுக்கு ஜீவிதங்கள் தான் உண்டு. இயற்கைச் சூழலில் அமைந்த தோட்டங்களை கிராமங்களில் கண்ணாரக் கண்டு களிக்கலாம். கொழும்பு நகரின் கொரியாக்களில், பரபரப்பு நெருக்கித் தள்ளும் குடியிருப்புகளும், மிகுந்த ஜனசந்தடியுமே, காணப்படும். இங்கு உறவு, பிரச்சினை, காதல், சண்டை, வன்முறை எல்லாமே பழகிப் போன ஜீவித நியாயங்கள்.

பழக்கதோஷம் என்பது சூழலைப் பொறுத்தது மட்டுமல்ல. அட்டையைப் போல் இறுக்கமாக ஒட்டிக் கொள்ளும் தன்மை கொண்டது. இங்கு ஒருவித சேரிக் கலாசாரமே ஆட்சி செய்யும். இதுவே சாமானிய மக்களின் வாழ்வும், இருப்புமாக பரிமாணம் பெற்றுள்ளது. எனது அறைக்கு முன்புறத்தில் உள்ள இந்தக் குழாயடிப் பைப், குடியிருப்பாளருக்கு நிறையவே சேவை செய்கிறது என்ற வகையில், நகர சபையினரைப் புகழலாம். ஆனால், சில நேரங்களில் பைப்பை உடைத்துப் போட்டுவிட்டு, நீருக்குத் திண்டாடி நகர சபையை கெட்ட வார்த்தைகளால் தூஷிப்பவரும் இல்லாமலில்லை.

குளிப்பது, நீர் அள்ளுவது, துணி துவைப்பது, பாத்திரங்களைக் கழுவி சுத்தம் செய்வது போன்ற கிரியைகளால், திருவாளர் பைப், எப்போதும் பிஸி. இந்தச் சந்தடியில் ஒதுக்குப்புறத்தில் அமைந்துள்ள, எனது அறை ஒரு வரப்பிரசாதம்

எனலாம். வரிசையாக நிற்கும் வீடுகளைத் தள்ளி, ஒரு ஓரத்தில் அமைந்திருப்பதால், பெரிய சங்கடங்கள் ஏதுமில்லை. உள், வெளி ஓசைகளைக் கேட்டவாறு, கவிதை எழுதுவது, சுகமாக இருக்கும்.

அறையிலிருந்து பார்க்கும் போது எல்லா நிகழ்வுகளும் துல்லியமாகத் தெரியும். இளம் பெண்கள் குடங்களில் தண்ணீர் ஏந்தி, வித்தியாசமாக இடுப்பை வளைத்து, பிருஷ்டம் குலுங்க, தத்தித் தத்தி நடந்து செல்வது ரசனைக்குரிய விடயம். மூக்குத்தி மின்ன, ஒரு கறுப்பு நிற தேவதை, குழாயடிக்கு அடிக்கடி வந்து போவது வழக்கம். அவள் கண்களில் மின்னும் காந்த சக்தியினால், எனது கவிதைகளுக்கு சிறகு முளைக்கும். நீராடும் பொழுதுகளில், அவள் மேனி வனப்பில் சித்தம் உருகிப் போவேன்.

பல சந்தர்ப்பங்களில் வாஞ்சை கலந்த பார்வை வீச்சுக்களை பிரியத்துடன் பரிமாறிக் கொள்வோம். அருகில் நின்று பேசிக் கொள்ளும் சந்தர்ப்பம் கிட்டாதா? என ஏங்கினேன். ஒரு நாள் அவள் நீரையள்ளி இடுப்பில் வைக்கும் போது கைதவறி மண்குடம் கீழே விழுந்து விட, சுக்கு நூறாய் உடைந்துவிட்டது. அந்நிலையில் அவளது ஏமாற்றத்தையும், அதிருப்தியான முக பாவத்தையும் பார்த்து அவள்பால் இரக்கம் கொண்டேன். நல்ல வேளை குழாயடியில் யாரும் இருக்க வில்லை. மின்னலாய் ஒரு யோசனை மூளையில் படர்ந்தது.

அறையில் கேட்பாரற்றுக் கிடந்த எவர்சில்வர் குடமொன்றினை எடுத்து, அவள் கையில் கொடுத்தேன். முதலில் நாணம் மேவ மறுத்துவிட்டு. பின்னர் அதைப் பெற்றுக் கொண்டாள். அந்த விழிகளுக்குத் தான் எத்தனை ஈர்ப்புச் சக்தி. நன்றி கூறி, பிருஷ்டம் குலுங்க நடந்து சென்றாள். அந்த மூக்குத்தி தேவதை பற்றிய தகவல்கை அறிய பெரிதும் ஆவலுற்றேன்.

அவளைப் பற்றிய நினைவுகள் அலை ஓசையாக ஆர்ப்பரித்தவண்ணமிருந்தன. நான்காவது வீட்டுத் தொடரில் அவள் வாசம் செய்வதாகவும், மிக வறிய சூழலில் வாழ்வதாகவும், இரு பிள்ளைகளுக்குத் தாய் என்றும், கணவன் அவளை விட்டுப் போய், மூன்றாண்டுகள் ஆகிவிட்டதாகவும் தற்போது பாட்டியின் பராமரிப்பில் இருப்பதாகவும் எல்லாத் தகவல்களையும் அறிந்து கொண்டேன்.

காலைக் கருக்கலில் விடியலின் விகசிப்பு மண்ணில் கவியுமுன் - நாள்தோறும் விடிய ஐந்து மணிக்கு குழாயடியில், அவள் காட்சி தருவாள். நாளடைவில் பார்வை பரிமாறல்களின் பின், கடிதங்களை கைமாறிக் கொண்டோம். பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நேசித்தோம். அடிக்கடி ஏற்படும் பொருளாதாரக் கஷ்டங்களுக்காய் நான் அவளுக்கு உதவி வந்தேன். நமக்குள் இறுகிப் போன வாஞ்சையும், காதலும் பிறர் கண்ணுக்குத் தெரியாதவாறு, சூட்சுமமாய் மறைத்து வந்தோம்.

அவளை ஒரு முறை என் அறைக்கு வருமாறு கனிவுடன் அழைத்தேன். பதிலேதும் கூறாமல் புன்னகை சிந்தி மறைந்துவிட்டாள். வருவாளா? வர மாட்டாளா? என்ற ஏக்கம் மனதிற்குள் நெருடலாயிற்று. அன்று கிழக்கு வெளிப்பதற்கு முன், அதிகாலையில் சந்தோஷித்த முகத்துடன் காட்சி தந்தாள். கப்பியிருந்த விடியலிருளை மெல்லக் கலைத்துவிடுமாற் போல, சிறு தூறலும், லேசான மழையும் வீசவாரம்பித்தது. நான் அதிசயத்து மலைத்துப் போய் நின்றேன். வெட்கம் கவிய தலை குனிந்தவாறு தேவதைக் கவர்ச்சியுடன் என்னருகில் வந்து நின்றாள்.

என் தேகாந்திரமெல்லாம் மகிழ்ச்சிக் குவியலில் திளைத்துச் சிலிர்த்தது. குழாயடி ஓய்ந்து போயிருந்தது. விடிகாலைக் குளிர்காற்று உடலுக்கு இதமளித்தது. சேவலொன்று பெருங்குரலெடுத்து கூவித் தொலைத்தது. இருவரும் நெருக்கமான சுகத்தழுவலில் காலம் மறந்து, ஆன்மா களித்து குதூகலித்தோம் அனுபவ உலகின் ஆழங்களைத் தழுவி வெப்ப மூச்சுக்களைப் பரிமாறினோம்.

மூன்று நாட்களாக என் அன்பிற்குரியவள் குழாயடிப்பக்கமே வராமல் போனது, என்னுள் ஆச்சரிய அதிர்வுகளை எழுப்பின. நமது தொடர்பு பற்றி யாரும் அறிந்து ரகளைக்கு வரப் போகிறார்களா? அல்லது அவளுக்கு ஏதும் திடீர் சுகயீனமா?

நெஞ்சுக்குள் ஆதங்கம் பூதாகாரமாய் எழுந்தது. அவளது நினைவுகளை, எவ்வளவு முயன்றும் தவிர்க்க இயலாமல் இருந்தது. நெஞ்சு இனம் புரியாத நெருடலாய் இறுகிக் கனத்தது. அந்த எழில் பிம்பம் அடிக்கடி வந்து நினைவுகளை வருடியது. எட்டாமல் போய்விட்ட ஒன்றுக்காய், மனம் வெறுமையில் கிடந்து தவித்தது.

அவளுக்குப் பதிலாக குழாயடிக்கு பாட்டி, நீரள்ள வந்தாள். அவளைப் பற்றிய விபரங்களை பாட்டியிடம் சிநேகபூர்வமாகக் கேட்டறிந்தேன். ஆச்சி சொன்ன தகவல்கள் அதிர்ச்சி தருவனவாய் இருந்தன. நேற்று முன்தினம் நீண்டகால இடைவெளிக்குப் பின் அவளது கணவன் வந்தானாம். இருவரும் சமாதானமாகி பிள்ளைகளோடு நேற்று ஊருக்குப் போய் விட்டார்களாம். மீண்டும் இருப்புக்கு இங்கு வரும் சாத்தியம் இல்லையாம். இவ்வளவு நேசமாய் பழகி, என்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் இப்படிப் பறந்து போய் விட்டாளே! என்று துடியாய் துடித்து நின்றேன் நான். பெண்களின் நேசமெல்லாம், புல் இதழ் பனித்துளிதானா? கேள்விக் குறியாய் அதிர்ந்து நின்றேன். குழாயடி வெறுமை தட்டிய மயானமாய் காட்சி தந்தது.

அலுவலகம் விட்டு ஆயாசமாய் அறைக்குத் திரும்புகிறேன். பக்கத்து வீட்டுச் சிறுவன் கடிதமொன்றை நீட்டிவிட்டு விரைகிறான். கடிதம் என் அன்பிற்குரியவளிடமிருந்தா? ஆர்வத்தோடு பிரித்துப் படிக்கிறேன். இல்லை!

அன்பான கணவருக்கு,

எங்களை அடியோடு மறந்து தான் போனீர்களா? நீங்கள் ஊருக்கு வந்து இரண்டு மாதங்கள் சென்றுவிட்டன. கொழும்பு வாழ்க்கை இப்போது உங்களுக்கு கூடுதல் சந்தோஷத்தை தருவதாய் இருக்கும். இங்கு சின்ன மகனுக்கு தொடர்ந்து கடுமையான காய்ச்சல். மருந்துக்கு கொஞ்சமும் குணமேயில்லை. இரவெல்லாம் உங்களைத் தேடி அரட்டுகிறான். உடன் புறப்பட்டு வரவும். அவசரம்.

இப்படிக்கு உங்கள் மனைவி.

துயரம் செறிந்த மனதுடன் ஊருக்குப் போக மினி பஸ்ஸில் இடம்பிடித்து அமர்கிறேன். மனைவியும் பிள்ளைகளும், இப்போது சோக பிம்பங்களாக நெஞ்சை அழுத்துகிறார்கள். பஸ் புறப்படுகிறது. கொழும்பு நகரின் பேய் வெப்பம் ஏ.ஸீக்குள் பெரிதாய் உறைக்கவில்லை. ■

**- மல்லிகை, ஒக்டோபர் 2003**

கடந்த வருடத்தில் மார்கழி 2002 முதல், கார்த்திகை 2003 வரை, 40 கதைகளை, மல்லிகை பிரசுரித்துள்ளது. மு. பஷீரின் குழாயடியும், குறுகுறுக்கும் நினைவுகளும் கதை மனதை ஈர்க்கும் எழுத்தோட்டம், எதிர்பாராத முடிவு என்பன கதையின் வெற்றியை நிலைநிறுத்துகின்றன. மு.பஷீரின் இக்கதை இவ்வருடம் வெளியான படைப்புகளில் முதன்மையாக நிற்கிறது.

ஓராண்டு மல்லிகைச் சிறுகதைகள்
ஆய்வு – பிரகலாத ஆனந்த்
மல்லிகை ஆண்டு மலர், 2004

# தலைப்பிறை

அருள் சுரக்கும் ரம்ழான் மாதம் இது. எல்லோரது முகங்களிலும் உற்சாகம் அணையுடைத்துப் பாய்கிறது. நன்மைகளைக் கொள்ளை அடிக்கும் மாதமிது என்பார்கள். இருக்காதா பின்னே? நன்மைகளை எதிர்கொள்ளலாம். ஆன்மீகச் சுகத்தை அருகணைத்துக் கொள்ளலாம்; என்பது விசுவாசிகளின் கணிப்பு. மேகத் திரை விலகும் முன்னிரவில், இரு முனையும் கூர்மையான பிறைநிலா, வானில் ரம்மியமாக பவனி வந்தது. ஜன்னல் திரை விலக்கி, எட்டிப் பார்க்கும், பருவப்பெண்ணின் பொலிவு முகம் போல், அது கோலம் காட்டியது.

தலைப்பிறையைத் தரிசித்துவிட்ட பேரானந்தம் சிறுவர், பெண்கள் முகங்களில் பளிச்சிட்டது. கிராமம் சுறுசுறுப்பில் களை கட்டியது. கடைகளில் வியாபாரம் சூடு பிடிக்கத் துவங்கியது. தொழுகை தராபீஹ், குர்ஆன் ஓதல், நீயத்து வைத்தல் போன்ற சகல காரியங்களாலும், இல்லங்கள் விழிப்படைந்தன.

சபீனா துயரம் செறிந்த முகத்துடன் வாசற்படியில் அமர்ந்நதிருக்கிறாள். அவளது உள்ளுணர்களில், பிழிந்துருக்கும் துயர நினைவோட்டங்கள். பாதையின் சந்தடிகளில் மனம் ஒன்றாது, நீண்டதொரு பெருமூச்சுவிட்டாள். இயலாமையின் இறுக்கம் அடிமனதைத் துளைத்தது. தலைப்பிறை தொடுவானில் சுடர்ந்தது. இனி பிள்ளைகள் மூவருக்கும், தனக்கும், பின்னிரவு சஹர் உணவு சமைக்க வேண்டும்.

கையில் காசின்றி நோன்புக் கடமைகளை எவ்வாறு நிறை வேற்றுவது? ஆண் துணையோ, வருவாயோ இன்றி, இரண்டு குமருப் பிள்ளைகளோடும், சின்ன மகனோடும், நாட்களைக் கடத்துவது, பாரிய சுமைகளாகி, அவளது அன்றாட வாழ்வு பாதிப்பில் திணறியது. பகல் பொழுது பூராவும், உபவாசம் இருப்பதற்கு, உடம்பில் தெம்பு வேண்டுமே. இரவு கொஞ்சம் புஷ்டியான ஆகாரம் உட்கொண்டால் தான், பகல் பொழுதின் பசிக்குத் தாக்குப் பிடிக்கும்.

சாப்பாடுதான் நோன்புக்கு ஆதாரசுருதியா? ஒரு பேரீச்சப் பழத்தை சாப்பிட்டுவிட்டு, நோன்புபிடித்த அடியார்களைப் பற்றி வரலாறு சொல்கிறதே! தீனும் தேவை, த்தீனும் தேவை, முன்னது ஆன்மாவுக்கு, பின்னது உடலுக்கு. கையில் காசின்றி, கொடுத்துதவ யாருமின்றி நான்கு வயிறுகளுக்கு, நோன்புநாளில் சஹர் வேளைக்கு, சுவையாகச் சமைத்துப் போட சபீனாவுக்கு வக்கேது?.

'இண்டைக்கு பட்டினி நோன்புதான்! தலை நோம்பெண்டு என்னத்த செய்ய?'

பொருளாதார நெருக்கடியில் அனலிலிட்ட புழுவாய், அவள் மனம் வெந்து தவித்தது. மூத்தவள் பெரோஸா, ஜன்னலுக் கருகில் அமர்ந்து பக்தியோடு குர்ஆன் ஓதிக்கொண்டிருந்தாள். இளையவள் சரீனா சோர்ந்து போய், தாயோடு நெருக்கமாய் வந்து ஒட்டிக்கொண்டாள்.

"இண்டைக்கு ராவைக்கு நோன்பு புடிக்க, என்ன உம்மா செய்யப் போற?" ஆவலோடு கேட்டாள் இளையவள்.

மகளின் முகத்தை வெறுமையோடு, சுவாரஸ்யமின்றி பார்த்தாள் தாய்.

"என்ன செய்ய மகள்! அல்லாஹ் வைச்சபடி நடக்கும். இல்லாட்டி எல்லாம் பட்டினி நோன்பு புடிப்போம்!" மகன் உம்மாவின் மடியில் தலையை வைத்தவாறு,

"எனக்கேலா பட்டினி நோன்பு புடிக்க, உம்மா! அடுத்த வூட்டு கமால்ட வாப்பா, கடைக்குப் பெயித்து, எறைச்சி, தயிரு, வாழப்பழம், எல்லம் மிச்சமா கொண்டாந்தீக்கி. எங்கட வூட்டில தான் எப்ப பாத்தாலும், இல்ல!"

சின்னவன் வீட்டில் நித்தமும் நிலவும் வறுமைக்கு எதிராய் போர்க்கொடி தூக்கினான். சபீனாவின் மன அரங்கில் பழைய நினைவுகள் அரங்கேறின.

"அவரு உசிரோட இருக்கச் செல்ல, எங்களுக்கு எந்தக் கொறையையும் வைக்கல்ல. ராவுபகலெண்டு பொன்ஜாதி, புள்ளகள், எண்டு பறந்து திரிஞ்ச எங்கட தலஎழுத்து இப்பிடியாப் போன. யா அல்லாஹ்! முப்பது நோன்பும், பெருநாளும், எல்லா

வருஷமும் மனசு போல நடந்த ஐஞ்சி வருசத்திற்கு முந்தி, அந்த வாகன விபத்து நடக்காம இருந்தீந்தா இண்டைக்கும் இந்தக் குடும்பம், நிம்மதியா ஈந்தீக்கும். இனி எங்களுக்கு அல்லாஹ் விட்ட வழிதான். அந்த மனிசன் சுவர்க்க வாதியாச் சேரோணும்!"

சபீனா நெஞ்சுருகிக் கண்ணீர் சொரிந்தாள்.

அவளது துயரப்பிரலாபம் பிள்ளைகளையும் நெஞ்சுருக வைத்தது. அமீனின் மறைவிற்குப் பிறகு, குடும்பச் சுமை, சபீனாவின் தலைக்கு இடம் மாறியது. ஏழைப் பெண்ணான அவளால், கூன்விழுந்து நிர்க்கதியில் வீழ்ந்துவிட்ட, இந்தக் குடும்பத்தை எவ்வாறு நிமிர்த்திவிட முடியும்? அவளுக்குச் சவாலாய் அமைந்துவிட்ட வாழ்வியல் அழுத்தங்கள் இவை.

"இந்தக் கொமருகள் ரண்டையும் எப்படிக் கரைசேர்ப்பேன்? சின்னவனை நல்லாப் படிக்க வைச்சி, எப்போ மனிசனாக்குவேன்? போன வருசம் நோன்புக்கெண்டா, எங்கட ஊரு அனஸ் ஹாஜியாரு, ஏழு எளியதுகளுக்கு தல நோன்பண்டைக்கே, போதுமாக நல்ல ஒதவிகள் செஞ்சாரு. அவருக்கு அல்லா பரக்கத் செய்யயோணும். இந்த வருஷம் பாவம், பாரிச வாதத்தில் யாவாரமும் பட்டுப் பெயித்து, வியாதீல படுத்துட்டாரு. கஞ்சக் கபோதிகள் நல்லா இருக்கியானுவள். நல்ல மனுசருக்குத் தான், எல்லாப் பொக்கத்தாலேயும் கஷ்டம்."

சபீனா ஆற்றாமையினால் புலம்பிக் கொண்டிருந்தாள். இந்த வறுமைப் பிடியிலிருந்து மீட்சி பெற அவள் விடியல் சுபஹிப் எழும்பி, கடையப்பம் சுட்டு விற்று வந்ததில், பிள்ளைகளுக்கு ஒரு நேர ஆகாரமாவது கிடைத்து வந்தது. இனி ஒரு மாதத்திற்குப பெரிய முடக்கம் தான். நோன்பு நாட்களில் கடையப்பம் கேட்டு எவன் வருவான்? இத்யாதிப் பிரச்சினைகள், அவளின் உள்ளுணர்வுகளை உலுப்பிக் கலைத்தன. பள்ளிவாசல் ஒலிபெருக்கியிலிருந்து அறிவித்தலொன்று காற்றோடு கலந்து வந்தது. "ரம்ழான் தலைப்பிறை தென்பட்டுள்ளதால், ஜமா அத்தார்கள், தராபீஹ், தொழுகைக்கு வருமாறு அழைக் கின்றோம்."

வானத்தை அக்கறையோடு அண்ணார்ந்து பார்த்தாள் சபீனா. தங்கத்துண்டை நறுக்கி ஒட்டினாப் போன்று, அழகு

ஜோதியாய், ரம்ழான் பிறை, சுடர்ந்தது. ஊரும், பள்ளிவாசலும், உற்சாகத்தில் மிதந்தன. பக்கத்து வீட்டுப் பெண்கள், தலையில் முக்காட்டை இட்டவாறு, அலுவல்களில் சுற்றிச் சுழன்றனர்.

சபீனாவின் வீட்டில் இன்னும் அடுப்பெரியவில்லை. அது வயிற்றில் தாராளமாக எரிந்தது. பிள்ளைகளின் முகங்களில் கவலையின் ரேகைகள் படர, அங்கு ஒரு அசாதாரண மௌனம் நீடித்தது. அவள் அடுப்படிக்குச் சென்று, அசிரத்தையாக, சட்டிப் பானைகளைத் தடவிப் பார்த்தாள். எப்போதோ பத்திரப்படுத்தி வைத்திருந்த, கொஞ்சம் அரிசி கண்ணில்பட்டது. இன்னொரு பாத்திரத்தில், வைத்திருந்த, கொஞ்சம் மரவள்ளிக் கிழங்கும் இருந்தது. அவள் நெஞ்சை நேராக நிமிர்த்தி ஒரு சோக நெடுமூச்செறிந்தாள்.

'அல்ஹம்துலில்லாஹ்! இதக் கொண்டாவது இண்டைய நோன்பை தொடங்கலாம்', என்ற நினைப்பில் வேலையில் மூழ்கினாள்.

முகத்தை அஷ்டகோணமாக்கிக் கொண்டு, இளையவள் சொன்னாள். "இது என்ன உம்மா! வெறும் மஞ்சக்காயும், சோறும், திண்டுட்டு நோன்பு புடிக்க ஏலுமா? சஹர் சாப்பாட்டுக்கு என்னத்தத் திண்ணுற?"

அவளது கேள்வியில் வக்கற்ற ஏழ்மையின் தொனி, காட்டமாய் கலந்திருந்து, அந்தக் கேள்விக்கணை சபீனாவின் நெஞ்சைக் கீறிக் கிழித்தது. கையிலிருந்த கிழங்கையும், கத்தியையும் மூலையில் தூக்கி எறிந்தாள்.

ஆத்திரமும், அழுகையுமாக வார்த்தைகள் உஷ்ணமாக வெடித்தன. "நான் என்னத்தடீ செய்ய? எல்லாம் சேந்து உம்மாட சதைய பச்சையா, வெட்டித் திண்டுட்டு, நோன்பு புடியுங்க! அந்த மனுசனுக்குத் தந்த மௌத்த, அல்லா எனக்குத் தந்தீக்க, நிம்மதியாப் பெயித்தீப்பன். இப்ப நானொருத்தி ஈந்துகொண்டு கருமம் தொலைக்கிற."

கண்ணீர் மடை உடைத்துப் பெருக, தொண்டை கரகரத்தது. தலை கிறுகிறுத்தது அவளுக்கு. வேலைகளை நிறுத்திவிட்டு, நிலைப்படியருகே அமர்ந்து கொண்டு, உரத்த குரலில் அழுதாள். உம்மாவின் துயரம்கண்டு பேதலித்து வாரிசுகள், வாய்பேசா மௌனிகளாயினர். அவர்கள், ஓதலும்,

தொழுகையும் முடித்து, பசித்த வயிறுகளோடு படுக்கைக்குச் சென்றனர்.

சோகங்களை அடைகாத்து அனுபவப்பட்ட சரீனா மீண்டும் அடுக்களைக்குச் சென்று இருந்ததைக் கொண்டு சமைத்துவிட்டு, தொழுது துவாச் செய்துவிட்டு, ஆன்மீக ஆறுதல் பெற்றவளாய் பசிமறந்து பாயில் சரிந்தாள்.

பக்கத்தில் நிர்விசாரமாக உறங்கும் சின்னவனின் தலையை விரல்களால் வருடிக் கொடுத்தாள். பழைய நினைவுகளை மீண்டும் மீட்டிப் பார்க்க மனம் விரும்பினாலும், உடல் அசதியில் சிறிது கண் அயர்ந்தாள். மூடிய இமைச்சிறகுகளில், கனவொன்று கருக்கொண்டது. அமீன் சிரித்த முகத்துடன், கம்பீரமாக காட்சி கொடுத்தான்.

"சபீனா! இண்டைக்கு தலை நோன்புதானே! கோழி தயிரு, பழம், மரக்கறி, அரிசி, எல்லாச்சாமானும் கொண்டு வந்திரிக்கி, பிள்ளைகள் எல்லாரையும் எழுப்பி நோன்பு புடிக்க வையுங்கோ! அல்லாஹ் சொல்றான், நோன்பாளிகளுக்கு கூலி கொடுக்கும் பொறுப்பு எனது சொந்தக் கண்காணிப்பில் இருக்கு, எண்டு, முப்பது நோன்பையும் முழுக் குடும்பமும் சரியா புடிக்கோணும்!"

அவளால் நம்ப முடியவில்லை. தன்னைப் பிடித்து பேயாட்டம் போடும் துயரங்கள் எல்லாம், இனி சூரிய ஒளியில் மறையும் பனித்துளிகளாக அகன்றுவிடுமா? இனி காலமெல்லாம் அவரோடு கைகோர்த்துக் கொண்டு வாழும், பாக்கியம் வந்து விட்டதா? கனவுச் சுழற்சி, நினைவின் எழுச்சி, எல்லாம், கைநழுவிப் போக, மறுகணம், கண்விழித்துப் பதறியடித்துக் கொண்டு எழுந்தாள்.

அற்ப சந்தோஷத்தை ஒரு கணம் மட்டும் தந்துவிட்டுக் கலைந்து போன, அந்தக் கனவை எண்ணி மனதிற்குள் குமைந்தாள். தடுமாறித் தவிக்கும் மனதை ஆசுவாசப்படுத்தியவாறு, மீண்டும் உறக்கத்தைச் சிறையிட எத்தனித்தாள், தோல்விதான். இரவு பன்னிரண்டு மணிக்கு மேலாகிவிட்டது. வீட்டு முற்றத்தில் வாகனமொன்று, நிறுத்தும் ஓசை கேட்டது. தொடர்ந்தாற் போல் யாரோ உரையாடுவது தெளிவின்றி கேட்டது.

சிறிது நேரத்தில்,

"தாரு வூட்டுல, சபீனா தாத்தா! கதவத் தொறங்கோ!" கேட்டுப் பழக்கப்பட்ட குரலாக உணர்த்தினாலும், பதட்டம் தணியாமல், "தாரு இந்த நேரத்தில?" என்று வினவியவாறு கதவைத் திறந்தாள். நலன்புரிச் சங்கத்தைச் சேர்ந்த வாலிபர், சிலர் வாசலில் நின்றார்கள்.

"சபீனாதாத்தா! கொழும்பிலிருந்து ரபீக் ஹாஜியார், வந்திருக்கிறார், ஸக்காத் கொடுக்க. நிறைய பணம் சாப்பாட்டுச் சாமான் எல்லாம் கொண்டு வந்திரிக்கார். ஊரில உள்ள ஏழைகள்ட லிஸ்டை நாங்க குடுத்தோம். அதில முதலவாது இடம் உங்கட தான். நோன்பு முப்பதுக்கும் தேவையான எல்லாச் சாமான்களும் இதில் இரிக்கி. இந்தாங்க இதில் பணமும் இரிக்கி. ஒரு சந்தோஷமான செய்தி. உங்கட குடும்பத்தப் பத்தின எல்லாத் தகவல்களையும் ஹாஜியாருகிட்ட சொன்னோம். உங்கட மகள்கள் இரண்டு பேருக்கும் ரெண்டு தையல் மெசின்கள், தாரதாக, வாக்குறுதி தந்தீக்கிறார்."

சபீனாவின் வீட்டிற்குள் சாமான் பொதிகளை, கொண்டு வந்து வைத்தார்கள் இளைஞர்கள்.

"அல்ஹம்துலில்லாஹ், ஒங்க எல்லோருக்கும் அல்லாஹ் நாயன் பரக்கத் செய்யோணும்" சேலைத் தலைப்பால் தலையை மறைத்தவாறு, இரு கையேந்தி துவா கேட்டாள்.

அவர்கள் சென்றதும், கதவைச் சாத்த வந்த சபீனா, எதேச்சையாக வானத்தைப் பார்த்தாள்.

ரம்ழான் மாதத்து தலைப்பிறை

பிரபஞ்சத்தை எழிலூட்டிக் கொண்டிருந்தது. ■

**- 20 டிசம்பர் 1998**

# விட்டில்

தெப்பமொன்றில் இருந்தபடி கடற்காற்றை அனுபவித்துச் சூழலை வெறித்துப் பார்த்தான் பீட்டர். மஞ்சள் கிரகணம் கவிந்து, உறைக்கத் தொடங்கிய முன் காலைப் பொழுது, எதிலும் பிடிப்பற்ற ஒரு வெறுமை உணர்வு அடிமனதை நெருடியது. நீர்கொழும்பு கடற்கரை, எப்போதும் போல் இரைச்சலும் சந்தடியுமாக ஓசைகொண்டு ஒலித்தன. மீன் சந்தையும் சிறுசிறு கடைகளும், களைகட்டிப் போயிருந்தன. இவனுக்கு இவை பழகிப் போன எதிர்கொள்ளல் தான். என்றாலும் உற்சாகமூட்டும் சங்கதிகளாய் இல்லை.

இவனது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாலும், கடற்கரையில் தான், இவனது பெரும்பொழுது கழியும். மீனவச் சமூகத்தின் வாழ்வு, தாழ்வையெல்லாம் நிர்ணயிக்கும் பிரதான தளம் கடல்தானே? முன்பெல்லாம் சிறுவர்களோடு சேர்ந்து, படகு தள்ளுவது, வலை மீன் பொறுக்குவது, மீன்களை துண்டாக்கி வெட்டிக் கொடுப்பது, போன்ற காரியங்களில் ஈடுபாடு மிகுந்திருந்தது.

கிடைக்கும் வேதனம் கம்மியென்றபடியினால், அவற்றை இப்போது நிராகரித்துவிட்டான். கல்வி அறிவு குறைந்த போதும், வம்சத் தொழிலிருந்து நீங்கி, வருவாய் தரக்கூடிய ஒன்றைப் பற்றிப் பிடிக்க வேண்டுமென்பது அபிலாஷை. வீட்டில் நிலவும் கடும் வறுமையும், மன அழுத்தங்களும், இவனுக்கு கசப்பானவையாகவே இருந்தன. கடற்காற்று சீதளக்குளுமையை முகத்தில் அழுத்திப் பதித்துவிட்டு விலகிச் சென்றது.

ஒவ்வொரு முறையும் புதிய பிறப்பெடுத்து வந்து தழுவிக் குதூகலிக்கும் காற்று, மனதிற்கு இதமளிக்கும். அதன் பிரக்ஞையை உணர்தலில் இவனுக்கு அலாதிப் பிரியம். பாதை நெடுகிலும் நீண்டு வளர்ந்திருந்த மரங்கள், அழகு காட்டின. தெருவின் முன்விழுந்து நீந்தும், மரநிழல் அசைவுகளை, பீட்டர் கூர்ந்து நோக்கினான்.

நிழல்கள் எவ்வாறு வெறுமனே அசையும்? ஆடியசைந்து பிம்பம் காட்டும் மரங்களின் நர்த்தனமின்றி மரங்களுக்கு ஆடியசையும் பலம், தன்னிச்சையாக வர, எவ்வாறு சாத்தியம்? ஆட்டுவிக்கும் மூலசக்தியே காற்றுத் தானே? காற்றையேன் யாரும் பெரிதாய் கணக்கிலெடுப்பதில்லை. வாயுவை உள்வாங்க மறுத்த எந்தத் தளத்திலும், மனிதனால் உயிர் வாழ்ந்திடல் இயலுமா? காற்றும், மின்சாரமும் மனிதனது அன்றாட வாழ்வில் எத்தனை நெருக்கமாய் இரண்டறக் கலந்துவிட்டன. ஒட்டியே வாழும், மனைவி மக்களின் உறவினைப் போல.

இடைவிடாது வீசிய காற்றின் எதிர்வேகத்தில் பீட்டர் மேனி சிலிர்த்தான். ஒரு ஆனந்த அனுபூதி, உடலெங்கும் தழுவிப் பரவும் சுகம். தலை நிமிர்த்தி நீளும் நேர்க்கோட்டை தரிசித்தான்.

இடப்புறத்தே பழைய ரெஸ்ட் ஹவுசும், கொட்டுவப்பிட்டிய விஸ்தாரமான விளையாட்டு மைதானமும், பாதையெங்கும், அடர்ந்து வளர்ந்து குளிர்மை கொட்டும் மரங்களும், வலப்புறம் - ஹைதர் கால, பழைய கட்டிடமான மீபுர சினிமா தியேட்டரும், மேட்டு நிலத்தில் உயர்ந்து தெரிந்த மாவட்ட நீதிமன்றமும், தொலைவில் - நீர்கொழும்பு சிறைச்சாலையின், பிறைவடிவ வாயிலும் இவனுக்குப் பரிச்சயமான காட்சிகள் தான் என்பது மட்டுமல்ல தினமும் காலாறச் சுற்றித் திரியும், நகரின் கேந்திரப் பிரசித்தி பெற்ற தளங்களும் தான். முன்னக்கரை களப்புக்கருகில் எழுந்தருளியுள்ள தனது இல்லமாகிய ஓலைக்குடிசையை ஒரு கணம் எண்ணித் துயருற்றான். கறையான் அரித்து இற்றுப் போயிருக்கும், ஓலைக் குடிலின் ஆயுள் நீண்ட காலங்களுக்குத் தாக்குப் பிடிக்கப் போவதில்லை என்ற உண்மை மனதை நெருடியது.

மழைக்காலங்களில் களப்பு நீர் பெருக்கெடுத்து ஓடும். இடுப்பளவு தண்ணீரில், வந்தது ஆபத்து என அந்தரத்தில் குடிசை தள்ளாடும். அதைத் திருத்திக் கட்டுவதற்கு ஏது பணம்? பதினான்கு வயது சிறுவனான பீட்டரின் தலையில், குடும்பச்சுமை கனத்து பூதாகரமாய் சங்கடப்படுத்தின. இவன் அவ்வவ்போது செய்து வந்த நிரந்தரமற்ற உபதொழில்கள் குடும்பத்தின் வயிற்று அக்கினியைத் தவிர்ப்பதற்கு போதுமானதாய் இருக்கவில்லை. வயதுக்கு வந்த அக்காள், அம்மா, தம்பி, பாட்டி, இவன் என ஐந்து ஜீவன்களின் வாழ்வு ஆட்டங்கண்டு கொண்டிருந்தது.

இவர்களை நிர்க்கதிக்கு ஆளாக்கிவிட்டு, எவளோ ஒருத்தியோடு ஓடிப்போன தந்தை ஜோசப்பை மனம் வெறுத்து திட்டித் தீர்த்தான். அவன் இவர்களுடன் ஒன்றியிருந்து உழைத்து வந்த காலங்களில் சாப்பாட்டுக்குப் பஞ்சமில்லாமலிமிருந்தது. அவன் அன்றாடம் கடலுக்கு மீன்பிடிக்கப் போய்வந்ததில், வீட்டுக்கஷ்டம் விலகியிருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன் ஜோசப் கற்பிட்டிக்குப் போனவன், இன்று வரை வீடு திரும்பவேயில்லை. எல்லா இடங்களிலும் விசாரித்துப் பார்த்ததில், எவ்விதத் துப்பும் கிடைக்கவில்லை. மிகச் சமீபத்தில் கிடைத்த செய்தி. மூன்று பிள்ளைகளுக்குத் தாயான ஒருத்தியோடு, மன்னாரில் அவன் கள்ளக்குடும்பம் நடத்துவதாக.

'சோமால மாதாவே! எண்ட சிறுக்கி, சிறுக்கன்களுக்கு வஞ்சகம் செஞ்சிபோட்டு, இந்த நாய் ஒரு வேசத் தோரையோட, ஓடிப் பெயித்திட்டான். அவன் எண்ட கைக்கு கிடைக்கோணும், உத்தமயத்தானே, பாற மீனை வெட்றாப் போல அரிஞ்சி போடுவன்.'

கடுமையான கஷ்டங்களை எதிர்கொள்ளும் போது, மனம்வெதும்பி கணவன் ஜோசப்பை திட்டித் தீர்ப்பாள், தெரேசா. மகள் மேரிக்குப் பேசிவந்த திருமண ஏற்பாடு கூட இவர்களது பொருளாதாரக் கஷ்டத்தில் தூரவிலகிப் போயின. இந்த அவலங்களையெல்லாம் எண்ணி நெஞ்சுக்குள் காயப்பட்டவனாகத் தலையைக் குனிந்து பீட்டர் பெருமூச்சு விட்டான்.

திடீரென அவனருகில் ஒரு மெல்லிய நிழலசைவு.

"ஹலோ ஹவ் ஆர் யூ? ஐயேம் ஜோன்சன், பிரம் சுவிஸ்."

இவன் தலை உயர்த்தி ஆச்சரியத்தோடு ஏறிட்டுப் பார்த்தான். நடுத்தர வயது மதிக்கத்தக்க ஒரு வெள்ளையன். கொலோன் வாசம் மணக்க, புன்முறுவல் பூத்தவாறு, அருகில் நின்றான். தோற்றத்தில் கனிவு துலங்கியது. கையில் கெமராவும் தோளில் பையுமாக, சிநேகபூர்வமாக இவனோடு உரையாடினான்.

"நீ ஏன் மகிழ்ச்சியாக இல்லை? என்ன கவலை? என்னால் உனக்கு உதவ முடியும். சுவிஸில் நான் ஒரு பிரசித்தி பெற்ற நட்சத்திர ஹோட்டலுக்கு உரிமையாளன். அதோ இருக்கும் பழைய ரெஸ்ட் ஹவுசில் ஒன்பதாம் இலக்க அறையில்

தங்கியிருக்கிறேன். நீ எப்போது வேண்டுமானாலும் என்னை வந்து சந்திக்கலாம். ஸ்ரீ லங்காவில் இரண்டு மாதங்கள் மட்டுமே தங்கியிருப்பேன்."

இவன் தனக்குத் தெரிந்த உடைந்த ஆங்கிலத்தில் விடை பகன்றான். தன் குடும்பம் மிகவும் கஷ்டத்தில் இருப்பதாகவும், ஏதாவது ஒரு தொழிலை, தேடிக் கொள்ள வேண்டுமென்றும், தன் ஆதங்கத்தை அவனிடம் வெளிப்படுத்தினான். வெள்ளையன் மிகவும் அனுதாபப்பட்டவனாக, பையைத் தடவி, சொக்லட், பிஸ்கட், பக்கட்டுகளை அன்பளிப்பாக வழங்கிவிட்டு பர்ஸைத் திறந்து ஐநூறு ரூபாய் நோட்டையெடுத்து இவன் கையில் திணித்தான்.

பீட்டருக்கு ஆச்சரியமாக இருந்தது. வெள்ளையர்களில் இத்தனை இரக்க சுபாவமுள்ளவர்களும் இருக்கிறார்களா? என வியந்தான்.

"டியர் பிரன்ட், டோண்ட் ஒரி, இரண்டு மாதங்களுக்கு என்னிடம் உனக்கு வேலை இருக்கிறது. என்ன வேலையென்று தெரியுமா?"

உதட்டோரத்தில் புன்னகையைத் தவழவிட்டவாறு, பீட்டரின் தோற்றத்தை அர்த்த சிரத்தையோடு, கூர்ந்து பார்த்தான். அழுக்கேறிய கட்டைக் கால்சட்டை, ட்டீ சேர்ட், மேலுதட்டில் படர்ந்திருக்கும் மெல்லிய பூனை ரோமம், கூர்மையான தீட்சண்யமிக்க கண்கள், குழந்தைத்தனமான முகலாவண்யம், மீனவச் சிறுவரிடையே அபூர்வமாக காணப்படும் சிவந்த மேனி, வழவழப்பான கை கால்கள், அத்தனையும் அவனுக்கு வெகுவாகப் பிடித்திருந்தது.

"உன்னுடைய வேலை, தினமும் என்னோடு ஊர்சுற்ற வருவதுதான்! சாப்பாடு, சம்பளம், உடைகள், எல்லாம் நல்லபடியாக வழங்குவேன். நாளைக் காலை தவறாமல் என்னை வந்து சந்திக்கிறாய்! சம்மதம் தானே?"

இவன் மிகவும் திருப்தியடைந்தவனாக ஓ.கே. கூறி கைகுலுக்கி விடை பெறுகிறான். மறுநாட் காலை சந்திப்பு நிகழ்ந்தது. இருவரும் நண்பர்களாக ஒன்றாய் அமர்ந்து ஹோட்டலில் காலை உணவு முடித்து, பின் ஊர் சுற்றப் புறப்பட்டார்கள். வீட்டுக்கு பீட்டர் ஒரு வெள்ளைக்காரனோடு

வருவதைக் கண்ணுற்று தாயும், சகோதரியும் பூரித்துப் போனார்கள். பீட்டருக்கு இனி நல்ல காலம் பிறந்துவிட்டதாக நம்பினார்கள்.

அந்த ஓட்டைக் குடிசையைக் கண்ணுற்ற ஜோன்சன், புஜங்களை அசைத்து, நெற்றியை உயர்த்தி, வெள்ளைக்காரப் பாவனையில் ஆச்சரியம் காட்டினான். வீட்டைத் திருத்த தான் உதவி செய்வதாக வாக்குறுதியளித்தான். திரேசா அவனுக்குப் பப்பாளிப் பழம் கொடுத்து அன்புடன் உபசரித்தாள். அவனுக்கு அக்காள் மேரியை பீட்டர் அறிமுகப்படுத்தினான்.

துடிக்கத் துடிக்க பிடித்த பென்னம் பெரிய சுறா மீனைப்போல பொழிவு காட்டி நின்ற, மேரியைப் பார்த்து குதூகலித்து, "வெரி நைஸ்" என்று பாராட்டினான் வெள்ளையன்.

இவர்கள் இருவருக்கிடையில் ஆத்மார்த்த நட்பு வளரலாயிற்று. எல்லா உல்லாசப் பிரயாணத்தளங்களுக்கும் ஜோன்சன், பீட்டரை கூடவே அழைத்துச் சென்றான். இப்போது பீட்டரின் நடவடிக்கைகளில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருந்தது.

வாசனைத் திரவியங்களை உடலெங்கும் பூசிக்கொண்டு அழகான உடையணிந்து சந்தோஷமாகத் தென்பட்டான். விஸ்கி, பியர், போதைப் பொருள் பாவனையில் மூழ்கிப் போனான். சிகரெட்டும் கையுமாக, சரளமாக ஆங்கிலம் பேசக் கற்றுக் கொண்டான்.

யாவும் ஜோன்சன் என்ற வெள்ளையனின் கடாட்சத்தில்தான். பீட்டரின் தாய் தெரேசா கைகளிலும், இப்போது நோட்டுக்கள் தாராளமாய் புளங்கவாரம்பித்தன. இவர்களது குடிசையும் சிறிது சிறிதாக, கற்களால் எழும்பி நின்றது. ஜோன்சன் வாக்குக் கொடுத்தபடி, ஒரு தொகைப் பணத்தையளித்து உதவினான். அவன் சுவிசுக்குத் திரும்பிச் செல்லும் நாளும் வந்துவிட்டது. ஓரிரு மாதங்களில் இவனை சுவிசுக்கு அழைப்பித்து, தன் ஹோட்டலில் தொழில் தருவதாக உறுதியாக கூறிவிட்டு, செலவிற்கு கொஞ்சம் பணத்தையும் கையில் கொடுத்துவிட்டு, அவன் விமானமேறினான்.

நண்பரின் பிரிவு பீட்டருக்கு கவலையளித்தாலும், சுவிஸ் பற்றிய கனவுகள், உணர்வுகளில் இனித்தன. மூன்று மாதங்கள்

கடந்து விட்ட நிலையில், ஜோன்சனிடமிருந்து எவ்வித பதிலும் இல்லாமலிருந்தது. இவனுக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது. அவன் கொடுத்துவிட்டுப் போன தொலைபேசி நம்பரில் பலமுறை தொடர்புகொள்ள முயன்றான். அவனைப்பற்றிய எந்தவிதத் தகவலும் அறிய முடியாமலிருந்தது.

நீலப் போர்வையில் சமுத்திரம் படர்ந்து கிடந்தது. அலைகள் வெறிகொண்டு ஒன்றையொன்று துரத்திச் சென்றன. படகுகள் தூரத்தே கரும் புள்ளிகளாய் தேய்ந்து தொலை திசையில் மறைந்தன. பறவைகள் அடிவானுக்கும், ஆழிக்குமிடையில் சிறகடித்து, கீழ்நோக்கியும், மேல்நோக்கியும் அந்தரத்தில் பறந்தன.

இவன் ஆழியின் அற்புத விநோதங்களை எண்ணியவாறு, உடல்சோர்ந்து கரையில் அமர்ந்திருந்தான். ஜோன்சன் ஏன் ஏமாற்றினான்? என்பது இவனுக்கு விடை கிடைக்காத கேள்விக் குறியாய் இருந்தது. கற்பனைக் கோட்டைகள் இடிந்து தரைமட்டமாகிப் போனதில், பாதி இளைத்துப் பேயிருந்தான். வேளைக்குச் சாப்பிடமல் யாருடனும் கதைக்காமல், தனிமையிலிருந்து நீண்ட நேரம் சிந்திப்பவனாக, மாறிப் போயிருந்த மகனின் நிலைகண்டு, தாய் பதறிப் போனாள்.

ஆறுதல்கூறி இவனுக்குத் தன்னம்பிக்கையூட்ட அவள் பல முயற்சிகள் செய்தும், அவனில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

வருடங்கள் சில உருண்டோடிப் போயின. பீட்டர் நோய்வாய்பட்டு படுக்கையில் கிடந்தான். அடிக்கடி வாந்தி, தலைசுற்று, நினைவிழத்தல் போன்றவையால் துவண்டு போனான். திரேசா வைத்தியரிடம் அழைத்துச் சென்று, சிகிச்சைகள் பல செய்தாள். இவனைப் பிடித்து வாட்டும் நோய் என்னவென்று அறியாமல் மனம்நொந்து போனாள்.

கோயில்களுக்குச் சென்று, நேர்த்தி, பூஜைகள் பலவும் செய்து, இறைஞ்சினாள். எதுவும் மாற்றமில்லை. ஒரு நாள் நடு இரவில் அவனுக்கு கடுமையான வருத்தம் வந்தது. பீட்டர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான்.

குருதிப் பரிசோதனையில் இவனுக்கு எச்.ஐ.வி. வைரஸ், கடுமையாக தொற்றியிருப்பதாக டாக்டர்கள் கூறினர்.

தனியறைக்குள் அப்புறப்படுத்தி வைத்து தீவிர சிகிச்சைகள் நடந்தன. இவன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான். நோய் எத்தகையது? என்பதை நோயாளிக்கு அறிவுறுத்தப் பட்டதும், அதிர்ச்சியினால் துவண்டு போனான்.

தாயின் பாசமொழுகும் முகத்தை சோர்ந்த விழிகளால் வெறித்தான். ஜோன்சன் ஒரு எயிட்ஸ் நோயாளியா? என்ற கேள்வி மூளைக்குள் பொறி தட்டியது. அவனுடன் கூடிக் களித்த நாட்கள், பயங்கரக் கனவுகளாய் அச்சமூட்டின. இறுதியில் டாக்டர்கள் கையை விரித்தனர்.

மீண்டும் பொலிவிழந்த விழிகளால் தாயின் முகத்தை பரிதாபமாகப் பார்த்தான். இறுதி மூச்சை சங்கடத்துடன் உதிர்த்தான்.

தாயின் நெக்குருகும் ஒப்பாரி சத்தம், மருத்துவமனைச் சுவர்களில் மோதி எங்கும் ஒலித்துக் கொண்டேயிருந்தது. ■

**- ஏப்ரல், 2003**

# இது இவர்கள் உலகம்

மேல் மாடியில் நின்று சிரத்தையோடு பாதையை வெறித்துப் பார்த்தேன். கீழே நெடுஞ்சாலை பரபரப்பாகிக் கொண்டிருந்தது. விரையும் வாகனங்களும், பாதசாரிகளுமே நகரின் பிரதான பாத்திரங்கள். வேலை தேடித் தேடி அலைந்து அலுத்து, இறுதியில் அறிந்த ஒருவரின் அனுசரணையில், ஒருவாறு வேலை கிடைத்தது. இது பிரமாதமான வேலையில்லை. சுறுசுறுப்பாக வியாபாரம் நடக்கும் ஹோட்டல் ஒன்றில், பில்மாஷ்டர் வேலை.

பட்ட துன்பங்களுக்கு மாதம் மூவாயிரம் கிடைக்கிறது. இப்போதைக்கு இது பரவாயில்லை. ஆனால், மிகச் சமீபத்தில் எனக்கு இங்கு வேலைமாற்றம் கிடைத்திருப்பது மனதிற்கு இசைவாயில்லை. இது ஒரு துர்அதிர்ஸ்ட நிகழ்வு. மகளைக் காட்டி அம்மாவைக் கட்டிவைத்த சங்கடம், எனக்குள் கீழே சைவ ஹோட்டலில் தேனீர் சிற்றுண்டி சாப்பாடு, என்று கச்சோடம் அபாரமாய் களைகட்டும். மேலே மாடியறைகளில், பகல் பொழுதுகளிலும் தோல் வியாபாரம் தூள் பறத்திக் கொண்டிருக்கும்.

தோல் வியாபாரம் என்றால், லெதர் பேக், வியாபாரமல்ல. இளம் பெண்கள் உடல் விற்றுப் பிழைக்கும், அவசர சிற்றின்ப கூடம். நடுத்தர நகர மனிதரின் உடற்தேவைக்கான இரகசிய அந்தப்புறம் வக்கிரங்களை மனதில் தேக்கி வைத்துக் கொண்டு, வெறிகொண்ட விலங்குகளாக இங்கு வந்து வேட்கை தணித்துச் செல்வர் பலர்.

கொழும்பு நகரின் பேய் சந்தடிக்குள் இது ஒன்றும் பரம ரகசியங்கள் அல்ல. எயிட்ஸ், சிபிலிஸ் போன்ற பாலியல் நோய்கள் பெருக, இவர்கள தான் காரணிகள். சாப்பாடு பில் கிழிக்க வந்து சரக்கு பில் கிழிக்கும் சங்கடம் என் மீது சுமத்தப்பட்டுள்ளது. இது நான் எதிர்பார்த்திராத நெருக்கடிகளில்

ஒன்று. வேலையை விட்டுவிட்டுப் போய் விடவேண்டும் குற்ற உணர்வின் அழுத்தத்தில் சிக்கி, மனம் கசங்கித் தடுமாறுகிறேன்.

வாழ்க்கையில் நினைத்தது எல்லாமே கைகூடிவிடுகிறதா? என்ன? நிர்ப்பந்தங்கள் தான் மனிதனைப் போட்டு சக்கை பிழிகிறது. ஏதாவது அலுவலகமொன்றில் கௌரவமான தொழில் செய்ய வேண்டும் என்ற என் நினைப்பில் மண்விழுந்து போனது. நெருக்கடி மிகுந்த இயந்திரத்தனமான இரைச்சல் கொட்டிக் கிடக்கும், பயங்கரக் குகைக்குள் வசமாக சிக்கிக் கொண்டு தடுமாறுகிறேன். சுயவிருப்புகள் மறுதலிக்கப்பட்ட, வாழ்விற்கான கொடூரங்கள் இங்கு நிலவுகின்றன.

விருப்பு, வெறுப்பென்று இங்கு யாரும் பெரிதாய் அலட்டிக் கொள்வதில்லை. அவரவர்க்கான பாத்திரங்களில், எல்லோரும் கச்சிதமாக நடித்து முடித்து விட வேண்டுமென்பது, இங்கு தீவிர நடைமுறையில் இருக்கிறது. இங்கு ஊதியத்திற்காக உடலையும் மனதையும் தாரைவார்க்க வேண்டுமென்பது பொதுவிதி. இந்தத் தொழிலை மனதார வெறுக்கிறேன் நான். மனிதனுக்கு சுயகௌரவமும், மானமுமே பெரிது.

"இப்போதைக்கு இந்த வேலையைச் செய், பிறகு பார்த்து நல்ல வேலையொன்று தரலாம்" என்ற முதலாளியின் கட்டளை. நெஞ்சில் உதறலெடுக்கிறது. காலச் சூழலும், நிர்ப்பந்த அழுத்தங்களும் எந்தவொரு யோக்கியனையும், படுகுழிக்குள் தள்ளிவிடலாம். சூழலினால் தடம்புரண்டு போனவர் கூட சமூகக் குற்றவாளிகளாகித் தீர வேண்டிய கட்டாயம். சூழல்களின் நெருக்குதல்கள் எப்போதுமே நியாயங்களைப் புறம்தள்ளியே பார்க்கிறது. மனசாட்சியின் குரலால் ஓங்கியறையப்பட்டவனாக தத்தளித்துப் போகிறேன் நான்.

இந்த நாற்றமடிக்கிற சகதிக்குள்ளிருந்து தப்பியாக வேண்டுமே! அதற்கென்ன வழி? முதலாளிக்கு இப்பிரதேச காவல் நிலையத்தில், நிறையவே செல்வாக்குண்டு. அரசியல்வாதி களிடமும் அவருக்கு மிகுந்த நெருக்கம். கைமடிப்புகள் அடிக்கடி காவல் நிலையத்திற்குப் போய்ச் சேருவதினால்தான். இங்கு நடைபெறும் பாலியல் வியாபாரம் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றது. இந்த ஈனத் தொழிலில் நானும் சம்பந்தப்பட்டுள்ளேன என்பதை என் குடும்பத்தார் அறிய நேரிட்டால்..... எப்படித்தான் அவர்கள் முகத்தில் விழிப்பேன்?

இங்கு பல பெண்கள் பாலியல் தொழிலுக்காக அமர்த்தப்பட்டுள்ளனர். மொனிக்கா, சரீனா, தினேஷா, ரீட்டா..... இவர்களுள் மிகவும் வயது குறைந்தவள் சரீனா. வடிவானவளும் கூட. சீவி சிங்காரித்துக் கொண்டு, கையில் ஹேண்ட்பேக் சகிதம், காரியாலயப் பெண்கள் போல் பாவனைகாட்டி, காலையிலேயே இவர்கள் இங்கு வந்துவிடுவார்கள். சிரிப்பும், கும்மாளமுமாக வருவோரைக் குஷிபடுத்தி, காசு கறப்பதில் கைதேர்ந்தவர்கள் இவர்கள்.

வரும் வாடிக்கையாளரிடம் பேரம் பேசி காசை வசூலிப்பது, எனக்கு கொடுக்கப்பட்டுள்ள வேலை. சிவந்து கொழுத்து வாட்டசாட்டமான ஆகுருதி கொண்டவன் நஸீர். இவன் இத் தொழிலின் பிரதான இணைப்பாளன், கைட், அழகாக உடுத்துக் கொண்டு கௌரவமுள்ளவனாக நடித்து, தெருவழியே போகும் நபர்களை, மோப்பம் பிடித்து, ஆசை வார்த்தை கூறி, இங்கு அழைத்து வருவான்.

உருப்படிகளின் எண்ணிக்கைப்படி இவனுக்கு கமிஷன் கிடைக்கும். நீண்ட காலமாகவே இவனது பிரதான தொழில் இதுதான். இவனது உருவத்தைக் கண்டாலே மலம் தின்னும் பன்றியின் ஆசூயை என்னில் மேலோங்கும். அவ்வளவு வெறுப்பு, என்றாலும் அதனைக் காட்டிக் கொள்ளாமல், மேலோட்டமாகக் கதைப்பேன்.

கூட்டிக் கொடுப்பவனுக்கு இஸ்திரிக் குலையாத உடுப்பு. உதட்டில் எப்போதும் சிகரெட். இவனெல்லாம் ஒரு மனிசனா? என்ற கேள்வி மனதில் சீறியெழும். நீ மட்டும் என்ன, விரும்பியோ, விரும்பாமலோ, இந்தக் கேடுகெட்ட தொழிலைத் தானே செய்கிறாய்? என்று மனசாட்சி என்னை நிர்தாட்சண்யமாய் இடித்துரைக்கும். மனசாட்சியின் அலறலை எத்தனை நாளைக்குத் தான் தடுத்து நிறுத்த இயலும்? இங்கிருந்து சீக்கிரமே வெளியேறி விட வேண்டும். அதற்கான ஒரு தருணத்தை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறேன்.

வாடிக்கையாளர் பார்வையில் இளம் சிட்டு சரினாவுக்கே கிராக்கி அதிகம். இரவு பகலென்று உடல் வருத்தி பணியாற்ற வேண்டிய நிலை அவளுக்கு. என்றாலும் மற்றவர்களை விட சரீனாவுக்குத்தான் வருவாய் அதிகம். பேரம் பேசுபவர்கள் அவளது ரேட் உச்சத்திலிருந்தாலும் அவளையே ஆசையோடு

விரும்புவர்கள். காழ்ப்புணர்ச்சி காரணமாக மற்ற மூவரும், இவளோடு முரண்படுவார்கள்.

இவர்களது பார்வையில் நான் ஒரு அப்பாவியாக இருந்தேன். அவர்களோடு நெருங்கி அரட்டையடிப்பதை நான் தவிர்த்து வந்தேன். நிறைய கெட்ட கதைகள் பேசி, என்னைச் சீண்டி தங்கள் பக்கம் இழுக்கப் பார்ப்பார்கள். இந்த மாய வலைகளில், சிக்கிக் கொள்ளாது, மௌனம் தரிப்பேன். தமக்குள் பச்சையாக அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வார்கள்.

வரும் நபர்களின் சேட்டைகளை அசைபோட்டு சிலேடையாகச சொல்லி ரசிப்பார்கள். கூச்சம் என்பது இவர்களது அருகில் போனதும் இல்லை. சீ! இந்தப் பெண்கள் பாலியல் களியாட்டங் களில் எவ்வளவு கீழ்த்தரமாகிப் போனார்கள். இந்தப் பாவங்களை எங்கு போய் கொட்டிப் பிராயச்சித்தம் தேடப் போகிறார்கள்? எனக்குள் கேள்வி எழுப்புவேன். ஒவ்வொரு அறையிலும் ஒட்டைபோட்டு, மற்றவர்களின் வெறியாட்டங்களை இரகசியமாக ரசிப்பார்கள். இவர்களது உலகம் விசித்திரமானது!

வாழ்க்கைப் பின்னணி பயங்கரச் சோக மூட்டம் கவிந்ததாக இருக்கும். இந்தத் தடம்புரளங்களை இவர்கள் ஆரம்பத்தில் விரும்பி ஏற்றுக்கொண்டவர்கள் அல்லர்! வாழ்வு இவர்கள் மீது, இரக்கமற்ற கொடூரங்களை அள்ளி வீசுகிறது. இவர்கள் நம்பிக்கை தளர்ந்து சருகுகளாக அலைக்கழிக்கப்படுகிறார்கள். மன அழுத்தங்களினால் மதுபானம், போதை வஸ்து, என்பவற்றுக்கு கெதியில் அடிமையாகிப் போவார்கள்.

சில வேளைகளில் தங்கள் தவறுகளுக்காக சுய விசாரணையில் இறங்கி, மனம் வருந்துவார்கள். நீதிமன்ற தீர்ப்புக்களால் இவர்கள் திருந்தும் மார்க்கம் இல்லை. முதலில் ஒருவனால் வஞ்சிக்கப்பட்டு, பிறகு பலராலும் ஏமாற்றப்பட்டு, நிர்க்கதிக்கு உள்ளான சோக வரலாறு இவர்களுடையது. இந்த மோசமான தொழிலை, கை விடவும் மனம் ஒப்பமாட்டார்கள்.

அன்றிரவு ஐந்தாம் நம்பர், அறையிலிருந்து, மிக மோசமான அலறல் சத்தம் கேட்டதும், திடுக்குற்றேன். சரினாவின் அறை யிலிருந்துதான் அந்த அபயக்குரல் கேட்டது. அன்று அவளுடன் சல்லாபிக்க வந்தவன் ஒரு வாட்டசாட்டமான கறுப்பு இன

நீக்ரோ. கொழும்பில் தரித்துள்ள வெளிநாட்டு கப்பலொன்றில் வேலை செய்பவன். ஆறடி உயரத்தில் இறுகிக் கனத்த உடலமைப்போடு பார்ப்பதற்கு பயங்கரத் தோற்றம் கொண்டவனாக இருந்தான்.

'கைட்' நஸீர் அவனை இங்கு அழைத்து வந்திருந்தான். சரீனாவின் கூக்குரலும், அழுகையும் தொடர்ந்தவண்ணம் இருந்தன. நான் கதவைத் தட்டி இருவரையும் வெளியே வரும்படி கூறினேன்.

அவனது பிம்பம் வெறுப்பூட்டுவதாய் இருந்தது. சுருட்டை முடி, வீங்கிப் பெருத்துத் தொங்கும் அவலட்சண உதடுகள், தலைமயிர் குட்டையாகவும், ரௌத்திரம் குடிகொண்ட இறுகிக் கனத்த முகமும் பார்ப்பதற்கு அச்சமூட்டிக் கொண்டிருந்தது. சரீனா, கிடுகிடா விறைத்த உடலோடு, பீதியில் நடுங்கிக் கொண்டிருந்தாள்.

"இவன் மணித்தியாலக் கணக்காய் என்னை சித்திரவதை செய்து கொல்றான். போதைமருந்து ஏற்றிக்கொண்டு வந்திருக் கிறான். இவன் மனிஷன் இல்ல. காட்டு மிருகம். இவனுடைய காசைத் திருப்பிக் கொடுத்து வெளியே துரத்துங்கள். இவனோட இருக்க என்னால ஏலாது."

சரீனாவுக்கு மூச்சு இரைத்தது. பார்க்க பரிதாபமாக இருந்தாள். காசைத் திருப்பித் தருவதாகவும், உடனே இங்கிருந்து போகும்படியும் நான் அவனிடம் உரத்ததொனியில் சொன்னேன்.

"காசு எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறேன். இவளை மீண்டும் என்னோடு இருக்கச் செய். இல்லாவிட்டால் எல்லோரையும் உதைத்து நொருக்குவேன்."

இங்கு நடக்கும் களேபரத்தில் மற்ற மூன்று பெண்களும், மாடிப்படியிலிருந்து மெதுவாகக் கீழிறங்கி நடந்தனர். அது, சரீனாவுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவம், தமக்கும் ஏற்படக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்விலாக இருக்கக்கூடும். 'கைட்' நஸீர் எங்கிருந்தோ விரைந்து வந்து, நீக்ரோவை சமாதானப் படுத்தி, போகுமாறு சொன்னான்.

"உனக்கு வேறாகப் பணம் தந்திருக்கிறேன். நாயே!

என்னையா துரத்தப்பார்க்கிறாய்?" என்று சினம் தலைக்கேறி, நஸீரின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். நிலைமை மோசமாகவே முதலாளிக்குப் 'போன்' செய்து, உடன் வரும்படி கூறினேன். சிறிது நேரத்தில் எதற்கும் தயாராக ஐந்து காடையர் சகிதம் முதலாளி பிரசன்னமானார். வந்தவர்கள் நீக்ரோவைப் பிடித்து கீழே தள்ளினார். அவன் போக மனமின்றி, முரண்டு பிடிக்கவே, காடையர்களில் ஒருவன் இடுப்பிலிருந்து கத்தியை உருவிக் காட்டி கொன்றுவிடுவதாகப் பயமுறுத்தினான்.

நீக்ரோ கறுவிக்கொண்டே கீழிறங்கி நடந்தான். ஒரு பிரளயம் நிகழ்ந்து முடிந்த அமைதி அங்கு நிலவியது. எல்லோரது மனதிலும் சிறிய ஆசுவதம். சில கணங்கள் கழிந்திருக்கும். கடை வாசலில் பொலிஸ் அதிகாரிகளும், நீக்ரோவும் திடீரென கடைக்குள் வந்தனர்.

அவர்கள் முதலாளிக்கு நெருக்கமான பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் அல்லர். அத்தனை பேரும் புது முகங்கள். இங்கு, விபச்சாரம் செய்வதாகவும், காடையர்கள் தனது பணத்தைக் கொள்ளையடித்ததாகவும் நீக்ரோ தலைமைப் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு கொடுத்துக் கூட்டி வந்துள்ளான்.

அவர்கள் தடதடவென்று மேல்மாடிக்கு விரைந்து வந்தார்கள். நான் சட்டென்று பின்புறம் மறைந்து கொண்டேன். என் நெஞ்சில் பயங்கர அச்சம் புகுந்து கொண்டது. தொண்டை உலர்ந்து நாவரண்டது. வயிற்றுக்குள் பனிக்கட்டி உருகிய சிலிர்ப்பு. என்ன நடக்கப் போகிறதோ? என்று தடுமாறினேன்.

'கைட்' நஸீரையும், நான்கு பெண்களையும் வளைத்துப் பிடித்து, ஜீப்பினுள் ஏற்றினர். முதலாளி இதனைத் தவிர்ப்பதற்கு பெரிதும் முயன்று பார்த்தார். இயலவில்லை. யார் யாருக்கோ 'போன்' செய்தார். நான் மாடியில் நின்றவாறு பாதையை நோட்டமிட்டேன். ஜீப் உறுமியது. புறப்படுவதற்கு சரீனாவைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது. அவள் ஜீப்புக்குள் அமர்ந்திருந்தவாறு, எனக்கு கையசைத்தாள். அவர்களது முகங்களில், பரபரப்போ கவலையோ சிறிதும் இருக்கவில்லை.

பொலிஸ், ரிமாண்ட், நீதிமன்றம், யாவும் அவர்களுக்குப் பழகிப் போன மாமூலான விஷயங்கள். கோர்ட்டுக்குப்

போவதற்கு முன் முதலாளி இவற்றையெல்லாம் தன் செல்வாக்கினாலும், பணத்தினாலும், சமாளித்து விடுவார். நாளையிலிருந்து இங்கு பழையபடி தொழில் தொடரும். ஆனால், என்னால் ஒரு நிமிடம் கூட இங்கு மேலும் தரித்திருக்க முடியாது.

ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாது, மெதுவாக, கடையை விட்டு வெளியேறி, பாதையில் செல்வோரோடு சங்கமித்தேன். இனி இந்தப் பக்கம், தலை வைத்தும் படுக்கக் கூடாது என்ற உறுதியான தீர்மானம், நெஞ்சில் கனமாக உறைந்திருந்தது. ■

**- செப்டம்பர் 2003**

# ஒரு ஜன்னலோர இருக்கை

சூரியன் சுட்டெரித்துக் கொளுத்தும் உச்சிப்பொழுது வீட்டு வேலைகளை சற்றே முடித்துவிட்ட ஆசுவதத்தில் இளைப்பாற ஜன்னலருகில் வந்து அமர்ந்து கொண்டேன். தபால்காரனின் மணியோசை எப்போது கேட்கும்? என்ற ஆர்வத்தில் காத்துக்கிடக்கிறேன். தபால்காரனின் வருகையை எதிர்பார்த்துக் காத்துக் கிடப்பது என்பது, இப்போது நமது சமூகத்தின் கட்டாயக் கடமையயென்றாகிவிட்டது. ஒவ்வொரு இல்லத்திலிருந்தும் யாராகிலும் ஒருவர் வெளிநாடு சென்றிருக்க வேண்டுமென்பது, தவிர்க்க முடியாத நிர்பந்தம்.

நான் இயங்கும் சுற்றுச் சூழல், என்னைக் கலவரப்படுத்தி உணர்வுகளால் பழிவாங்கித் தீர்க்கிறது. வாட்டும் தனிமையும், சூனிய வெறுமையும் சகிக்கவியலாச் சங்கடங்களைத் தோற்று விக்கின்றன.

பாதையின் சலசலப்பும், வெளிச்சலனங்களும் உள்வீட்டு வெறுமையை சிறிது தணிக்கிறது. பரந்து விரிந்த நெடுஞ்சாலை யல்ல இது. நெருக்கடியும், பரபரப்பும் நிறைந்த குறுக்குத் தெரு. அடுத்தடுத்த வீட்டுச் சன்னமான பேச்சுக் குரல்களைக் கூட, காற்று சுமந்து வந்து செவியில் நிர்தாட்சண்யமாய் அறைந்து விட்டுப் போகும். தனிமைத் தீ என் உணர்வலைகளைச் சுட்டெரிக்கிறது. இந்தச் சூழலும், வாழ்வும் திருப்திகரமானதாய் இல்லை. வெளியுலகத் தொடர்புகள் அன்னியப்பட்டு, மனம் கூண்டுக் கிளியாய் வெம்மையில் கிறங்கி அல்லாடித் தவிக்கிறது. இன்றைய நிலையில் எல்லாவற்றையும் இந்த சாளரத்தினூடாகத் தான் அவதானிக்கிறேன்.

தனிமையில் மனிதன் பேய்க்குச் சமம் என்ற மேலை தேசத்து அறிஞன் ஒருவனின் வாக்குக்கு அர்த்தம் கொடுப்பதைப் போன்று, அமைந்துவிட்டது என் இருப்பு. நடைபாதை வியாபாரிகள், மோட்டார் சைக்கிள்கள், பள்ளிக்கூடச் சிறார்கள்,

பாதசாரிகள், என எங்கள் தெரு எப்போதும் களை கட்டும்.

மணமாகி ஆறு மாதத்திற்குள் உழைப்பிற்காக வெளிநாடு போனவர் என் கணவர். இதனால் தனிமைப்பட்டுப் போய் அவர் நினைப்பின் நெருடலில் உருகி வழிகிறேன் நான். ஒற்றைக் குயிலின் ஒரு மழைக்கால சோக நெக்குருகல் தொனியை இங்கெவரும் பெரிதாய் இனங்கண்டு கொள்ளாததைப் போல - இந்தத் துயரம் நான் மட்டும் அனுபவித்து தீருவதற்கு மட்டுமே உரியது என்றெண்ணி மனம் கசிகிறேன்.

வயதாகி நோயில் விழுந்துவிட்ட என் கணவரின் தாயைப் பராமரிப்பது, உணவு சமைப்பது, இல்லத்தை கூட்டிப் பெருக்கி ஒழுங்குபடுத்துவது போன்ற பணிகளில் ஒருவித அலுப்புத் தட்டுகிறது. வெளியே எங்காவது சுதந்திரமாக சுற்றித் திரிதல் சாத்தியமில்லை.

அபூர்வமாக சில வேளைகளில், முன் வீட்டுக் கவிதாவுடன் கோயில், பூஜை என்று போய்வருவதோடு சரி.

அன்று கவிதா கேட்டாள், "என்னடி திவ்யா! முகமெல்லாம் மோகப் பரு நிறைஞ்சிருக்கு. அவரை நினைத்து உருகி வழிகிறாயா?" என்று.

அவளது கேள்வியில் உண்மை இல்லாமலில்லை. சிரித்து சமாளித்தேன். இந்தத் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் கூட, என்னைக் கவராதிருப்பதின் காரணம் தீவிரமாய் சுழலும் எனது மனவோட்டங்கள்தான். இளமையில் துணையின் நெருக்கத்தை தவறவிட்டுத் தவிப்பது என்பது எவ்வளவு பெரிய கொடுமை. உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் எத்தனை பெரிய இம்சைகளை எதிர்நோக்க வேண்டி வருகிறது என்பதை அனுபவரீதியாக இப்போது உணர்கிறேன்.

மனித வாழ்வின் மறக்கவியலாமைத் தளம் இளமை. குறுகுறுக்கும் ஆசைளும், தவிப்புகளும் நெஞ்சு தழுவி வியாபித்து இருக்கும் என்பதை நூல்களினூடாக வாசித்து உள்வாங்கியிருக்கிறேன். அனுபவத்தில் அந்த அவஸ்தைகளை இப்போது தான் அணுகிப் பார்க்கிறேன்.

'கூடிப் பிரிவது துயரம்!' என்ற பாடல் வரிகூட ஞாபகத்தில் நிலைக்கிறது. உழைப்பிற்காக சொந்த மண்ணையும், உறவு

களையும் அந்நியப்படுத்திப் பார்க்க வேண்டிய சுமையின் நிர்ப்பந்தத்தினை வாழ்வு நம் மீது விதிக்கிறது.

இன்றும் வழக்கம் போல், ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து பாதையை வேடிக்கை பார்க்கிறேன். முன்னால் தெரிகிறது சிறிய பொட்டல் மைதானம். அங்கு கால்நடைகளின் மேய்ச்சல். மௌன ஊர்வலம். பரந்து விரிந்த தொடுவானம். உயரக் கிளை பரப்பி விண்ணை எட்ட எத்தனிக்கும் நீண்டு பெருத்த மரங்கள், அடுக்கிவைத்தாற் போன்று வரிசையாய் வீடுகள், மெல்லத்தழுவி மரங்களில் சலசலத்துச் செல்லும் காற்று.

எல்லாம் மனதிற்கு இதமளிப்பன. இந்த ஜன்னலோர இருக்கை ஒன்றுதான் எனக்கு கற்பனைக் கிளர்ச்சியூட்டுகிறது. என்றாலும் துணை அருகில் இல்லையே? என்ற ஆதங்கம் மனதை உறுத்துகிறது. தினமும் அவரைப் பற்றி நினைக்கிறேன். பின்னர் மனம் விசனிக்கிறேன்.

என்னைப் போலவே, அவர் விடும் ஒவ்வொரு மூச்சுக் காற்றிலும் நான் அழியாப் பிம்பமாக நிலைத்திருக்கிறேனா? அன்றி என் நினைப்பே மறந்து செய்யும் பணியில் இயந்திரமாகி யிருப்பாரா? தொலைபேசியிலும், வரையும் கடிதங்களிலும் எனது நிலைகுறித்த புரிதலை அவருக்கு உணர்த்தி, விரைவிலேயே வந்துவிடும்படி வேண்டியிருக்கிறேன்.

"திவ்யா! சிறுசிறு சங்கடங்களை எல்லாம் பெரிதுபடுத்தக் கூடாது. நிகழ்காலத் துன்பங்கள் எதிர்கால மகிழ்ச்சிக்கு வித்திடும். பொறுமை அவசியம்" என என்னை ஆறுதல்படுத்திக் கடிதம் வரைவார்.

ஜன்னலோர இருப்பின் சுகம் பற்றிச் சொன்னேன் அல்லவா? அதில் ஒரு சங்கடமும் இல்லாமலில்லை. இது எனக்கு சவாலாய் அமைந்துவிட்ட விடயமும் கூட. சிலர் நாறுகிற மீனை பூனை பார்ப்பதைப் போன்று, தெருவில் போகிறவர்கள், என்னை முறைப்பது ஒன்றும் புதிய விடயமில்லை. என்றாலும் விடலைப் பருவத்து இளவட்டங்களின் குறுகுறுத்த விழிகளும், குரூரப் பார்வைகளும் என் முக லாவண்யத்தை சீண்டி என்னை லஜ்ஜையிலாழ்த்தும்.

திடீரென வந்துவிழும் அந்தப் பார்வை வெறிப்புகளை தவிர்ப்பதற்காய் ஜன்னல் கதவுகளில் முகம் மறைப்பேன். ஜன்னல் எனக்கு காட்சி ஊடகம் மட்டுமல்ல. அத்துமீறல்களை நிராகரிக்கும் கவசமும் கூட. வாசலில் மணியடிக்க முற்றத்திற்கு விரைகின்றேன். தபால்காரன் புன்னகைத்தவாறு அஞ்சலை நீட்டுகிறான்.

கடிதம் அவரிடமிருந்து தான். மகிழ்ச்சி உடலெங்கும் பிரவகிக்கிறது. சந்தோஷ மிகுதியால் நன்றியறிதலாக தபால்காரனைப் பார்த்து புன்னகை உதிர்க்கிறேன். இதனால் என்ன குடியா மூழ்கிவிடப் போகிறது? அவன் போகாமல் அசடுவழிய என் முகத்தை வெறித்தவாறு அப்படியே நிற்கிறான்.

"புன்னகை மட்டும் போதாது. வாய்திறந்து பேசினால் முத்தா உதிர்ந்து விடும் கிளியே" என்பது போன்ற பாவனை. இதை சூட்சுமமாக உணர்ந்து கொண்டதின் விளைவு வேகமாக வீட்டுக்கதவை அடைக்கிறேன்.

இந்த ஆண் வர்க்கத்தினரே இப்படித்தான். இளம் பெண்களின் நெருக்கத்தை தருவித்துக் கொள்ள, எதை வேண்டுமானாலும் செய்வார்கள். அசட்டுத்தனமாக குழைந்து நிற்பதும், தட்டுத்தடுமாறி பேச முற்படுவதும், ஹீரோ என்ற நினைப்பில் வெளிப்பூச்சு காட்டுவதும், இரும்பில் காந்தம் ஒட்டிக் கொள்ளட்டும் என்ற பிரயத்தனமே.

பெண் மனம் நீறுபூத்த நெருப்பு! என்பதை இவர்கள் எப்போதுதான் உணரப் போகிறார்கள்? தெருவின் தரிசனங்கள் விரிகின்றன. இந்த உடல் சார்ந்த தாபத்தினை ஒரு கட்டுக்குள் வைத்திருக்க மனம் கடின ஓர்மம் கொண்டாலும், ஏதோவொரு ஏக்கம், எகிறிக் குதிக்காமலில்லை. தெருக்காட்சிகள் துல்லியமாய மனதுறுத்துகின்றன.

முன் மைதானத்தில் ஒரு பசு தன்பாட்டில் புல்லை மேய்ந்து கொண்டிருக்கிறது. அதன் செயலில் ஆழ்ந்த மௌனம் உள்ளுறைந்து இருக்கிறது. பெரிய எருதொன்று அருகில் நின்று பசுவினைச் சீண்டி இச்சைக்கு அழைக்கிறது. அதன் பிருஷ்டத்தை முகர்ந்து மோகவெறி கொள்கிறது.

கணங்கள் செல்லும் தோறும் இரண்டிற்கும் இடையிலான இடைவெளி குறுகிக் கொண்டு போகிறது. குறி விறைத்த

காளை மலை தகர்ந்து விழுந்தாற் போல் முழு பலத்தோடு பசுவின் மேனியில் சரிந்து விழுகிறது.

இக்காட்சியில் லயித்ததில், மேனி மின்சார அதிர்ச்சி கண்டு பதைபதைக்கிறது. இதைக் காணாது என்னால் தவிர்த்திருக்கலாம். அது ஒரு கனவுக்காட்சி போல் கண்ணை உறுத்துகிறது.

மனிதர்களால் கனவு காணாமலிருப்பது சாத்தியமோ? தவிரவும், மனதிற்கு தெரிந்த நியாயம், கண்ணுக்குப் புரியுமா?

கண்களுக்கு எப்போதுமே காட்சிகளே குறி! உஷ்ணமேறிய தேகத்தில் உணர்ச்சிகளின் உதைப்பு, என்னுள் எரிகின்ற தணலை அணைப்பதற்கு பின் பக்க கிணற்றடிக்கு விரைந்து செல்கிறேன். குளிர்ந்த நீரை வாரித் தலைவழியே ஊற்றுகிறேன். என்றுமில்லாத சுகம்! அழுக்காயிருந்த மனம் தெளிந்து சுத்த மாயிற்று.

குளியல் முடித்து ஈரக் கூந்தலை முதுகிலே உலரவிட்டு அமர்ந்தேன். பள்ளிப்பருவ காலத்தில், சக மாணவ மாணவியரைப பட்டப் பெயரிட்டு அழைப்பதில் எனக்கொரு அலாதி மகிழ்ச்சி! இப்போதும் கூட பாதையில் செல்வோரைக் கூர்ந்து நோக்கி, எனக்குள் பட்டப் பெயரிட்டு அழைத்துக் கொள்வேன். அதிலொரு ஆனந்தமும் கிளர்ச்சியுமெனக்கு.

பால்காரனுக்கு தூங்கு மூஞ்சியென்றும், தபால்காரனுக்கு திருட்டு முழியென்றும், என்னால் நாமமிடப்படுவார்கள். இப்பொழுதெல்லாம் இவர்களோடு இன்னுமொருவரும் சேர்ந்து கொள்கிறார். தினமும் காலையிலும், மாலையிலும் அவர் என் இல்லத்தை தாண்டி பாதையில் நடந்து செல்வது வழக்கம்.

அழகாக உடையணிந்து, கையில் ஜேம்ஸ்பொண்ட் சூட்கேஸுடன் செல்லும் அவருக்கு வயது ஒரு முப்பத்தைந்து இருக்கலாம். தலையில் அலையலையாகப் படிந்த கேசம், மழுங்க வழித்த, மீசையற்ற பளபளத்த முகம், எடுப்பான நடை, மொத்தத்தில் எவரையும் தோற்றத்தால் கவர்ந்திழுக்கும் வசீகரம் கொண்டவர்.

பாவனையில் ஒரு உத்தியோகக்காரரென்று அனுமானிக்க லாம். பாதையை வேடிக்கை பார்க்கும் தோரணையில்தான்

நான் அன்றும் பார்த்தேன். என் வீட்டருகே வரும்போது மட்டும், நடையைத் தளர்த்தி ஆவலோடு என் பார்வை மின்னலை தரிசிக்க விழைவார். இது ஒரு எல்லை மீறிய ரசனை என்று என் அடிமனம் இடித்துரைக்கும்.

அவர் ஜன்னல் நிலாவை தரிசிக்க முயலும் போதெல்லாம், அதைத் தவிர்ப்பதற்கு என் கவசமான ஜன்னல் கதவுகளில் சட்டென முகம் மறைத்துக் கொள்வேன். பொழுது போக்குக்காக தெருவை வேடிக்கை பார்க்கப் போய், இறுதியில் பல சங்கடங் களைத் தோற்றுவிக்குமோ என அஞ்சலானேன்.

எந்த மன்மத விழிவீச்சிக்குள்ளும் எளிதில் சிக்கிக் கொள்ளாத மன உறுதியுடன்தான் நான் இருக்கிறேன். அவருக்கு நான் கேணல் கடாபி என நாமமிட்டேன். கடாபியின் அதே தோற்றம், உருவ அமைப்பு, சாயல் எல்லாம். அசப்பில் லிபிய ஜனாதிபதியின் சகோதரரோ? என யாரும் மயக்கம் கொள்வர்.

அன்றும் வழக்கம் போலவே, விழிகளால் ஜன்னலைத் துளாவிவிட்டு, என் வீட்டைக் கடந்து சென்றார். அடுத்த நிமிடம் அதிர்ச்சியினால் விறைத்து நின்றேன். திடீர் துப்பாக்கி ஓசை செவிப்புலனை அதிரவைத்தது! மோட்டார் சைக்கிளில் விரைந்து வந்த முகமூடியணிந்த இருவர். அவர் மீது சரமாரியாக வேட்டு க்களைத் தீர்த்துவிட்டு, மின்னலாய் மறைந்தனர்.

அச்சத்தால் பொறிகலங்கிப் போனேன். மேனி பதறி பதைபதைத்து நடுங்கியது. ஆன்மா பீதியினால் அதிர்ந்து துடித்தது. தெருச்சனம் அங்குகூடி ஒரு பரபரப்பான சூழல் நிலவியது. இறுதியில் அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் சந்தர்ப்பமும் கைநழுவிப் போனது. அறுத்துப் போட்ட பறவையினைப் போல் நிலத்தில் கிடந்து துடிதுடித்தார். கடாபி கழுத்திலும் மார்பிலும், குண்டடிபட்டு குருதி கொப்பளிக்க தெருவில் பரிதாபமாக இறந்து கிடந்தார். இந்தக் கோரக் காட்சி, என் நெஞ்சை உலுப்பிக் கலைத்தது.

அடுத்த தெருவில் வாசம் செய்யும் அவர், ஒரு கூட்டுத்தாபன அதிகாரியாம். பஸ்ஸில் ஏறுவதற்காக தினமும் இவ்வழியே செல்பவரென்றும், இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையான இவர், இயக்கமொன்றின் தீவிர ஆதரவாளர் என்றும் தகவல்கள் வெளியாயின. நெஞ்சடைத்து நின்ற எனக்கு எந்தவொரு

வேலையிலும் ஈடுபாடு காட்ட இயலவில்லை. நேரில் கண்ட அவலக் காட்சி குருதியணுக்களை கசக்கிப் பிழிந்தது.

"என்ன மனிதர்கள் இவர்கள்? சகமனிதனை ஈவிரக்கமின்றி இப்படி கொன்றொழிக்கிறார்களே? நமது முன்னோர்கள் கட்டிக் காத்த அறமும், நேயமும் இந்த மண்ணை விட்டு நிரந்தரமாகவே அந்நியப்பட்டு போய்விட்டனவா? எனும் கேள்விகள் நெஞ்சுறுத்தின.

'அம்மாவுக்கு கடும் வருத்தம். உடன் புறப்பட்டு வரவும். அவசரம்.'

கணவருக்கு ஃபெக்ஸ் அனுப்பி விட்டு, தொலைபேசியிலும் கதைத்தேன். அவர் உடன் புறப்பட்டு வருவதாக வாக்குறுதி அளித்தது, தவிக்கும் மனதிற்கு பெரிய ஆறுதலாயிருந்தது.

இப்போது ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து தெருவை வேடிக்கை பார்க்கும் வேலையை முற்றாகப் புறக்கணித்து விட்டேன். அவர் வருகை ஒன்றுதான் சிதைந்து போன என் இருப்புக்கு தெம்பளிக்கும் என்ற எதிர்பார்ப்பில் காத்திருக்கிறேன். ■

**- ஜனவரி 2005**

# அக்னி மழை

கல்லூர்க் கிராமம் விடியலுக்கு முன்னே பரபரப்புக்கு ள்ளாகியிருந்தது. இதமான சீதளக்காற்று மரங்களைத் தழுவி வந்து வீசியது. முன் தினம் இரவு அர்த்தராத்திரியில் நிகழ்ந்த அந்தக் கொடூரம், கிராமவாசிகளின் உரையாடலுக்கு கருப்பொருள் ஆனது. சம்பவத்தை செவியுற்ற கணத்திலிருந்து என் மனம் அதிர்ந்து துடிக்கிறது. இது போன்ற துர்ச்சம்பவங்களால், எனக்குள் இருக்கும் இலக்கிய ஆன்மா விகசித்து, அலறத் தொடங்கவிடும். கண்ணுக்கு நேரே சாட்சியாகிப் போன வேண்டாத நிகழ்வுகள், மனதில் சங்கடத்தை தோற்றுவிக்கின்றன.

நிஜங்கள் மட்டும் கதைகளாகி விடுமா? இதை ஒரு விவாததத்திற்காக மட்டுமே, எழுப்பிப் பார்த்தாலும், கற்பனை களின் ஆதாரத்தினால் மட்டும் எழுதுபவை எப்படி யதார்த்த இலக்கியமாகிவிடும்? என்ற கேள்வியும் கூடவே வருகிறது.

ஜெயகாந்தன் சொன்னது ஞாபகத்தில் இழை பின்னுகிறது. "கதைகள் உண்மையாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால், உண்மை இல்லாமல் கதையே இல்லை!" என்றார். நிஜம் கலந்த கற்பனை, சிறந்த விவரணை, உயிர்த்துவமுள்ள கதையோட்டம், இயல்பான பேச்சு வழக்கு இவற்றின் கலவைதானே யதார்த்தக் கலைப் படைப்புக்கள்? கற்பனை என்பது வாழ்வின் சாரங்களிலிருந்து விலகி ஓடும் பிம்பங்களா?

நிஜத்தின் தீவிர வெளிப்பாடுகள், எதிர்கொள்ளலில் கசப்பானவைகளா? எந்தச் சிந்தனைக்கும் கட்டுப்பாடுகள் இல்லை. ஆனால், கருத்தியலுக்கு அறிவார்த்த தளத்தில் வரம்பிருக்கிறது. அதிர்ஷ்ட சீட்டை வாங்கிய ஒருவன், பரிசு தனக்குத்தான் என்ற கற்பிதத்தில் கற்பனைச் சுகம் காண்கிறான். அதிர்ஸ்டம் என்ன எல்லோரினதும் கடைக்கண் பார்வைக்கும் எளிதில் வசியமாகிவிடும் மலினப் பொருளா?

கற்பனை என்பது வெறும் மாயை என்ற இறுதி ஸ்திதிக்கு வந்துவிட முடிகிறதா நம்மால்? கற்பனைகளும், கனவுகளும்

நிஜமாகிப் போன சாட்சியங்கள் இருக்கிறதே, தாராளமாய் சிருஷ்டிப் படைப்புகளுக்கு இவையிரண்டும், ஆதார சுருதிகள் தாம். வாழ்விற்கும், இருப்பிற்கும் கூட, இவை இரண்டுக்குமான இடைவெளி குறுகிப் போனது.

காக்கைத் தீவு கடற்கரைக் காட்டுக்குள், ரீட்டா ஜோன் என்ற மும்பாய் அழகியை காடையர்கள் கடத்திக் கொண்டு போய், சித்திரவதைகளுடனான, பாலியல் வல்லுறவும், படு கொலையும் நிகழ்ந்ததே! இது நடந்து பல நாட்கள் கழியும் வரை ஊண் உறக்கமின்றி, நான் மனம் கசங்கிக் கிடந்தேன். ஊடகங்களும், பொதுமக்களும் குமுறியெழுந்தது, இன்னும் நினைவிலிருக்கிறது.

வடக்கில் இராணுவ வெறியர்கள் தமிழ்ப் பெண்களை, விசாரணைக்கென இட்டுச் சென்று, இருட்டறைகளில் நிர்வாணமாக்கி, கற்பை சூறியாடிவிட்டு, கொலை செய்து குழிகளில் போட்டு மண் நிரப்பிய இரத்தக்கறை படிந்த அத்தியாயங்களை, நம்மால் எளிதில் மறந்துவிட முடிகிறதா? யுத்தச் சூழலில் காட்டுமிராண்டிகளின் தர்பார் கொடிகட்டிப் பறந்தது. அன்று ரீட்டா ஜோனின் சிதைவு, என்னுள் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியது. அந்தக் கொடூரக் காட்சி என் நினைவுகளிலிருந்து விலகிட மறுத்தன. அந்த உறுத்தல் 'ஒரு குயிலின் சித்திரவதை' என்னும் கவிதையாக உருவெடுத்தது. அதன் சிறப்பை சிலாகித்து என்னை விதந்து பாராட்டி, பலரும் உற்சாகமூட்டினர்.

அந்தக் கவிதையினை ரீட்டா ஜோனின் கணவர் படித்திரு ப்பாரேயானால், அந்தப் படைப்பு அழியா ஓவியமாக அவர் நெஞ்சில் நிலைத்திருக்கக்கூடும். கல்லூர்க் கிராமம் நித்திரா தேவியை அணைத்து மகிழும், இரவு வேளை. தெருவிளக்குகள் ஒளி மங்கிச் சுடர்ந்தன. சாத்திய முகப்புகளோடு, இல்லங்கள் சலனமின்றி ஓய்ந்து போய் இருந்தன. கிராமத்து இருளுக்கு இறுக்கம் அதிகம்.

அடர்ந்து சடைத்து, வளர்ந்த காட்டு மரங்கள் இராப் பொழுதில் பீதியூட்டிக் கொண்டிருந்தன. நகரத்தைப் போலன்றி, கிராமம் பத்து மணிக்கு மேல், உயிர்ப்பற்று ஓய்ந்து போயிருக்கும். கிராமவாசிகள் முன்தூங்கி, முன்னெழும்பும் வர்க்கத்தினர். ஒரு மணியைத் தாண்டிய பின்னிரவு வேளை,

அவன் நிம்மதியற்ற மனநிலையில் தெருவில் அலைந்து கொண்டிருந்தான். எங்கும் ஆளரவமில்லை. கஞ்சாவும் ஹெரோயினும் ஏற்றிய போதையில் அவன் கால்கள் தடுமாறின. விழிகள் தீக்கங்குள்களாக சிவந்து துடித்தன.

சதைப் பிடிப்பற்ற அவனது முகத்தில், எலும்புகள் துருத்திக் கொண்டு மிதந்தன. கோடு போட்ட சாரமும், கட்டைக்கை சேர்ட்டும் அணிந்திருந்தான். ஒரு முப்பதைத் தாண்டாத மெலிந்து உயர்ந்த தோற்றம். அலை பாயும் பெரிய விழிகளும் அடர்த்தி யில்லாத முகத்தாடியும், அவனுக்கு இந்தக் கிராமமே தன் ஆளுகைக்கு கீழிருப்பதான நெஞ்சு நிமிர்த்திய தோரணை சந்தடியில்லாமல் வீடுகள் பலவற்றைத் தாண்டி ஒழுங்கையால் நடந்து சென்றான்.

ஒரேயொரு வீட்டில் மட்டும், தொலைக்காட்சி ஒலியெழுப்பிக கொண்டிருந்தது. ஆண்களும், பெண்களும் குழுமியிருந்து, சினிமா ரசனையில் லயித்திருந்தார்கள். கொல்லென்ற கூட்டுச் சிரிப்பொலி உரத்துக் கேட்டது. தமிழ்த் திரைப்படமொன்றின் மூன்றாந்தர நகைச்சுவைக் காட்சியொன்றினை மனம் குதூகலித்து, ரசித்துக் கொண்டிருந்தார்கள் போலும். அவன் போதையேறிய விழிகளால் அனைத்தையும் அனுமானித்தவனாக பதற்றமின்றி நடந்து சென்றான்.

திரைப்பட கலகலப்பிற்கு அடுத்தாற் போன்று, ஒரு சிறிய குடிசை. அதில் வாசம் செய்வோரின் வறுமையைத் துல்லியமாக பறைசாற்றிக் கொண்டிருந்தது. குடிசைக் கதவு லேசாகத் திறந்த நிலையிலிருந்தது. அவன் ஓசைப்படாமல், கதவை மெல்லத் தள்ளினான். காற்று ஓசையின்றி சுற்றுச் சூழலுக்கு குளிர்மையை விதைத்துச் சென்றது.

ஒரு ஏழு வயதுச் சிறுமி, முகத்தில் மழலைப் பாவம் சுடர பாயில் உறங்கிக் கொண்டிருந்தாள். அவன் அர்த்தபுஷ்டியோடு அவளை வெறித்துப் பார்த்தான். சிமினி விளக்கு மேசையில் எரிந்தும் எரியாமலும் போக்குக் காட்டியது. இவனை ஆட்டிப் படைக்கும் மிருகம், பூதாகரமாய் விழித்துக் கொண்டது. கிறங்கும் விழிகளால் சுற்றுச்சூழலை அளந்தான். ஆளரவமோ, ஓசைகளோ சிறிதுமில்லை. சிறுமியின் தாயும், தந்தையும் பக்கத்து வீட்டு சினிமா ரசனையில் மூழ்கிப் போய் கிடந்தனர். இவனது மனதில் என்றுமில்லாத தைரியம் வலுத்தது.

சிறுமியைத் தூக்கி தோளில் போட்டுக் கொண்டான். போர்த்தியிருந்த துணியினால் அவளை நன்றாக மூடிக் கொண்டான். எதிர்ப்புகள் எதுவும் இல்லையென்பதை நன்றாக உறுதி செய்து கொண்டு, ஆட்டைக் கவ்விய ஓநாயாக, மரங்களடர்ந்த காட்டுப் பாதையினூடாக, இருளில் மறைந்தான்.

ஊரின் பரபரப்பு உச்சக்கட்டத்தில் இருந்தது. லரீபுடைய ஏழு வயது பெண்பிள்ளையை எவனோ இரவு கடத்திக் கொண்டு போய், கெடுத்து விட்டு, தெருவில் போட்டுவிட்டுப் போய்விட்டானாம். யார் என்று தெரிந்திருந்தால், அவனை ஒரே வெட்டாய் வெட்டிக் கொன்று போட்டிருக்கலாம். பலர் ஆத்திரம் கொண்டு கதைக்கத் தலைப்பட்டனர். ஒழுக்கம் மரியாதையோடு வாழ்ந்து வந்த கல்லூர்க் கிராமவாசிகளுக்கு, இந்தப் பயங்கரச் சம்பவம், முதல் அனுபவமாக அதிர்ச்சி தந்தது.

சிறுமி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, பிறப்புறுப்பில் ஐந்து தையல்கள் இடப்பட்டன. அந்தப் பிஞ்சு உடல் பெரிய பாதிப்புக்குள்ளாகியிருந்தது. தாய்மார்கள் ஒன்றுகூடி, அந்த முகமறியாக் காமுகனை மனம் குமுறிச் சபித்தார்கள். அச்சத்தினால் தங்கள் பெண்பிள்ளைகளை வெளியில் அனுப்பாது வீட்டினுள் பாதுகாத்தனர்.

பொலிசார் லரீபிடம், யார் மீது சந்தேகமென வினவினார்கள். எப்போதும் போதையில் திரியும் கரீம், இதைச் செய்திருக்கக் கூடுமென, ஊகம் தெரிவிக்கப்பட்டது. சிறுமி அடிக்கடி மருத்துவ மனையில் நினைவிழப்பதும், அதிர்ச்சியுறுதுமாகத் துயருற்றாள். தாய் கண்ணீர் விட்டுக்கதறி அழுது வருவோர், போவோரிடம் நெக்குருக முறையிட்டாள்.

நாட்கள் நகர்ந்தன. குற்றவாளி யார், என்பதை கண்டு பிடிக்க கஷ்டமாக இருந்தது. கரீமை சந்தேகத்தின் பேரில் பொலிஸ் கைது செய்தது. அவனை அடித்துத் துன்புறுத்தி வாக்குமூலம் பெற முனைந்தது.

"நான் சிறுசிறு களவுகள் செய்திருக்கிறேன். போதைப் பொருள் பாவித்திருக்கிறேன். இந்தக் காரியத்தை நான் செய்யவில்லை! நான் நிரபராதி" என்று கரீம் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தான். காவல் துறையினருக்கு நேரடி சாட்சி இல்லாதிருந்ததால், வெறும் ஊகங்களை வைத்துக்

கொண்டு, வழக்குத் தொடுப்பது சங்கடமாக இருந்தது.

கரீமின் சகாக்கள் இருவரைப் பிடித்து வந்து விசாரித்தும், சம்பவத்திற்கான ஆதாரங்கள் எதுவும் கிட்டவில்லை. சிறுமி பொலிசாரைக் கண்டு மிரண்டாளே தவிர, மேலதிக தகவல் கூற அச்சப்பட்டாள்.

கரீம் திருட்டுமுழி கொண்டவன். கட்டாக்காலி மாடு போல், தொழிலில்லாமல் ஊரைச் சுற்றிக் கொண்டிருப்பவன். களவு, சூது, போதைப் பொருள் பாவித்தல் போன்றவற்றில் பெரிதும் ஐக்கியப்பட்டிருந்தான். தூர இடமொன்றில் திருமணம் முடித்து, இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை என்றாலும், குடும்பத்தோடு எந்தத் தொடர்புகளுமற்று வாழ்பவன். அவன் வம்புச் சண்டைக்குப் போய், பலரிடமும் அடிவாங்கிய அனுபவம் அதிகம்.

சிறுமியைப் பார்ப்பதற்கு ஊரவர்கள் மருத்துவமனைக்கு வருவதும் போவதுமாக இருந்தார்கள். யாரும் சிறுமியிடம் எந்தக் கேள்வியும் கேட்கக் கூடாது, என்பது மருத்துவரின் கண்டிப்பு. அதனால் சிறுமியின் மனநிலை மேலும் பாதிப்படையலாம், என்பது அவர்களது கருத்து. பிள்ளைக்கு நேர்ந்த கொடுமையை நினைத்து தாயும், தந்தையும், துடித்தழுதனர்.

சிறுமியின் தந்தை லரீப், அன்றாடக் கூலி வேலை செய்து பிழைப்பவன். பரமஏழை, அவனிடம் மருந்துச் செலவுகளுக்கோ, வழக்கை, தொடர்ந்து கொண்டு செல்வதற்கோ, பணமில்லை என்ற காரணத்தால், ஊரார் மனமுவந்து உதவி வந்தனர்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் மீது இரக்கங்கொண்டு, நானும் அடிக்கடி மருத்துவமனை சென்று, உதவிகள் புரிந்தேன்.

அது ஒரு மதியப் பொழுது!

தாடி வளர்த்து, விழிகள் பெருத்த, ஒல்லியான ஒருவன், சிறுமியின் அடுத்த கட்டிலில் இருந்த, நோயாளியைப் பார்ப்பதற்காக, வார்டினுள் பிரவேசித்தான். சிறுமி அவனைக் கூர்ந்து பார்த்துவிட்டு கலவரமடைந்தாள்.

“இவன்தான்......! இவன்தான், என்னைத் தூக்கிக் கொண்டு போனவன்!” என்று பீதியோடு பிதற்றத் தொடங்கினாள். எனது தேகாந்திரம் புல்லரித்தது. தீர்க்கமாக அவனை ஊடுருவிப்

பார்த்தேன். அவன் ஒரு பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவன். முஸ்லிம் கிராமத்திற்குள் துணிவோடு வந்து இந்தப் பயங்கரத்தை எப்படிச் செய்வான்?

ஆனபோதும், எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ? என குழம்பிப் போனேன். அவனை நெருங்கி நளினமாகக் கதைகொடுத்தேன். "இந்தப் பிள்ளையை இதற்கு முன் உனக்குத் தெரியுமா?" என்று வினாத் தொடுத்தேன். அவனது முகபாவங்களிலிருந்து, இச்சம்பவத்திற்கும் இவனுக்கும் தொடர்பிருக்கச் சாத்தியமே இல்லையென்பதைத் தெளிவாக உணர்ந்தேன்.

அவனது முகத்தை மீண்டும் கூர்ந்து நோக்கினேன். உள்புதைந்து கிடக்கும் யதார்த்தமொன்று, என் அடிமனதில் நிழலாடியது.

நான் லரீபின் தோள்களை ஆதரவுடன் பற்றினேன். "என்னைத் தோளில் போட்டுக் கொண்டு போனவன் இவன்தான்!" என்று சிறுமி மீண்டும் பிதற்றினாள். "இவனல்ல!, இவன் கரீமின் சாயலை அப்படியே ஒத்திருக்கிறான்! கரீமை கூட்டிவந்து இவள் முன், நிறுத்தினால் உண்மை வெளிச்சத்துக்கு வரும்" என்றேன். நானும் லரீபும் காவல்நிலையம் சென்று இன்ஸ்பெக்டரிடம் நடந்த விடயத்தைக் கூறினோம். அவர் உற்சாகமடைந்து, அப்படிச் செய்து பார்ப்போம் என்றார்.

"எங்களைக் கண்டவுடன் பிள்ளை நடுங்குகிறது. நாங்கள் பின்னணியில் மறைந்து இருந்து, கொண்டு தான் விசாரணை களைத் தொடர வேண்டும்" என்று கூறினார் அவர். இதன் பெறுபேறுகள் எப்படியமையப் போகிறதோ? இந்த முயற்சியும் பிழைத்துப் போனால், குற்றம் புரிந்தவனை எவ்வாறு கண்டு பிடிப்பது? என்ற எண்ணச் சுழற்சியில் தடுமாறிப் போனேன் நான். ஒரு அறையில் கரீமை சுற்றிலும் பாதுகாப்போடு நிறுத்தி விட்டு, சிறுமியைக் கூட்டிவந்து அவன் முன் நிறுத்தினோம்.

பொலிசார் மறைந்திருந்து அங்கு நடப்பவற்றை கெசட்டில் பதிவு செய்தனர்.

"இந்த நாய்தான், இவனேதான், எனக்கு அநியாயம் செஞ்சவன்!" சிறுமி குமுறிக் குமுறி அழுதாள்.

கரீம் மீண்டும் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு, இரவு பூராவும் கடும் சித்திரவதை செய்யப்பட்டான். முகம், கை, கால்கள் தாக்குதல்களால் வீங்கிப் புடைத்திருந்தன. உண்மையை அவனது வாயினால் எடுப்பதற்கு அதீதப் பிரயத்தனம் செய்யப்பட்டது. “உண்மையைச் சொல்லாவிட்டால், உன்னை விடிவதற்கு முன், பிணமாக்கிப் போடுவோம்!” என்று பொலிசார் அச்சுறுத்தினர்.

வலியையும், வேதனையையும் சகித்துக் கொள்ள இயலாத அவன், இறுதியில் தானே குற்றம் புரிந்ததாக ஒப்புக் கொண்டான். விசாரணை தீவிரமாக முடுக்கிவிடப்பட்ட நிலையில், அவனை சம்பவம் நடந்த இடத்திற்கு ஊருக்குள் கூட்டி வந்தனர் பொலிஸார். காட்டில் நீண்டு வளர்ந்திருந்த ஒரு புளியமரத்தின் அடிப்பாகத்தை அவன் சுட்டிக்காட்டினான்.

இங்கு, சிவப்பு நிறத்தில் பழுப்பேறிய உள்ளாடையொன்று கண்டு பிடிக்கப்பட்டது. அது கரீமினுடையதுதான் என அவனது சகாக்கள் அடையாளம் காட்டினார். அவனைப் பொலிஸார் ஊருக்குள் நடையிலேயே அழைத்து வந்தனர். ஊரே திரண்டிருந்தது. ஆத்திரத்தால் ஊரவர்கள் அவனைத் தாக்கத் தொடங்கினர். சிலர் ஆக்ரோஷம் கொண்டு அவன் மீது கல்லால் எறிந்து காயப்படுத்தினர்.

நிலைமை மோசமாகவே, பொலிஸார் சிரமப்பட்டு அவனை விடுவித்து, அழைத்துச் சென்றனர். இச் செய்தி ஊடகங்களில் கொட்டை எழுத்துக்களில் பிரசுரமாயின. அடையாள அணி வகுப்பில் சிறுமியினால் சரியாக இனங்காணப்பட்டான். அவன் தான் குற்றமிழைத்தவன் என்பதற்கு போதிய வைத்திய ஆதாரமிருந்தது. பிரதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

“குற்றவாளியை தப்பிச் செல்ல விடாதே! கரீமுக்கு மரண தண்டனை கொடு!” என்று, பதாதைகளைப் பிடித்தவாறு பெண்கள் போராட்டம் நடத்தினர். வழக்கு மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. பத்து வருடத்திற்கு குறையாத, கடுழியச் சிறைத் தண்டனை கரீமுக்கு நிச்சயம் கிடைக்கும் என வக்கீல்கள் உறுதியாகக் கூறினர்.

வைத்தியசாலையில் அன்று ஒரு அசாதாரண பரபரப்பும்

அதிர்ச்சியும் நிலவியது. எல்லோர் முகங்களிலும் பதற்றம் கவிந்திருந்தது. லரிபின் மகள் காலையில் மலசலகூடத்தில் கால்வழுக்கி விழுந்து, அவசர சிகிச்சைப் பிரிவிற்கு கொண்டு செல்லப்பட்டாள். கீழே விழுந்ததில் கடும் காயத்திற்கு ஆளானாள். பாதிக்கப்பட்ட இடத்தில், உடன் ஆப்பரேஷன் நடத்தப்பட வேண்டுமென டொக்டர்கள் கூறினர்.

அக்கினி மழை பொழிந்தது!.

வானத்திலிருந்து அல்ல!

அந்த ஏழைப் பெற்றோரின் கசிந்த விழிகளிலிருந்து. பூத்துக் காய்ப்பதற்கு முன் - சிறுதளிர், சிதைந்து போன அவலத்திற்காக. ■

**- மல்லிகை, 39ஆவது ஆண்டு மலர்**
**ஜனவரி 2004**

# மிருக உத்தி

குளிரில் விடிகாலை உறைந்திருந்தது. சோர்வும் உறக்கக் கலக்கமுமாக உற்சாகம் பிறக்கவில்லை. வாசல் திண்ணையில் அமர்ந்தவாறு, சூழ்ந்திருந்த மரம், செடிகளை அர்த்தமின்றி வெறித்தேன். எங்கும் புகை கவிந்த பனிமூட்டம். மாமரத்தி லிருந்து முத்துத் துளிகள், சொட்டுச் சொட்டாய் தரையை நனைத்தன.

கூ......வ்!, கூ.........வ்!, எங்கோ கிளையொன்றில், லதா மங்கேஷ்கார், தொனியில் குயில் கூவத் தொடங்கியது. சுருதியிசை, குருதிநாளங்களை தொட்டுலுப்புவது, ஒரு ஆனந்த லாகிரிதான்! குயிலிசைதான் எத்தனை இன்னிசை! சூட்சும, ராகபாவ, குழைவு. இந்தத் தேனாமிர்த இசை லயத்திலே, மயங்கிச் சிலிர்த்து, மனதைப் பறிகொடுக்காதோர், யார் உளர்?

நமது கவி பாரதிக்குக் கூட குயில்பாட்டு ஆன்மாவின் கூவலாக உள்ளுணர்த்தியிருக்கிறதே! "குக்குக்கூ, என குயில்பாடும் பாட்டினிலே, தொக்க பொருளெல்லாம் தோன்றியதென் சிந்தைக்கே கன்னிக் குயில் அன்று காவிடத்தே பாடியதோர் இன்னிசைப் பாட்டினிலே, யாதும் பரவசமாய்.....!" என தன் குயில் பாட்டினிலே பாரதி, பரவசமடைந்துள்ளான்.

ஒவ்வொரு காலைக் கருக்கலிலும் குயிலிசை இயல்பாய் தொடங்கி, ஆற்று நீரோசையாக, பிரவாகம் கொள்ளும். ஒற்றைக் குயிலின், சோக ஆலாபனை உயிரணுக்களை சுண்டியிழுக்கும், சில பொழுதுகளில் அவை போட்டிக்கு கூவி தமது ஆளுமையை பறைசாற்றிக் கொள்ளும். கிராமத்து விடியலை அர்த்தமுள்ள தாக்குவதில், குயில் கூவுகை, பிரதான பங்கு வகிக்கும்.

என்னுள் ஒரு கேள்வி தீவிரமாய் எழும். குயிலின் நெக்குருக வைக்கும் இனிய சுருதி சோகமயமானதா? இன்பமயமானதா? இது பற்றித் தீர்க்கமான ஒரு முடிவிற்கு வர இயலாத ஒரு மயக்கநிலை, எனக்கெப்போதும் உண்டு. அதன் பாடுபொருளில், இனம்புரியாத சோக நெருடல் உள்ளமுந்திக் கிடக்கிறது, என்பது மறுக்கவியலாத உண்மை தான்.

சோகம் என்பது ஒரு கை ஓசை மட்டுமல்லவே. அதன் மறுபக்கம் இன்பம் என்று ஒன்றிருக்கிறதே! அதையெப்படியது வெளிப்படுத்துகிறது எனது குயிலாய்வு இன்னும் முற்றுப்பெற வில்லை. ஆவி பறக்கும் தேனீரைக் கொண்டுவந்து பிரியமுடன் நீட்டினாள் மனைவி.

இது ஒரு உற்சாகமான சமாச்சாரம்தான், இந்த விடிகாலை வேளையில்.......? (நான் தேனீரைச் சொன்னேன்). இசைக்குயில், ஜானகியின் பழைய பாடலொன்று நெஞ்சில் இனித்தது.

குயிலே! குயிலே, உந்தன் கீதங்கள் கேட்காதோ?
உயிரே! உறவே, அந்தக் காலங்கள் வாராதோ......?

வாஞ்சையோடு ஏறிட்டுப் பார்த்தேன், மனைவியை. குயிலே! என்று இவளை அழைக்கலாமா? ஒரு இருபது வருடங்களுக்கு முன், தெரியாத்தனமாக அப்படியெல்லாம் அழைத்திருக்கிறேன். இப்போது கூடாது! நெற்றிப்பரப்பின் இரு முனையிலும் நரை படர்ந்திருக்கிறது. என்பதற்காக அல்ல! இவளது குரல் பல சந்தர்ப்பங்களில் வீட்டுக்குள்ளிருந்து தெரு முனை வரை கேட்கும். கர்ண கடூரமாய், அபஸ்வரமாய் கூட, அது ஒலிக்கும். இவளை அப்படி அழைத்து குயிலைக் கொச்சைப்படுத்துவது, அநியாயம்.

ஒவ்வொரு காலைப் பொழுதிலும் ஏதாவது ஒரு விண்ணப்பம், அல்லது வேண்டுகோள், இவளிடமிருந்து திடீரென கெசட் அறிவித்தல் போன்று வரும். அவை அதிகார தொனியிலோ, நளின பாவனையிலோ வரலாம். அது சூழலைப் பொறுத்தது. அரசியல்வாதிகளைப் போன்று, "பார்க்கலாம்!" என்று முத்தாய்ப்பு வைப்பேன்.

இந்த வைகறைப் பொழுது இருக்கிறதே, அது வயதான தம்பதியினருக்கு கொஞ்சம் நெருக்கமான தருணம் தான். நிறைய மனம்விட்டுப் பேசிக் கொள்ளலாம். ஏனைய பொழுதுகளில், இளசுகளின் மேலாதிக்கம் ஓங்கி நிற்கும். இது தவிர இளைய தலைமுறையினரின் உறக்கம் களைய, சூரியன், சுள்ளென்று உறைக்க வேண்டும்.

"எங்கட ஆடு, ராவெல்லாம் தொண்ட கிழியக் கத்துற, தீன் திண்ணாறோமில்ல! ஒரு கிடாயக் கொணாந்து பட்டிக்குப்

போடோணுமப்பா. நீங்க கவனமில்லை". விண்ணப்பம் கையளிக்கப்பட்டதை, உறுதி செய்யுமாப் போல கொட்டிலில் இருந்து காட்டுத்தனமாகக் கத்தியது, எங்கள் பெண் ஆடு.

"நாளைக்கு ஒரு கிடாய் கொணாந்து, பட்டிபோட்டிட்டு திருப்பிக் கொடுக்கோணும்!"

எனது பதிலில் தெரிந்த உறுதிப்பாட்டில் அவளது முகத்தில் திருப்தி பரவுகிறது. நண்பன் ரஸாக்கின் வீட்டில் நிறைய ஆடுகள் உள்ளன. அதற்கும் மூன்று மைல்களைத் தாண்டிப் போக வேண்டும். இது விடயமாக ஒரு நாள் ரஸாக்கிடம் கதைத்தேன்.

"இது ஒரு சின்னப் பிரச்சினை மச்சான்! என் கிட்ட வாட்டசாட்டமான ஒரு பங்காளிக்கிடா இருக்கி, குதிரை மாதிரி. நீ அதைக் கொண்டு போய், காரியத்தை முடிச்சுப் போட்டு, திருப்பி கொண்டுவந்துதா! அத நான் கிட்டடியில் ஐயாயிரம் ரூபாய்க்கு வாங்கினேன்" என்றான்.

ஓரிரண்டு சிறிய ஆட்டுக்குட்டிகள் எங்கள் தோட்டத்திலும் துள்ளிக் குதித்து விளையாடுவதைப் பார்க்க, எனக்கு மட்டும் ஆசையில்லாமல் போய்விடுமா? ஒரு நேரத்தை ஒதுக்கி, அங்கு போய் வருவதில் உள்ள சிரமமே இந்தத் தாமதத்திற்குக் காரணம். இனியும் காலம் தாழ்த்தக்கூடாது. எப்படியும் காரியத்தில் இறங்க வேண்டும்.

இன்று ரஸாக்கை சந்தித்ததில் பரம திருப்தி. அவன் ஒரு பெரிய ஆட்டுப்பண்ணையையே வைத்திருந்தான். பென்னம் பெரிய அழகான பங்காளிக் கிடாய் ஒன்றினைத் தெரிவு செய்து தந்தான். கொஞ்சம் முரண்டு பிடித்த போதும், ஒருவாறு சமாளித்து, கயிற்றைக் கெட்டியாகப் பிடித்தவாறே நடையிலேயே வீடு வந்து சேர்ந்தேன். மனைவி புதிய நிபந்தனை ஒன்றை விதித்தாள்.

"வயசுக்கு வந்த கொமருப்புள்ளைகள் ரண்டு வூட்டுக்குள்ள இருக்கிற, அதுகள்ட கண்ணுக்குப் படாம, ஆடுகள் ரண்டையும் தோட்டத்துக்குள்ள கொண்டு பெயித்திருங்க."

நான் அவளை எரிச்சலோடு முறைத்துவிட்டு, தோட்டத்தின் நடுப்பகுதிக்குச் சென்றேன். இப்போது உள்ள வயதுப் பிள்ளைகளுக்கு எதுதான் தெரியாது. கால மாற்றமும், சூழலும்

அவர்களை மனரீதியாக முதுமைக்குள் தள்ளிவிட்டன.

இதுதவிர, சும்மா சொல்லக்கூடாது. நமது தொலைக்காட்சி சேவைகள் குறித்து, பெருமைப்பட்டுக் கொள்ளலாம். இளமனது களில் பாலியல் உணர்வுகளைத் தூண்டிவிட, இருபத்தி நான்கு மணித்தியாலங்களும், அவற்றின் பங்கு அழுத்தமானது. தமிழ் சினிமா மோசமான பாலியலைப் புகுத்தி இளையவர்களின் மனதை அசுத்தப்படுத்தி, காசு சம்பாதிக்கிறது.

கலாசார சீரழிவுகளும், நெறிபிறழும் சுற்றுச் சூழல்களும், அவற்றினால் எழும் மன அழுத்தங்களும் வியாபித்த வண்ண மிருக்கின்றன. சமூக மாற்றங்க்ள இப்படித் தலைகீழாகிப் போவதை, எப்படித் தடுத்து நிறுத்துவது? இவை குறித்த அலட்டல்கள் மனதைக் குடைந்தன. கிடாயைத் திடீரெனக் கண்ட ஆடு, அச்சத்தினால் பின் வாங்கித் தடுமாறுகிறது கிடாய் தாபத்தில் தும்முவதும், சிலிர்ப்பதுமாக கணங்கள் நீள்கிறது. ஆடுகள் இரண்டும், வேட்கை தணிப்பதில் உற்சாகமாகத் துள்ளிக் குதிக்கின்றன. கிடாயின் மன்மத அலறல் ஓங்கி, தோட்டத்து மரங்களை கிலி கொள்ளச் செய்தன.

இருட்டத் துவங்கியதும், ஆடுகளிரண்டையும், கொட்டிலில், கட்டிவிட்டு, களைப்போடு உறக்கத்தில் ஆழ்ந்து போனேன். பாதி ராத்திரி ஒரு மணியிருக்கும். ஆடுகளின் கத்தல் ஓங்கியொலித்தன. கழுத்திறுகி சாகப் போவதைப் போன்ற கோரமான கூக்குரல். டோர்ச் ஒளியைப் பாய்ச்சியவாறு கொட்டிலிற்கு விரைகிறேன். மனைவியும் பின்னால் ஓடி வருகிறாள். ஆடுகளின் கழுத்தில் கட்டியிருந்த கயிறு மாட்டுப் பட்டுச் சிக்கி, சுவாசம் விட முடியாதவாறு, மூச்சடைத்து சங்கடப் பட்டன.

கயிற்றுப் பிணையலின் சிக்கல் நீக்கி, ஒவ்வொன்றையும் வேறு வேறாக மரங்களில் கட்டினேன். "கிடாய, கட்டாம, சும்மா அவிழ்த்துவுடுங்கோ, ஆட்ட மட்டும் கட்டுங்கோ! பெண்ணை வுட்டுட்டு ஆண் எங்கயும் பெயித்திரப் போவதில்லை."

அவள் ஆட்டுக்குச் சொன்னாளோ? அன்றி முழு ஆண் சமுதாயத்திற்கும் சேர்த்துத்தான் சொன்னாளோ, தெரியவில்லை. அவளது ஆலோசனையை அமுல்படுத்தினேன். பொழுது புலர்ந்தது. எந்த ஓசைகளுமில்லை. நேற்றுப் போட்ட

களியாட்டத்தில் அவை களைத்துப் போய் ஓய்வெடுப்பதாக எண்ணிக்கொண்டேன். ஆறுதலாக வெளியே வந்து கொட்டிலை எட்டிப் பார்த்தேன். தலை கிறுகிறுத்து மூச்சு நின்று விடும் போலிருந்தது. பேரதிர்ச்சி! கிடாயைக் காணவில்லை. சுற்றுமுற்றும் தேடிப் பார்த்தேன். பெண் ஆடு மட்டும் சாவகாசமாக அசை போட்டுக் கொண்டிருந்தது. மூத்திர நெடி மூக்கைத் துளைத்தது.

மனைவியைத் திட்டித் தீர்த்தேன். கிடாயை கட்ட வேண்டாம் என்று ஆலோசனை சொன்னவளே அவள்தானே. எல்லாம் நாசமாகிவிட்டது. பெண்ணின் சொல்லைக் கேட்டதால் தான் இப்படியாகிவிட்டது. ரசாக்குக்கு என்ன பதில் சொல்வேன்? கிடாய் காணாமல் போய்விட்டது, என்று சொன்னால் அவன் நம்புவானா? அதன் பெறுமதியான ஐயாயிரம் ரூபாயைத் தண்டமாகச் செலுத்த என்னிடம் ஏது பணம்?

பித்துப் பிடித்தவனைப் போல் நின்று பலவாறு சிந்தித்தேன்.

கிடாய்க்கு என்ன நடந்திருக்கும்? திருடர்கள் யாரும் கடத்திக் கொண்டு போய், கசாப்புக் கடைக்கு கொடுத்து, இரவிரவாக காசாக்கியிருப்பார்களா? அது ரஸாக்கின் வீட்டைத் தேடிக் கொண்டு போயிருக்குமா? அதெப்படிச் சாத்தியம்? இப்பகுதி அதற்கு புதிய இடம். வழிதெரியாது, எங்காவது பாதையில் தறிகெட்டு சுற்றித் திரிகிறதா?

இது ஒரு தேவையில்லாத வேலை. இவளது பேச்சைக் கேட்டு இப்படிச் சிக்கலில் மாட்டிக் கொண்டேனே. நண்பனுக்கு என்ன பதில் கூறுவேன்?

"இஞ்ச எங்கேயெண்டாலும் மேஞ்சி கொண்டீக்கும். தேடிப் பார்த்து இழுத்து கொண்டு வாங்க."

ஒரு காட்டமான பார்வையினால் அவளை முறைத்தேன். இப்படியான சந்தர்ப்பங்களில் மனைவி என்பவள், வாயை மூடிக்கொண்டு, மௌனமாய் இருப்பது மேலான செயல், என்பதினை இவள் எப்போது உணரப் போகிறாள்? மொத்தமான வேலித்தடி ஒன்றனை முறித்து கையில் எடுத்தேன்.

மனைவியை அடிப்பதற்காக அல்ல! கிடாய் எங்காவது நின்றிருந்தால், நாலு விளாசி, அதை இழுத்து வரத்தான். சுற்றுப் பகுதிகளில், தேடுதல், விசாரணை என்று எல்லாம்

ஆயிற்று. ஆட்டைப் பற்றிய எந்தத் துப்பும் கிடைக்கவில்லை. பொலிஸில் ஒரு முறைப்பாடு கொடுக்கலாம் தான். எதற்கும் ரஸாக்கைக் கண்டு நடந்ததை சொல்ல வேண்டும்.

ரஸாக் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் உற்சாகமாக வரவேற்றான். என் முகத்தில் மலேரியா பிடித்தவனின் சோர்வு. தயங்கித் தயங்கி நிலைமையை எடுத்துச் சொன்னேன். அவன் என் மீது ஒரு சந்தேகப் பார்வையினை உதிர்ப்பது போன்று நான் உணர்ந்தேன். ஆட்டின் விலை ஐயாயிரத்தை தந்தாலும் சரி, அதேபோல ஒன்றை வாங்கித் தந்தாலும் சரி எனக் கேட்பான் என்று எதிர்பார்த்தேன்.

"வா! என் கூட", என்றவாறு என்னையழைத்துக் கொண்டு பின்புறம் சென்றான். ஆச்சரியம் நீங்கச் சில கணங்கள் எடுத்தன எனக்கு. காணாமல் போன கிடாய், அங்கு நிம்மதியாக அசை போட்டுக் கொண்டிருந்தது. சாம்பலும், மஞ்சளும், கலந்த அதன் விழிகளைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனேன்.

"மச்சான்! இதக் காட்டுவழியாகத்தான் கூட்டிச் சென்றேன். இது சரியாக இலக்கைக் கண்டு பிடித்து, எப்படி இங்கு வந்து சேர்ந்தது?"

ரஸாக் குழந்தைச் சிரிப்பொன்றை, உதிர்த்து விட்டுக் கூறினான்.

"மச்சான், மனிதனை விட விலங்குகளுக்கு சமயோசித புத்தியும், மோப்பம் பிடிக்கும் சக்தியும் அதிகம். அது புதிய இடங்களுக்குப் போகும் போது, இடத்திற்கிடம், சிறுநீரைக் கழித்தவாறு செல்லும். திரும்பி வரும் போது அந்த மூத்திர நெடியை இனங்கண்டு முகர்ந்தவாறே இருப்பிடத்தை அடைந்து விடும். விஷயம் அவ்வளவுதான்."

எனக்கு இது புதிய தகவலாகவும், அதிர்ச்சி தருவதாகவும், இருந்தது. அவன் மீண்டும் விபரித்தான்.

"மச்சான், விலங்குகளின் அனுபவ உலகம், மிக விசித்திர மானது. மோப்பம் பிடித்து சூட்சுமாக உணர்தலில் கூர்மை யுள்ளவை அவை. நன்றாக நாம் இவற்றை அனுமானித்தால் எளிதில் புரிந்து கொள்ளலாம். தமிழ்பட கதாநாயகர்களைப் போல, பல பேரோடு சண்டையிட்டு வீரத்தை நிலைநாட்டும்,

மிருகத்தைத் தான் பெண் மிருகம் சடுதியில் இணை சேர்த்துக் கொள்ளும். நாய்களைப் பொறுத்தமட்டில் பல கூட்டாகப் பின்னால் போனாலும், அவற்றையெல்லாம் கடித்துக் குதறி, வெற்றி கொள்ளுமே ஒன்று அதுதான் கதாநாயகன் அந்தஸ்த்துக்கு வரமுடியும்."

இவ்வளவு விடயங்களையும் அறிந்து வைத்திருக்கிறானே. இவன் ஆடுகளை வளர்க்கிறானா? நாய்ப் பண்ணை வைத்திருக்கிறானா? என்ற சந்தேகமும் எனக்கெழத்தான் செய்தது. இந்த விலங்கினங்களின் ஹீரோ இஸத்தை கருத்தில் கொண்டு தான் தமிழ் திரைப்படங்களின் தலைவிதியை நிர்ணயித்தார்களோ, தயாரிப்பாளர்கள்? யார் கண்டார்கள். ஏதோ பெரிய சங்கடமொன்றிலிருந்து மீண்டுவிட்டேன். அதுவே பெரிய ஆசுவதம்.

வீட்டை அடைந்த போதும், மனைவியின் பரபரப்பு இன்னும் அடங்கவில்லை. கிடாய் அதன் இருப்பிடத்திற்கே போய்விட்ட விபரத்தை சொன்னேன்.

அவள் பற்கள் எல்லாம் வெளியே தெரிய உடல் குலுங்கிச் சிரித்தாள். எந்தப் பெண் வாய்விட்டுச் சிரித்தாலும், ஒரு அபாரக கவர்ச்சி வந்து விடுகிறது. இது அவர்களுக்கு கிடைத்த தனித்துவக் கொடை. என் மனைவியின் சிரிப்பில், ஒரு பத்து வயது குறைந்து இளமைத் தோற்றம் பெற்றுவிட்டதாய் நான் உணர்ந்தேன். ■

**- மல்லிகை**
**ஜனவரி 2003**
**ஆண்டு மலர்**

# மீட்பு

**வா**னொலியிருந்து நிகழ்ச்சிக்கான அழைப்பு வந்திருந்தது. இன்று உடம்பிற்கு சரியில்லை. நோய்க்கான சமிக்ஞை தென்பட்டது. மேனிக்குள் அரக்கன் புகுந்து கொண்ட வலி, உளைச்சல். எல்லாம் நீரிழிவு நோயின் உபாதை. உடலெங்கும் பரவியிருந்தது. இன்றைய யுகத்தில் சர்க்கரை நோயை விலைக்கு வாங்கிக் கொண்டு சங்கடப்படுவோர் ஏராளம். கட்டுப்பாடான உணவு, நேரத்திற்கு மாத்திரை, தினமும் தேகாப்பியாசம் என்றிருந்தால் நோயின் உக்கிரம் தணிந்திருக்கும்.

அசட்டையாக இருந்து குருதியேற்றங்களை அலட்சியம் செய்வதால், மேனியில் சீனியேறி சங்கடங்களை தோற்றுவிக்கும். இது கடுமையான நோய்களோடு கூட்டரசாங்கம் அமைத்துக் கொண்டு மனிதன் மேலூர் போவதற்கு இலவச விசா தருகிறது.

ஒவ்வொரு வெள்ளி தோறும் இரவு எட்டு இருபதுக்கு, எனது வாழும் கதைகள், நிகழ்ச்சி வானொலியில் நீண்ட காலங்களாக ஒலிபரப்பாகி வந்தது. இன்றைய ஒலிப்பதிவை திடீரென தள்ளிப் போடவியலாத சங்கடம் எனக்கு. ஊரிலிருந்து சிரமப்பட்டு, பஸ் எடுத்து, கொழும்பு புறக்கோட்டையை வந்தடை கிறேன். தலைநகரின் பேய் வெப்பம் குருதியணுக்களைக் குடைகிறது. கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பு வந்து நின்று, நூற்றிப் பதினைந்தாம் இலக்க பேருந்துக்காய், கால் கடுக்கக் காத்து நிற்கிறேன். பேருந்துகள் இராட்சத பெருமூச்சுடன் விரைந்து வருகின்றன. பிரயாணிகளை பொதிகள் ஏற்றுவதைப் போன்று அள்ளிப் போட்டுக் கொண்டு நெரிசலில் ஊர்கின்றன.

சனியன் பிடித்த நூற்றிப் பதினைந்து இன்னும் காண வில்லை. இது எப்போதும் இப்படித்தான். எப்போதாவது அபூர்வமாக வரும். அல்லது வராமலேயே காலை வாரிவிடும். இந்த பஸ்ஸில் போவதில் ஒரு நன்மை உண்டு. நேராகச் சென்று, ரூபவாஹினி தரிப்பிடத்தில் இறங்கிவிடலாம். ஒரு பொடிநடை போட்டதும் வானொலி நிலையத்தை எட்டி விடலாம். வேறு மார்க்கமாக வருவதென்றால் சிரமம்தான்.

ஐம்பது நிமிட நீண்ட நேரக் காத்திருப்பின், பின் நூற்றிப் பதினைந்து, சாவகாசமாக தூரத்தில் வருவது தெரிகிறது. வெறுப்புடன் கைக் கடிகாரத்தில் விழி புதைக்கிறேன். ஒலிப்பதிவு நேரத்திற்கு இன்னும் ஐந்து நிமிடங்களே எஞ்சியிருந்தன. இது ரதத்தினைப் போல், அசைந்தசைந்து மெல்லப் போய் சேர அரை மணித்தியாலமாவது எடுக்கும். காலை ஆகாரம் எடுக்கத் தவறியதால் வயிற்றுக்குள் வன்முறை வேறு. உடலின் பதைபதைப்பு, வெய்யிலின் அனல் வெப்பம், வியர்வை சுரப்பு இத்தியாதி, நெருக்கடிகள்.

எப்படியோ வந்து சேர்ந்து கலையகத்தினுள் காலடி எடுத்து வைக்கிறேன். நிகழ்ச்சி தயாரிப்பாளர், வழுக்கைத் தலையும், மூக்குக் கண்ணாடியுமாக அதிர்ப்தியுடன் என்னை வெறித்தார். அப்படியொன்றும் குறித்த நேரத்தில் சடுதியாக அங்கு ஒலிப்பதிவுகள் நிகழ்வதில்லை. அறை ஒழுங்கு செய்தல், கலைஞர் வருகை தாமதம் என பொழுது வெறுமனே கரைந்து விடும். என்றாலும் நிகழ்ச்சியை வழங்குபவர், குறித்த நேரத்தில் வந்திருக்க வேண்டுமென்பதில், ஒரு தொன்மையான மரபு பேணப்படுகிறது.

நிகழ்ச்சி ஒலிப்பதிவு முடித்து வரவேற்பறையில் வவுச்சருக்கு காசு பெற்று வெளியே வர, பகல் இரண்டு மணியைத் தாண்டி விட்டது. மீண்டும் திரும்பிச் செல்லும் உந்துதலில் பேருந்துக்காக தவமியற்றும் காத்திருப்பு. புறக்கோட்டை சென்றடைந்தால், செட்டித் தெரு அன்னபூர்ணாவில் பசி போக்க அன்னமெடுக்கலாம் என்ற கரிசனையில், விரைந்து வந்த பேருந்தொன்றில் ஏறித் தொற்றிக் கொள்கிறேன்.

பசிக்களைப்பில் கால்கள் நடுங்கின. உலகில் வாழும் காலம் வரை, மனித இருப்புக்கு இரண்டு விடயங்கள் முக்கிய மானவை என்பது தற்போதைய என் கணிப்பு. ஒன்று பணம், மற்றது உடலாரோக்கியத்துடன் கூடிய இளமை முறுக்கு. இவற்றை எங்கோ - எப்போதோ, தொலைத்துவிட்ட ஜீவித இருப்பின் மீது, எனக்கிப்போதும் கசப்பு.

பஸ்ஸின் நெரிசலில் உப்பு மூடைகள் அசைந்தன. வியர்வை நெடி, நெருக்கித் தள்ளும் மனித அழுத்தம், இந்தக் கஷ்டத்திற்குள்ளும் ஒரு கற்பனை வேறு சுரக்கிறது. எழுத்தாளன் ஆயிற்றே, கற்பனைகளோடு உள்ள ஆத்மார்த்த சிநேகம் வேறு

எதில் இருக்கிறது? ஜம்மென்று உட்கார்ந்து கொண்டு பிரயாணம் செய்ய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால், எத்தனை உவப்பான தாயிருக்கும்? கற்பனைகள் தான் எவ்வளவு இனிமையானவை? காரிய சித்தி கைகூடுகிறதோ, இல்லையோ? நமது மனம், கற்பனை நெகிழ்ச்சிகளில் சுகம் காண்கிறதே. கற்பனை பண்ணிப் பார்க்கிற அடிப்படை சுதந்திரமாவது நமக்கு எஞ்சியிருக்கிறதே. அதனால் தப்பிப் பிழைத்தோம். இது என்ன ஆச்சரியம்? கற்பனை கூட இத்தனை கெதியில் காரிய சித்தி ஆகிவிடுமா?

ஒரு கனவான் இருக்கையிலிருந்து எழுந்து நிற்கும் பிரயத்தனம். அடுத்த தரிப்பிடம் வந்ததும் அவர் இறங்கிவிடக் கூடும். தவளையைக் கவ்விய பாம்பாக அந்த இருக்கையை ஆக்கிரமித்ததின் பின்புதான், ஒழுங்காக மூச்சு வந்தது. ஜன்னலோர இருப்பு, இதமான காற்று, ஜில்லென்று முகத்தோடு உறவாடியது. பசிக்களைப்பு, சோர்வு, இவற்றின் கிளர்வினால் ஒரு குட்டித் தூக்கமே வந்துவிட்டது என்றால் அதை யாரால் தடுத்து நிறுத்திவிட இயலும்? இடத்திற்கிடம், அசைந்தசைந்து மெல்ல ஊர்ந்து, நடைபயில்கிறது பஸ். இடைக்கிடையில் கண்விழித்து புறக்கோட்டை அண்மித்துவிட்டதா? என நோட்ட மிட்டேன்.

மருதானை பழைய காமினி தியேட்டரின் முன்னால் தேர் தரித்து நின்றது. மீண்டும் குட்டித் தூக்க ரசனையில் விழிகள் கிறங்கின. சிறிது நேரம் சென்றிருக்கும் திடுக்குற்றுத் தடுமாறி விழித்தேன். பஸ்ஸுக்குள் என்னைத் தவிர வேறு எவருமில்லை. வெளிச்சோடிப் போயிருந்தது. பஸ் நிறுத்தியிருக்கிறது. இந்த ஓட்டுனரும் கண்டக்டரும், எங்கு போய் தொலைத்தார்கள்?

தலை கிறுகிறுக்கத் தடுமாறி, பதை பதைத்து சுற்றும் முற்றும் பார்த்தேன். பீதியும், அச்சமும் அடிவயிற்றைக் கவ்வியது. உள்ளேயிருந்த பயணிகள் எல்லோரும், தங்கள் பைகளைச் சுமந்தவண்ணம் வரிசையில் தெருவில் நின்றார்கள். ஆமிக்காரர் மூவர், ஒவ்வொருவராக பயணிகளைப் பரிசோதித்துக் கொண்டிருந்தார்கள். அவசரமாக எழுந்து போய் வரிசையில் ஒட்டி நிற்பது சங்கை, என்ற உணர்வோடு எழுந்து நிற்க முனைகையில், ஒரு இராணுவ வீரன் சிங்களத்தில் கடுமையாகத் திட்டியவாறு, என்னை நோக்கி வந்தான்.

கால்கள் இரண்டிலும் திமிர்த்தலுடன் கூடிய பொல்லாத

வலி. எல்லாம் கும்பகர்ண நித்திரையால் வந்த சாபக்கேடு. நான் மட்டும் பஸ்ஸுக்குள் இவ்வளவு நேரம் மந்தியைப் போல் குந்தியிருந்திருக்கிறேன். இனி என்ன சங்கடங்களை எதிர்கொள்ள வேண்டி வருமோ? போராளிகள், குண்டுக் கலாசாரத்தினால், முழுநாட்டையே உலுப்பிக் கலைத்துக் கொண்டிருந்த காலப் பரப்பு அது. இராணுவச் சோதனைகளும், கெடுபிடிகளும் நிறைந்திருந்தன.

"உனக்கு மட்டும் வேற சட்டமா? கீழே இறங்கி வரமாட்டாயா? நீ என்ன பெரிய ஆளா? கீழே இறங்கி வா ஓய்!" ஆமிக்காரன் உறுமினான்.

எனக்குத் தொண்டை வரண்டது. நாவு தடுமாறியது. "என்னை மன்னிக்க வேண்டும். நான் ஒரு நோயாளி. அசதியில் தூக்கம் போயிட்டுது. என்னை நம்புங்கள், பிளீஸ்!" என்று நெகிழ்வாக சிங்களத்தில் விடை சொன்னேன்.

இவர்களிடம் மிருகத்தனமாக அடிவாங்கிச் சாகும் மிருக பலம் என்னிடம் சிறிதுமில்லை என்பது எனக்கு மட்டும் தெரிந்த யதார்த்தம்.

பாதையில் நின்று சுற்றுமுற்றும் பார்த்தேன். எதிர்திசையில் லேக் ஹவுஸ் கட்டிடம் விறைத்து நின்றது. அடையாள அட்டையை துருவினேன். அதை முன்கூட்டியே கையில் எடுத்து வைத்துக் கொள்வது உசிதம் அல்லவா? திடீர் அதிர்வில் நிலைகுலைந்துவிட்டேன்!

அடையாள அட்டையைக் காணவில்லை.

பொக்கட்டிலும், பையிலும் துருவித் துருவி தேடியாயிற்று. பலன் பூஜ்யம்.

எங்கு தான் தவறவிட்டேன். கலையகத்தில் வவுச்சருக்கு காசெடுக்கும் போது கையில் இருந்ததே. எப்படித் தொலைந்து போயிருக்கும்? வரவேற்பு மண்டப மேசையில் மறதியாய் விட்டுவிட்டேனா? தொலைந்த பொருள் நினைவு தீட்சண்யத்தில் சிக்க மறுக்கிறது. எனது கால்களிரண்டும் கிடுகிடா நடுங்கத் தொடங்கிவிட்டன. இது என்ன சோதனை? அடையாள அட்டையின்றி இவர்களிடம் மாட்டிக் கொண்டு, என்ன பாடுபடப் போகிறேன்?

பசித்த வயிற்றுக்கு சாப்பிட்டுவிட்டு அப்படியே போய் பூபாலசிங்கம் புத்தகசாலையில் சஞ்சிகைகள் சிலவற்றை வாங்கிக் கொண்டு வீடு போய் சேரலாம், என்ற எண்ணமெல்லாம் மண்ணாய் போய்விட்டதே! கொழும்புக்கு வரும்பொழுது, கணையாழி காலச்சுவடு, தாமரை, மல்லிகை என்று எனது இரசனைக்கேற்ற இலக்கிய இதழ்களை வாங்குவது வழக்கம்.

இவற்றை படிக்கத் தவறினால், நெஞ்சுக்குள் ஏதோவொரு இழப்பு, நெருடல். வயிற்றுப் பசி மட்டும் தீர்ந்தால் போதுமா? அறிவுப் பசியை, இலக்கிய தாகத்தை தீர்க்க வேண்டுமே. இந்த சிக்கலில் இருந்த எப்போது விடுபடுவேன்?

என்னை முறைத்துப் பார்த்து விட்டு, "அடையாள அட்டை எங்கே?" என்று ஆமிக்காரன் கேட்டான்.

"காலையில் வரும் போது கொண்டு வந்தேன். இடையில் எங்கோ தவறிவிட்டது" என்று பதிலிறுத்தேன்.

பரிதாபம் இழைந்த குரலில். சிகப்பாய் புஜத்தில் மூன்று நட்சத்திரங்கள், மினுங்கும் சீருடை உத்தியோகத்தர், ஒரு எள்ளல் தோரணையில் என்னை சீற்றத்தோடு முறைத்தார். "உன்ன கேம்புக்கு கொண்டு போய் விசாரிக்கிற முறையில விசாரிச்சா உண்மை வெளிவரும்" எனக் கூறினான். அவனது பயங்கரத் தோற்றம் பீதிகொள்ளும்படியாக இருந்தது.

நான் மிகவும் நளினமாக எனது நிலையினை எடுத்துக் கூறினேன். "நான் கிரிமினல் அல்ல. சமூகத்தால் மதிக்கப்படு கின்ற ஒரு பிரஜை." எனது விசிட்டிங் கார்டினை அவர் கையில் கொடுத்தேன்.

அதில் கலாபூஷணம், சமாதான நீதிவான், கவிஞர், எழுத்தாளர் என்றெல்லாம் பொறிக்கப்பட்டிருந்தும் என்ன பயன்? சந்தேகம் தீர்ந்தபாடில்லை. அவர் நெஞ்சிலிருந்து ஈரம் சிறிதும் பிறக்கவில்லை. "இல்லை! உன்னை கேம்பிற்கு கொண்டு போகப்போறோம்!"

நான் நெஞ்சுடைந்து பத்திரிகையாலய ஏறுபடிகளை விரக்தியாய் வெறித்தேன். திடீரென ஞாபகத்திற்கு வந்த ஒரு விடயத்தை அவர்களிடம் கூறினேன். "அதோ தெரியும் பத்திரிகை யாலயத்தில், தமிழ் தினசரியொன்றில் பிரதியாசிரியராகப்

பணிபுரிபவர் எனது நண்பர். நீங்கள் அவரிடம் என்னைப் பற்றி விசாரித்தறிந்து விட்டு என்னை எங்கு வேண்டுமானாலும் கொண்டு போங்கள்" என்றேன்.

வேதாளம் முருங்கை மரத்திலிருந்து சற்று கீழிறங்கு வதாக எனக்குத் தெரிந்தது. நானும் ஆமிக்காரர் ஒருவரும் பிரதியாசிரியர் சூரியனின் வருகைக்காக, கீழே வரவேற்பு மண்டப வாயிலில் காத்திருந்தோம்.

சூரியனை அரபு மொழியில் எப்படி அழைப்பார்களோ அதுதான் அவரது நாமம். அவர் மிகப் பிரசித்தமான பன்முக ஆளுமை கொண்ட எழுத்தாளர். சமாதானம் மலர, வெள்ளிச் சிறகசைக்கும் வெண்புறாவை நெக்குருகும் பாடலினால் அழைத்து, எல்லோரினதும் நெஞ்சங்களை ஆகர்சித்துக் கொண்டவர். உதட்டில் நெளியும் புன்முறுவலோடு கண்ணாடி அணிந்த மெலிந்த சரீரவாகு கொண்ட சூரியன் மாடிப்படி களிலிருந்து கீழிறங்கிக் கொண்டிருந்தார். ஓடிச்சென்று அவரது கைகளைப் பற்றிக் கொண்டு எனது நிலையினை விளக்கினேன். கீழிறங்கி பாதைக்கு வந்து அந்த மூன்று நட்சத்திர உத்தியோகத்தரோடு சிறிது நேரம் சிங்களத்தில் வாதம் புரிந்தார்.

பத்திரிகையாளனோடு எதற்கு வீண்வம்பு, என்ன ஞானோதயமோ தெரியவில்லை, மூன்று நட்சத்திரம் என்னைப் போக அனுமதித்து, போன உயிர் திரும்பி வந்ததில் மகிழ்ந்து நண்பன் சூரியனை ஆரத் தழுவினேன்.

அவர் எனக்கு ஆறுதல் கூறினார்.

"எச்சந்தர்ப்பத்திலும் மனம் தளரக்கூடாது. மனதில் உறுதி வேண்டும் என்ற பாரதியின் பாடல்வரிகளை மறந்து போனீரா?" என்று என் தோளில் கையழுத்திக் கேட்டார். இலக்கிய வானில் தன்னிகரற்று சுடர்ந்த சூரியனின் திடீர் இழப்பு, இன்றும் மனதில் துயரங்களை சொரிகிறது. ■

**- எம்.எச்.எம்.ஷம்ஸ் நினைவாக,**
**தினக்குரல்**
**16.1.2005**

# நிஜங்களின் வலி

ஆற்றின் மேற்பரப்பில் சிற்றலைகள் நெளிந்தன. மேகங்களைக் கருவுற்ற வானம், ஒளிவெள்ளத்தில் மிதந்தது. மேற்கு உதயம் சிந்திய சிதறல்களால் நதி, குழைந்து வண்ணங்களைப் பிரசவித்தது. கிராமத்து நதிச் சூழல், மனதை வெகுவாக ஈர்த்திழுக்கும். ஆற்று நீரில் குளிப்பதென்றால், எல்லையில்லா பேரானந்தம். ஒவ்வொரு விடியலிலும் நீரில் மூழ்கி குளித்தபின்தான் தொழிலுக்குப் புறப்பட்டுச் செல்வேன்.

ஒரு தெருவைத் தாண்டி, இங்கு வந்து புனலாடிச் செல்வது எனக்கு அலுப்பைத் தரவில்லை. காட்சிகளில் ஒன்றி பெரிதும் மனம் லயிப்பேன். கரும் நிறத்திலான, சிறிய பறவைகள், வேகமாக வந்து, நீரின் மேல் விளிம்பில் மூழ்கிக் குளியல் நடத்தி, பின் மேல் நோக்கியெழுந்து விருட்டெனப் பறந்து சிறகடித்துச் செல்லும்.

குளிக்கவென வந்திறங்கும் பெண்கள் மார்புக்கட்டோடு படித்துறையில் நின்று, வாய் ஓயாது ஊர் வம்பளப்பது இங்கு நித்திய காட்சித் தரிசனங்கள். கரைகள் தோறும் நாணல் புதர்கள், செழித்து வளர்ந்து, மண்டிக் கிடக்கும். எதிர்திசையில் காட்டு மரங்களும், கூனற் தென்னைகளும், காற்றில் கலந்து தலையசைக்கும்.

மூலை மணற்பரப்பில் உமர் வாத்தியார் சோகச் சுமையுடன், குந்தியிருந்தது எனக்குப் பெரும் வியப்பை அளித்தது. அவரது முகத்திலின்று துயரத்தின் வடு, விசாலமாய் இறுகிக் கனத்திருந்தது.

எப்போதும் கலகலப்பாய் இருக்கும் மனிதர் இன்றேன் உற்சாகமாய் இல்லை? என்பது என்னுள் கேள்விக்குறியாயிற்று.

"என்ன வாத்தியார் இன்னும் குளிக்கல்லியா?"

"குளிக்கணும்.....!"

ஒற்றை வரியில் சன்னமாய் வந்து விழுந்தது, வார்த்தை. அவரின் உதட்டோரத்து இளநகை எங்கோ தொலைந்திருந்தது. எதையோ இழந்துவிட்ட தவிப்பில் அசையும் நீர்ச்சலனங்களை இருண்மையாக வெறித்தார்.

அவருக்கும், எனக்குமான ஆரம்ப பரீட்சயமே இந்த ஆற்றங்கரைதான். பழகுவதற்கு மிகவும் அந்நியோன்யமானவர் அவரது நல்இயல்புகள் பற்றி நான் நிறையவே அறிந்திருந்தேன். பிறர் மீது நேயங்காட்டுவது, உதவிகள் புரிந்து சகமனிதனின் நெருக்கடி தீர்ப்பது போன்ற குணாதிசயங்கள் அவரிடம் மேலோங்கி இருந்தன. இயந்திரத்தனம் மலிந்துவிட்ட இன்றைய மனித இருப்பில் இப்படியான நேயம் மிக்கவர்களை மிக அபூர்வமாகத் தான் பார்க்க முடியும்.

அடிக்கடி என்னை, இல்லத்திற்கு அழைத்துச் சென்று உபசரித்து நட்பு பூண்டிருக்கிறார். உமர் வாத்தியாரின் மளிகைக்கடை வாடிக்கையாளரினால், எப்போதும் களை கட்டும். இந்தக் கச்சோடத் தளமும், வருவாயும் பொருளாதார ரீதியில் அவருக்கு நிறைவை தந்திருக்கும் என்பது என் கணிப்பு.

நல்ல வருவாய், அழகான மனைவி, சிக்கலில்லாத சிறிய குடும்பம். அன்றாட வாழ்விற்கு இனிமை சேர்ப்பதற்கு இதை விட வேறென்ன வேண்டும்?

அவர் மனைவி ஜெஸீமா, அவரை விட ஒரு ஐந்து வயது இளையவள். வறுமைப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவள். என்றாலும் அவளுக்கு அவர் எந்தக் குறையையும் வைக்க வில்லை. தம்பதியர் இருவரின் அன்பும், நெருக்கமும் பிறரைப் பொறாமைப்பட வைக்கும். அவர் அவள் மீது உயிரையே வைத்திருந்தார். மணமாகி இரண்டு வருடம் கழிந்தும், இன்னும் மசக்கைக்கான ஒரு சமிக்ஞை இன்னும் அவளிடமிருந்து வரவில்லை. உமர் வாத்தியாரின் பாரம்பரிய குடும்ப வேர், கேரள மண்ணில் படர்ந்திருந்தது. இளவயதிலேயே அங்கிருந்து வந்தவர். மீண்டும் சொந்த நாட்டுக்கு திரும்பவே இல்லை. அவரது உரையாடல் தொனியில், மலையாள நெடி கலந்திருக்கும்.

நாற்பது வயதான அவருக்கு உருண்டு திரண்ட கட்டுமஸ்தான சிவந்தமேனி, கருங்காலிக் கட்டை போல்,

உரமேறிய திண்மையில், எப்போதும் தேகம் பளபளக்கும். இன்னமும் தவறாமல் உடற்பயிற்சிகள் செய்வார்.

சீனடி, சிலம்புவீச்சு, மல்யுத்தம் போன்ற பாரம்பரிய வீர விளையாட்டுக்களை நுட்பமாகவே கற்றிருந்தார். மனிதனது அந்தரங்க நரம்புகளைத் தட்டி வீழ்த்தும் மர்மஅடி சூட்சுமங்களை தான் கற்றிருப்பதாகக் கூறுவார். ஆனால், இது வரை அந்த அசகாய மர்ம அடியை யார் மீதும் பிரயோகிக்காததிற்கு காரணம் தன் உயிருக்கு ஆபத்து வரும் வேளையில் மட்டுமே, அதைப் பயன்படுத்துவதாக தன் குருவிற்கு, வாக்கு கொடுத்துள்ளாராம். அந்தக் கலைகளை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற விருப்பத்தில் சில இளைஞர்களுக்கு இரவில் பிரத்தியேக பயிற்சிகள் அளித்து வந்தார். அவர்களில் நௌசாத் என்ற வாலிபன் எல்லா வித்தைகளையும் திறம்படவே கற்றுவருவது குறித்து அகமகிழ்ந்தார். அவனிடத்தில் அதீத அக்கறை காட்டி வந்தார். நௌசாத் கடையிலும், வீட்டிலும் அவரது வேலைப்பளு குறைய உதவிகள் செய்தான். இதனால் அவரது குடும்பத்தில் ஒருவனாக ஐக்கியப்பட்டிருந்தான்.

"ஏன் இப்படி கவலையாக இருக்கிறீங்க?" என்று உமர் வாத்தியாரிடம் கனிவோடு கேட்டேன்.

அவர் என்னில் உற்சாகமற்ற ஒரு பார்வையை பதித்து விட்டு, மலையாளம் கலந்த தமிழில் விடை கூறினார்.

"நாளை நிங்கள் எண்டே வீட்டுலு வரணும்! நமக்கு கொரச்சி சம்சாரிக்கான் உண்டு." அவரது வேண்டுகோளின் உள்மடிப்பு எனக்குப் புரிபடவில்லை. சொந்த விடயங்கள் குறித்து ஏதும் பரிமாறிக்கொள்ளவாக இருக்கும் என நினைத்தேன். அன்று முழுவதும் கடை அடைத்திருந்தது. வீடும் வெறிச்சோடிப் போயிருந்தது.

இருவரும் வழக்கமாக அமரும் முற்றத்து மாமர நிழலில் உட்கார்ந்தோம். நமக்குள் நிலவிய பூதாகர மௌனத்தைக் கலைத்தேன்.

"ஏன் வாத்தியார், ஒரு மாதிரிய இருக்கீங்க, வீட்டில் யாரும் இல்லையா?"

“இருந்தவள் நேற்று பாதி ராத்திரி ஆ நௌசாத் பட்டியோடு இவடேயிருந்து சாடிப் போயிட்டாள்.” என் தலையில் பாறாங்கல் ஒன்று விழுந்த அதிர்ச்சியில் தடுமாறினேன்.

உமர்வாத்தியார், மாமரத்து இராட்சதக் கிளைகளை ஊடறுத்து வெறித்தவாறு கூறத் தொடங்கினார்.

“அதிகாலத்து உறக்கம் விழிச்சி நோக்கும்பளு, ஜெஸீமாவைக் கண்டில்லா! எல்லா ஸ்தளங்களிலும் தெரக்கி, நோக்கிட்டும், அவளில்லா. முன் வராந்தாவிலு உறங்கிக் கிடந்த நௌஷாத்தும் இல்லா! பீரோவிலுமுண்டு, துணியொக்க சிதறிக் கிடந்து, ஆ நன்றி கெட்ட பட்டிகள் ரண்டும், இவடயிருந்து ஓடிப் போயிருக்கயா. ஆத்தியம் ஞான், இதை அறிஞ்சிருந்தேனெங்கில், ஆ, துரோகியிண்ட விலாவில தட்டிக் கிடத்தியிருப்பேன். அவள, ஞான், எங்கனயெல்லாம் விசுவசித்து நேசிச்சு. அவள் இங்கன என் ஹிருதயத்திலு தீ, அள்ளிக் கொட்டிட்டு சாடிப் போயிட்டல்லோ. இனி ஞான், எங்கன மனுஷிரிண்டே முகத்தை நோக்குந்தது? ஸ்திரீகள் இங்கன நன்றிகெட்ட ஜென்மங்களா?” அவர் துயரத்தின் அழுத்தத்தில் நின்று நெஞ்சுருகி விம்மினார்.

“வாத்தியார்! மனிதனது வாழ்க்கையில், நன்மை, தீமை, எல்லாம் தான் நடக்கும். மனதை தளர விடாதீங்க. தூர நோக்கில்லாமல் திடீரென முடிவெடுக்கிற பலவீனம் சில பெண்களிடத்தில் உண்டு. ஒரு வேளை, ஜெஸீமா ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டுமென்ற ஆசையில சபல புத்திக்கு அடிமையாகி இருக்கலாம் அல்லவா?”

“அதெங்கன நடக்கும்? நிங்களுக்கு ஆவிஷயம் அறிஞ்சூடா, அல்லே? ஜெஸீமா கர்ப்பம் உண்டாகிக் கிடந்தா, மூணுமாசம், ஆ சந்தோஷத்தில் ஞான் களிச்சுப்போய் இருந்தப்பலானு ஈ இடி மறிஞ்சி விழுந்துது. இப்போல், எனிக்கொரு சம்சியம் உண்டு. அவளுடே வயிற்றிலே வளருந்த கருவுக்கு பந்தக்காரன் ஞானா? நௌஷாத்தா? என்பதானு.”

“மனதை சஞ்சலப்படுத்திக் கொள்ளாமல் பொறுமையாக இருங்கள் வாத்தியார். உங்களுடைய நல்ல மனதிற்கு ஒரு குறையும் வந்துவிடாது” என்று ஆறுதல்கள் கூறி அவரது மனதை சமநிலைக்கு கொண்டுவர முயன்றேன்.

துன்ப துயரங்களைத் திடீரென சுமந்து வந்து, ஈவிரக்கமின்றி மனிதர் மீது கொட்டிவிட்டுப் போகிறது காலம். அதே காலம்தான், எரியும் ரணங்களுக்கு பின்பு வந்து மருந்து தடவி ஆறவைக்கிறது. உமர் வாத்தியாரின் தீக்காயங்கள், ஆற சிறிது காலம் பிடிக்கலாம்.

இப்போது அவர் துன்பங்களை மறந்து முன்புபோல், கடையைத் திறந்து வியாபாரம் செய்கிறார். தன் நெஞ்சின் வடு ஆற பிறரிடம் மேலதிக வாஞ்சை செலுத்துகிறார். கடைக்கு வரும் சிறு பிள்ளைகளுக்கு இலவசமாக இனிப்புகள் வழங்கி அன்போடு தலையைத் தடவி ஆறுதல் பெறுகிறார்.

வறுமைப்பட்ட குடும்பப் பெண்கள் அவரிடம் வந்து, கடனுக்குச் சாமான் வாங்கி, வயிற்றுப் பசி தணிக்கிறார்கள். அவற்றில் சிலதே அபூர்வமாக மீளக் கிடைக்கும். திடீரென யாரும் நோய்வாய்ப்பட்டால், வைத்தியச் செலவிற்காக உமர் வாத்தியாரிடம் பணம் கேட்டுப் பெறுவார்கள். இவர் செய்யும் உதவிகளால், அப்பிரதேச மக்கள் இவரை ஒரு நேயமுள்ள மனிதர் என விதந்து பேசுவர்.

அண்மைக் காலங்களாக அவருக்கு ஒரு புதிய தோழனுடனான நட்பு ஏற்பட்டுவிட்டது. எங்கிருந்தோ அடிக்கடி வரும் ஒரு கறுப்பு நிற நாய், வாலை ஆட்டிக் குழைந்து முனகி இவர் மீது பிரியம் செலுத்தும். உமர் வாத்தியார் தயவில் நாய் ஜிம்மிக்கு, மூன்று வேளை ஆகாரம் தவறாமல் கிட்டும். பகல் பொழுதுகளில் ஊரைச் சுற்றி விட்டு வந்து, இரவுக் காலங்களில் அவரது வீட்டுத் தோட்டத்தை காவல் காக்கும்.

இப்போது ஒரு மிருகமாவது தன் மீது அன்பு செலுத்த எஞ்சியிருக்கிறதே என்று அவர் மகிழ்வடைந்தார். தொடர்ந்து மூன்று நாட்களாக ஜிம்மி தோட்டப்பக்கம் வராமற் போனது, அவருக்குப் பெரும் கவலையை அளித்தது. தான் நேசிக்கும் ஜீவன்கள் எல்லாம் தன்னை தனிமைப்படுத்தி விட்டுப் போவதான உள்ளுணர்வில் கலக்கமுற்றார்.

அது ஒரு பகல்பொழுது, ஜிம்மி ஆடியசைந்து சோர்வுடன் வருவது தெரிந்தது. அதன் விலா எலும்புகள் துருத்திக் கொண்டு மிதந்தன. கண்கள் வித்தியாசமாகக் காட்சியளிக்க வாயிலிருந்து

எச்சில் ஒழுகிக் கொண்டிருந்தது. சுகக்கேட்டினாலோ, அல்லது பசியினாலோ, சோர்ந்து போய் வருகிறதென்று அதன் மீது பரிதாபப்பட்டு, வழக்கம் போல் "ஜிம்மி" என்று விளித்தார். அது முன்புபோல் உற்சாகமாக வாலை அசைக்கவில்லை. பார்வையில் அந்நியத்தனம் குடிகொண்டிருந்தது. உணவு கொண்டுவந்து தட்டில் வைத்து உபசரித்தார். அது முகர்ந்து பார்த்துவிட்டு அவரை விகற்பமாய் வெறித்தது. சில கணங்களே சென்றிருக்கும். வன்மம் கொண்டு அவர் மீது பாய்ந்து கீழே விழுத்தாட்டிக் கடித்துக் குதறியது.

தப்பிக்க வழிதெரியாது உமர்வாத்தியார் கூக்குரலிட்டார். அவரது மேனியெங்கும் குருதிக் காயங்கள். அயலவர்கள் விரைந்து வந்து, "பைத்திய நாய்! பைத்திய நாய்!" என்று கத்தியவாறு அதனை அடித்துத் துரத்தினர். அரை மயக்க த்திலிருந்த உமர் வாத்தியாரை, வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். "விசர் நாய் கடுமையாகக் கடித்திருக்கிறது. தொப்புளைச் சுற்றி ஊசி போட வேண்டும்" என்று வைத்தியர்கள் கூறினர்.

ஒரு மாத காலம் வைத்தியசாலையில் அவரைத் தங்க வைத்து சிகிச்சைகள் தொடர்ந்தன. மருத்துவமனை சென்று அவரைப் பார்த்து ஆறுதல் கூறிவந்தேன். சில நாட்களில் கட்டுமஸ்தான உடல்வாகு கொண்ட அவர், மெலிந்து ஷீணித்து வீடு திரும்பியிருந்தார். மிகவும் தாழ்ந்த தொனியில் என்னோடு உரையாடினார்.

"இது ஒரு நன்றியில்லா லோகமப்பா! அன்புக்கு பகரமாய் தீமைதான், வந்து சேருகிறது. பெரும் ஞானிக்ள ஒக்க ஈ லோகத்தில் அனுபவிச்சது, இதானு! இவடே ஜீவிக்கிந்த மனுஷ்யரிடத்தே அற்பமும் நேயமில்லா! இனி ஞானும் ஒரு புதிய மனுஷனாயிட்டு ஜீவிக்கான் தீர்மானிச்சு" என்று ஒரு வேதாந்தியைப் போல் பிடிப்பற்ற தோரணையில் வேதனையோடு கூறினார்.

நாளடைவில் அவரது நடத்தையில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருந்தது. பிறரைப்பற்றி சிறிதும் கவலைப்படாத, இயந்திர மனிதனாக, மாறிப் போயிருந்தார். இப்பொழுதெல்லாம் சிறு பிள்ளைகளோடு வாஞ்சை காட்டுவதை நிறுத்தியிருந்தார்.

கடன் யாருக்குமில்லை, ரொக்கத்திற்கு மட்டுமே வியாபாரம்! என்று கடையில் போர்டு மாட்டியிருந்தார். யாரும் வந்து அவசரத்திற்கு உதவி கேட்டால், உதட்டை பிதுக்கி, கையை விரித்து விடுவார். அவரது திடீர் மாற்றம் என்னை ஆச்சரியப்பட வைத்தது. ஏனிந்த திடீர் மாற்றம்? என அவரிடம் வினாத் தொடுத்தேன்.

"இப்போல் ஞான், இரக்கமில்லா இயந்திர மனுஷன்! எண்டே இப்பத்தய லோகம், வளரே, சுகமானது!" என்று வார்த்தைகளை உதிர்த்துவிடடு, பற்றற்ற ஒரு துறவியைப் போல் மௌனம் சாதித்தார். அவரது இந்த மாற்றம் எனக்கு உடன்பாடற்று இருந்த போதும், அவரைப் பொறுத்தமட்டில், அந்த அனுபவ யதார்த்தத்தில் நியாயம் இருப்பதாக உணர்ந்தேன். ■

**- இலண்டன் பூபாள ராகங்கள்,**
**2004ஆம் ஆண்டு நடத்திய**
**உலகளாவிய ரீதியிலான**
**சிறுகதைப் போட்டியில்**
**பணப்பரிசும், பாராட்டும்**
**பெற்ற படைப்பு இது.**



**பஷீர்** என்ற பெயரைக் கேட்டதும் இலக்கிய உலகின் எண்ணம் நேரடியாகச் செல்வது மலையாள இலக்கிய ஜாம்பவான் வைக்கம் முஹம்மது பஷீரை நோக்கித்தான். அந்த பஷீரின் கேரளப் பரம்பரையிலிருந்து, இலங்கை மண்ணுக்கு கிடைத்த சிறந்த படைப்பிலக்கியவாதி தான், மு.பஷீர்.

சிறுகதை, கவிதை, ஆய்வு என முத்திரை பதித்துள்ள இவர், வாழ்வில் தொடரும், இடர்துன்பங்களுக்கு மத்தியிலும் தொடர்ந்தும் இலக்கியப் பங்களிப்பு செய்து வருகிறார். தந்தைவழி கேரளத்தோடு தொடர்புடைய பஷீரின் கதைகளில் மலையாள நெடி வீசுவதை நன்றாகவே உணரலாம். இவர் அறுபதின் முற்பரப்பில் இலக்கியப் பிரவேசம் செய்த போதும், 68ஆம் ஆண்டிலேயே முதற் சிறுகதை வீரகேசரியில் பிரசுரமானது. மு.பஷீர், 50க்கு மேற்பட்ட சிறுகதைகளையும், கவிதை, கட்டுரைகளென நூற்றுக்கு மேற்பட்ட ஆக்கங்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். பஷீரின் படைப்புகள் தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் பரிசுகளைச் சுவீகரித்துக் கொண்டன. இவர், "மீறல்கள்", "தலைமுறை இடைவெளி" ஆகிய இரு சிறுகதை நூல்களின் சொந்தக்காரர்.

"நிஜங்களின் வலி", எனும் 12 சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு இப்போது வெளியாகிறது. இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில், "வாழும் கதைகள்" எனும் நிகழ்ச்சியினை நான்காண்டுகளாக வழங்கி வந்துள்ளார். 1999இல் அரசின் கலாபூஷண விருதைப் பெற்ற இவர், கொழும்பில் நடை பெற்ற உலகத் தமிழ் இலக்கிய இஸ்லாமிய மகா நாட்டில் சிறந்த படைப்பாளிக்கான விருதையும், பொற்கிளியையும் பெற்றார். மானுட நேயப் படைப்பிலக்கியவாதியான மு.பஷீரின் கதைகள், கலைத்துவ மிக்கவை, யதார்த்தமானவை.

- **எம்.ஏ.எம். நிலாம் (தினக்குரல்)**

**மீரா பதிப்பக வெளியீடு - 55**